KALKI 23.2.2003
ரூ.6.00

# கல்கி












# கல்கி

23.2.2003





**4** காவிரிக் கரையில் திரண்டது காவி—திகைக்கும் திருச்சி **8** உதய சூரியனும் ஆரஞ்சுக் கலரும்—விளம்பர கலாட்டா **36** இன்ஜினியரிங் அட்மிஷன்—மனித உரிமைப் பிரச்னை—பெற்றோர்களும் கவனிக்க... **33** யூகிக்கு உடான்ஸ் கோப்பை—சிக்ஸர் சந்திப்ப **35** இதெல்லாம் தேவையா?—சர்ச்சையைக் கிளப்புகிறார் பாரதி பாஸ்கர் **52** சின்னத்திரை சீரழிவு—கே. பாலசந்தர் **86** அய்யோ... என்னாச்சு இந்த இளைஞருக்கு..? பரட்டித் தெரிந்து கொள்ளுங்க!

## ரிமோட்

'மதுரை மீனாட்சியம்மன் கோவில் பிராகாரத்தில் அருள்பாலிப்பவர் பலரும் குறிப்பிடுவது போல் முக்குறுணிப் பிள்ளையார் அல்ல. அவருக்குத் தேவைப்படும் நைவேத்தியத்தின் அளவின் காரணமாக அந்தப் பெயர் வந்ததாகக் கூறுவதும் தவறு. முக்குணிப் பிள்ளையார் என்ற பெயர்தான் இப்படி மருவி விட்டது' என்றார் அந்தக் கோயில் தலைமை அர்ச்சகர். ஜெயாவுக்கு அளித்த பேட்டியில், முக்குணி என்றால் மூன்று வழிகள் இணையும் இடத்தில் இருப்பவர் என்றும் கூறினார். (முச்சந்தி விநாயகர்!)



# கலகலப்பான பூதம்!

ஜெயா டி.வியின் 'காலை மலர்' பகுதியில் "இலக்கிய வீதி" இனியவனின் பேட்டி. வாசகர்கள் என்ற பதத்துக்குப் பதிலாக 'சுவைஞர்கள்' என்ற வார்த்தையை அவர் தொடர்ந்து பயன்படுத்தியது சுவை. தங்கள் அமைப்பின் கூட்டங்களில் சமூகத்தைக் கெடுக்கும் நூல்களைத் திறனாய்வு செய்ததில்லை என்றாலும், அப்படிப்பட்ட நூல்களை எழுதிய பிரபல எழுத்தாளர்களை அழைத்து வாசகரின் கேள்விகளுக்குப் பதிலளிக்க வைத்ததுண்டு என்றார். அதற்குப் பின் அவர்களின் எழுத்துப் போக்கில் மாறுதல் இருந்ததா தெரியவில்லை.




'ஸ்லாம் டங்க்' (ஸ்டார் ஸ்போர்ட்ஸ்) என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வழக்கமான கூடைப் பந்தாட்டம்தான். ஆனால் இது குழு விளையாட்டு அல்ல. ஒருவர் ஒருவராகப் பங்கு கொள்கிறார்கள். அதிலும் ஒரு வினோதம். நேரடியாகவே (ஏதோ அஞ்சல் பெட்டியில் கடிதத்தைப் போடுவதைப் போல) பந்தைக் கூடைக்குள் போட வேண்டும் என்பது நிபந்தனை. அதாவது, அந்த அளவுக்கு மேலெழக் கூடிய மனிதர்கள் மட்டுமே கலந்து கொள்வார்கள்.

'உங்களைப் பற்றி ஜனங்க என்ன பேசறாங்க தெரியுமா?' என்று கேட்டார் ஊர்வசி. 'கேவலமாகத் தான் பேசறாங்கன்னு நினைக்கிறேன். செக்ஸ் கல்வி பற்றிய நிகழ்ச்சியைப் பொறுத்தவரை நான் ஒரு பயனுள்ள பரிசோதனையைச் செய்திருக்கிறேன். அது நான் விரும்பிய பலனைக் கொடுத்ததா என்பதைக் காலம்தான் நிர்ணயிக்கும்' என்றார் டாக்டர் மாத்ருபூதம். 'டேக் இட் ஈஸி' (ராஜ்) கலகலப்பாகத்தான் தொடங்கியிருக்கிறது.

ஐயகோ, இது கதையல்ல நிஜம்! ஒருவனுக்கு ஒருத்தியின்மீது காதல். அந்தக் காதலைப் பற்றி அறியாத அந்தப் பெண்ணுக்கு வேறொரு இடத்தில் திருமணமானது. கணவனுக்கு அந்தக் காதலன் ஒருவிதத்தில் உறவு.

எனவே காதலன் அந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தான். அவனது 'தெய்வீகக்' காதலை அறிந்து கொண்டதும் கணவன், மனைவியை அவனுக்கு மனப் பூர்வமாக விட்டுப் கொடுத்து விட்டார். 'என்னை ரிலாக்ஸ்டாக இருந்து விட்டு வா என்று அந்தக் காதலனுடன் ஒரு வாரம் வெளியூருக்கு அனுப்பினார் என் கணவர். ஆனால் வந்து பார்க்கும்போது என்மீது ஓடிப் போனவள் என்ற முத்திரைதான் விழுந்திருந்தது' என்றாள் அந்த மனைவி! கணவன் மூலமாக இரண்டு குழந்தைகளுக்கும் அவர் தாயாகியிருந்தார். இதற்கு நடுவே அந்தக் காதலன் வேறொருத்தியைத் திருமணம் செய்து கொண்டு அவள் மூலம் இரண்டு குழந்தைக்குத் தகப்பனாகி விட்டான். 'இருவரோடும் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்தத் தயார்' என்று காதலன் 'பெருந்தன்மை' காட்ட, அவனது முதல் மனைவி இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. (பின்னே?) கூச்சமில்லாமல் திரையில் தோன்றினார்கள் காதலர் – காதலி, மனைவி – கணவர் ஆகிய மூவருமே (நிகழ்ச்சியின் வெற்றி!). அது சரி, மேலே விவரித்த இடியாப்ப சிக்கலுக்கு லட்சுமி



வழங்கிய நீதி என்ன?

'சட்டம் ஒரு பக்கம் இருக்கட்டுங்க. மனிதாபிமானம்னும் இருக்கே. எதையுமே சரி தப்புன்னு சொல்ல நாம யாரு? இப்ப முடிவெடுக்க வேண்டியது மாரிமுத்து (காதலன்)தான்' என்றார். தெருவுக்கு ஒரு மாரிமுத்து கதை இருந்தால் தேசமே குட்டிச் சுவர்!

'**கூ**ழுக்கும் ஆசை, மீசைக்கும்தான்' என்றால் இப்படித்தான் ஆகும். தனியாக ஒரு விக்கெட் கீப்பர் இருப்பதை விட, பேட்ஸ்மனே அப்படி இருந்தால் நல்லது என்று ராகுல் டிராவிடை டூ – இன் – ஒன்னாக்கினார்கள். ஹாலந்தோடு நடை பெற்ற போட்டியில், ஸ்ரீநாத் அடித்த பந்து மட்டையில் பட்டு அருகில் வந்ததும் டிராவிட் அதை நழுவ விட 'ஒரு முழுமையான விக்கெட் கீப்பராக இருந்திருந்தால் அதை ஒரு போதும் கோட்டை விட்டிருக்கமாட்டார்' என்று விமர்சனங்கள் பறந்து வந்தன. பாவம்!

– ஆதர்ஷ்


கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2234 5622, 23, 24
தொலைநகல் :
044 - 2234 5621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited, Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

# யானைக்கு மதம்



• மாநாடு மேடையில்...

திராவிடக் கட்சிகளின் மாநில மாநாடுகளுக்கு இணையாக பிரம்மாண்ட அளவில், திருச்சி மாநகரில் தமிழக இந்து இளைஞர் முதல் மாநில மாநாட்டை நடத்திக் காட்டியுள்ளது விசுவ ஹிந்து பரிஷத்.

''எக்காரணம் கொண்டும் இனி இந்தியாவில் இந்துக்களின் ரத்தம் சிந்தப்பட்டுவிடக் கூடாது. இது ஒரு இந்து நாடு'' என உரக்கப் பேசிய ஆர்.வி.பி.எஸ். மணியன், ''இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவும் தயாராக இருக்க வேண்டும்'' என உஷார் படுத்திய அசோக் சிங்கால், ''அயோத்தியில் ராமர் கோயில் கட்ட மத்திய அரசு அனுமதி தர மறுக்குமேயானால், இந்தியாவில் இருக்கும் எல்லா மசூதிகளையும் இடித்துத் தரை மட்டம் ஆக்கு வோம்'' என முழங்கிய பிரவீண் தொகாடியா ஆகியோரின் தடா லடிப் பேச்சுகளுக்குப் பின்னர், திருச்சி மாநகரவாசிகளின் மன நிலை என்னவென்பதை அறிந்து கொள்ள ஒரு வலம் வந்தோம்.



• ஆர்.இளங்கோவன்

ஆர்.இளங்கோவன் (விஷுவல் கம்யூனி கேஷன்)

இது போன்று இந்து இளைஞர் மாநில மாநாடு மிகப் பெரிய அளவில் இதுவரை நடந்ததில்லை. இந்த மாநாடு நமக்குள்ளே சில கேள்விகளைக் கேட்கத் தூண்டியுள்ளது. இத்தனை ஆண் டுக் காலமாக தீண்டாமை குறித்து வாய் திறந்து பேசாதவர்கள், இந்த மேடையில் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. இதே மாநாட்டில் விஜயேந்திரர் பேசுகையில், ''கிராமத்திலிருந்து இங்கு நிறையப் பேர் வந்திருக்கிறீர்கள். நீங்கள் இங்கு சாதி வேறு பாடின்றி அனைவரும் ஒன்றாக அமர்ந்துள் ளீர்கள். இது போல நீங்கள் உங்கள் கிரா மத்துக்குச் சென்ற பிறகும் சாதி வேறுபாட்டை மறந்து அனைவரும் சரிசமமாக ஒன்றாகப் பழக வேண் டும்!'' எனக் கூறியது மகிழ்ச்சியான விஷயம்தான். இந்த அணுகு முறையை அவர்கள் சங்கர மடத் திலும் நடைமுறைப் படுத்தத் தயாரா?



• ப.சிவா

ப.சிவா (எலெக்ட்ரிகல் காண்ட்ராக்டர்)

இந்த நாட்டில் முஸ்லிம்களுக் கும் கிறிஸ்தவர்களுக்கும் தனித்தனி இயக்கங்கள் இருக்கின்றன. அது போல் இந்துக்களுக்கும் ஓர் இயக் கம் இருப்பது நமக்கு ஒரு பாது காப்பாகவே இருக்கும். விழிப் புணர்வுக்கும், சுய பாதுகாப்புக்கும்



• கி. செல்வராஜ்



எஸ்.என். நிஜாமுதீன்



• எம். சம்சுதீன்



• கே. அப்துல் அலிம்

இதுபோல் மாநாடுகள் நடத்தி, நமது பலத்தைக் காட்டுவது இப்பொழுது அவசியத் தேவை. இத்தனை ஆயிரம் இளைஞர்கள் இங்கு திரண்டு வந்திருந்த போதும், எங்கும் எந்தவொரு அசம்பாவிதமும் நிகழாதது, அவர்களது கட்டுப்பாட்டுக்கும், ஒழுங்கு முறைக்கும் அடையாளச் சின்னமாகிறது.

**வி. செல்வராஜ்** *(தேசிய ஒருமைப்பாட்டு இயக்க மாநில இணைச் செயலாளர்)*

மாநாட்டில் முஸ்லீம், கிறிஸ்தவர்கள் குறித்து எதிர்ப்புணர்வுப் பிரசாரமும் - இது ஒரு இந்து நாடு என்கிற முழக்கமும் எதிரொலிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் விஷவிதையூன்ற வி.எச்.பி. முயற்சித்துள்ளது. இவர்களது செயல்பாடுகள் இதர மதத்தினரை இந்துக்களுக்கு எதிராகத் திருப்பி விடுவதுபோல் அமைந்துவிட்டால், தமிழ்நாட்டிலும் அமைதி வாழ்க்கைக்கு பங்கம் ஏற்பட்டு விடுமோ என எண்ணத் தோன்றுகிறது.

**எஸ்.என். நிஜாமுதீன்** *(வியாபாரம்)*

ஒரு மதச்சார்பற்ற அரசில் இந்த இந்து இளைஞர் மாநில மாநாட்டுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா எப்படி அனுமதி அளித்தார் என்பதே தெரியவில்லை. இவர்கள் அயோத்தி ராமர் கோயில் பிரச்னையை, உத்தரபிரதேசத்தில்தான் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, அதனை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரக்கூடாது.



• உ. பல்ராஜ் துரை

# பிடித்தால் கும்பிடுவோமா?



**எம். சம்சுதீன்** *(லாரி ஸ்பிரிங் பட்டறை உரிமையாளர்)*

யானை அமைதியாக நடந்து சென்று பவனி வரும்போது அனைவரும் அதனைப் பார்த்து, கை கூப்பி வணங்குகின்றனர். அதே யானை மதம் பிடித்து அலையும் சமயம் யாருக்கேனும் கரம் குவித்துக் கும்பிடத் தோன்றுமா? ஒவ்வொரு மதமும் இப்பொழுது யானையைப் போல் இருக்கின்றது. அதனை மத வெறி என்கிற மாயப் பிசாசுக்கு அடிமைப்படுத்தி விடக் கூடாது.

**கே. அப்துல் அலிம்** *(பள்ளிவாசல் பேஷ் - இமாம்)*

இந்து இளைஞர் மாநில மாநாட்டின் இஸ்லாம் குறித்தான அச்சுறுத்தலான வார்த்தைகளை நாங்கள் இறைவனிடம் ஒப்படைத்து விட்டோம். இந்து மத வளர்ச்சிக்காக அவர்கள் கூடிப் பேசுவது அவர்கள் உரிமை. சுதந்திரம். அதே சமயத்தில் அவர்கள் இஸ்லாத்தைப் பழிப்பதும், அழிக்க நினைப்பதும் மதச் சார்பற்ற நமது தேசத்தின் அரசியல் சட்டத்துக்குப் புறம்பானது என்பதோடு மனித நேயத்துக்கு விரோதமானது. நாம் அனைவரும் சகோதரர்களாய், அன்புடன் வாழ, எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரியட்டும்.

**கிருபா சந்தானம்** *(புத்தக வியாபாரம்)*

இந்த மாநாட்டினை ஒரு தமிழ் தினசரியின் உரிமையாளர் முழுப் பொறுப்பேற்று நடத்தியுள்ளார். நாட்டு மக்களுக்கு நடுநிலை கொண்டு செய்திகளை எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு பத்திரிகையாளர், எப்படி இந்தக் குறுகிய வட்டத்துக்குள் சிக்கிக் கொண்டார் என்பதே புரியவில்லை.

**உ. பால்ராஜ் துரை** *(கிறிஸ்தவ போதகர்)*


இந்து இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவும் தயார் என்கிறார் மாநாட்டில் அசோக் சிங்கால். இது தீவிரவாதம் இல்லையா? அயோத்தியில் ராமர் கோயில் கட்ட அனுமதி மறுக்கப்பட்டால் இந்தியாவில் உள்ள எல்லா மசூதிகளையும் இடித்துத் தரை மட்டம் ஆக்குவோமென மாநாட்டில் பகிரங்கமாக முழங்கியுள்ளார் பிரவீண் தொகாடியா. இந்த இருவரது பேச்சுகளும் பொடா சட்டப்படி குற்றம் இல்லையா? இந்தியாவிலேயே பொடா சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தி வரும் ஜெயலலிதாவின் தமிழக அரசு இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறது? இவர்களை ஏன் பொடா சட்டத்தின் கீழ் தமிழக அரசு கைது செய்யவில்லை?

கட்டுரை, படங்கள் :

**ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

• காவி டி-ஷர்ட்டில் கிராமத்துப் பூசாரிகள்!





'விட்டேனா பார்' என்று எல்லா தரப்பையும் பட்டென்று வசீகரித்து விடுகிறது, அந்தக் குட்டியூண்டு குளிர்பான விளம்பரம். முக்கியமாக பெரிசுகள் பலரையும் கொஞ்சம் நெளியவும் வைத்து விடுகிறது.

போக்குவரத்து நெரிசலில் மூச்சுத் திணறும் கடைவீதி. ஆரஞ்சு நிற ஸ்கர்ட் அணிந்திருக்கும் நடிகை சிம்ரன், காரின் பானெட் மீது ஏறி நிற்கிறார். அவருக்கு எதிரே பெட்டிக்கடை. குளிர்பானம் சாப்பிட விரும்பும் சிம்ரனுக்கு டிராபிக் ஜாம் பெரிய தடை. அப்புறம்! ஐந்து ரூபாய் நாணயம் ஒன்றைச் சுண்டிவிட, அது மிகச் சரியாக பெட்டிக்கடையின் கல்லா பெட்டியருகில் விழுந்து... சுழன்று, நிற்கிறது. பெட்டிக்கடையில் வேலை பார்க்கும் சிறுவன், தூரத்தில் நிற்கும் சிம்ரனைப் பார்த்து "என்ன வேண்டும்?" என்கிறான். சிம்ரனோ உதய சூரியன் சின்னம் போல முதலில் ஐந்து விரல்களையும் விரித்துக் காட்டுகிறார். அடுத்து...?! தமது ஆரஞ்சு நிற ஸ்கர்ட்டை முட்டிக்கு மேல் தூக்கிக் காட்டி, அதை மினிஸ்கர்ட் ஆக்குகிறார். கடைச் சிறுவனுக்கு ஐந்து ரூபாய் விலை கொண்ட மினி ஃபாண்டா என்பது புரிந்து போகிறது! அப்புறமென்ன?! மினி ஃபாண்டா குடித்து குதூகலிக்கிறார் சிம்ரன். அத்தோடு விளம்பரம் முடிந்து விட்டதா? அதுதான் இல்லை! மினி ஃபாண்டாவை சைகை மொழியில் அடையாளம் காட்ட சிம்ரன் பயன்படுத்திய உத்தி, பக்கத்திலிருப்பவர்களையும் பக்கென்று பற்றிக் கொள்கிறது. ஒரு லாரி டிரைவர் தனது லுங்கியைக் கொஞ்சமாய் உயர்த்திக் காட்டுகிறார். அவரைத் தொடர்ந்து கல்லூரி மாணவ, மாணவிகள். அப்புறம்? தமது கணவரோடு ஸ்கூட்டரில் பயணிக்கும் ஒரு மடிசார் கட்டிய மாமி என்று தொற்றுநோய் போல் தொடர்கிறது இந்தச் சைகை!

விளம்பரத்தை உருவாக்கிய அந்த இயக்குனரை நேரில் சந்தித்து ஒரு பிடி பிடிக்கலாம் என்று தேடிய போது கிடைத்தார் ரோஷிணி. ராஜீவ்மேனனின் பட்டறையில் உதவி இயக்குனராகப் பயின்று, டீ.வி. விளம்பர உலகைக் கலக்கிக் கொண்டிருப்பவர்.

"பெண்கள் இயக்கும் விளம்பரப் படங்களில் கூடவா, பெண்கள் காட்சிப் பொருளாக வேண்டும். சிம்ரன் ஒரு கிளாமரான நடிகை. மினி ஃபாண்டாவை அவர் அடையாளப்படுத்தும் தொனியை நுகர்வோர் சகித்துக் கொள்ளக் கூடும்... ஆனால் அந்த மாமியையும் எப்படி அதே வட்டத்திற்குள் அடைக்கிறீர்கள்?"

ரோஷிணி கடுகடுக்காமல் கலகலப்பாகவே ஆரம்பித்தார். "இத்தனை அவசரமான யுகத்தில், நகைச்சுவை உணர்வு என்பதே டயனோசர் மாதிரி ஆகிவிடுமோ என்று எல்லோரும் அஞ்சிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் விஷுவல் மீடியா நகைச்சுவை உணர்வு பட்டுப் போகாமல் காப்பாற்றுவதற்கு உகந்த மேடை.

மினி ஃபாண்டா விளம்பரத்திலும் நகைச்சுவைதான் அதிகம் இழையோடுகிறது. மடிசார் புடவையை மாமி கணுக்கால் அளவே உயர்த்திக் காட்டுகிறார். சிம்ரனைப் பார்த்து இதை ஒரு தமாஷுக்காகத் தான் செய்கிறார். ஜஸ்ட் ஃபன் எலிமெண்ட். இதை ஆபாசம் என்று சொன்னால் எப்படி?

"மீரா துளசி சோப் விளம்பரத்தில் 'குளிக்காதே' என்று மகனை எச்சரிக்கும் அம்மாவைப் பார்த்துச் சிரிக்காதவர்கள் ரொம்பச் சொற்பம். ஒரு லேடீஸ் ஹாஸ்டலுக்குப் போயிருந்தேன். கிச்சனிலிருந்து



# விளம்பரம்னா ரோஷிணி!



எங்களுக்கு காஃபி வந்தது...''

''குடிக்காதே.. காபி நல்லா இல்லே குடிக் காதே'' என்று கிண்டல் அடித்தார்கள் அங்கி ருந்த பெண்கள். இத்தனைக்கும் அந்த விளம் பரத்தை இயக்கியது நான்தானென்று அவர் களுக்குத் தெரியாது. இது எனக்குக் கிடைத்த வெற்றி என்று சொல்லிக் கொள்வதை விட அந்த விளம்பரத்தில் இழையோடும் நகைச் சுவை உணர்வுக்குக் கிடைத்த வெற்றி என் றால் பொருத்தமாக இருக்கும்'' என்று தன்ன டக்கம் காட்டும் ரோஷிணி 'கலர்ன்னா ஃபாண்டா' விளம்பரம் உட்பட இதுவரை இருபதுக்கும் அதிகமான விளம்பரங்களை இயக்கியிருக்கிறார்.

''தொண்ணூற்று எட்டு வயதிலும் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கும் கின் னஸ் டாக்டர் எனது தாத்தா. அப்பா, அம் மாவும் கூட டாக்டர்கள். நான் படித்தது, வளர்ந்ததெல்லாம் வேலூரில்'' எனும் ரோஷிணி, மருத்துவர்கள் குடும்பத்திலிருந்து மீடியாவுக்குப் பிரவேசித்தது, தனிக் கதை.

தவளையை உயிரோடு வைத்துக் கொண்டு அதை வெட்டப்பிடிக்காமல் உயிரி யலிலிருந்து வெளியேறினேன். சட்டம் படிக் கலாம் என்ற ஆசையோடு பெங்களூர் சட் டக் கல்லூரியில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வில் எட்டாவது இடத்தைப் பிடித்தேன். கட்டணமும் செலுத்தியாகி விட்டது. ஆனால் முதல் நாளே கல்லூரி வாசலோடு திரும்பி வந்துவிட்டேன். கட்டடக்கலை

படிக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் இடம் கிடைக்கவில்லை. கடைசியாக நமக்குப் பிடித்த கணிதம் படித்து, கணித ஆசிரியர் ஆகிவிடலாம் என்று பி.எஸ்ஸி. கணித வகுப்பில் சேர்ந்தேன். முதலாண்டு முடிவில் எங்கள் கல்லூரியில் மீடியா பற்றின நான்கு நாள் செமினார் நடந்தது. ஜோ ஆண்ட்ரூஸ் என்ற பாதிரியார் நடத்தினார். பெண்களைச் சினிமாவில் எப்படிச் சித்திரிக்கிறார்கள், வன்முறை எப்படித் திணிக்கப்படுகிறது, நடைமுறை சாத்தியமற்ற விஷயங்கள், சினிமாவில் எப்படி சாத்தியம் போல காட்டப்படுகின்றன என்று வீடியோ கிளிப்புகளோடு புட்டுப் புட்டு வைத்தார்.

மணிரத்னம் இயக்கிய 'தளபதி' படத்தையே அவர் ஒரு வழி பண்ணினார். அதற்கு முன் ஒரு ரசிகையாக அந்தப் படத்தைப் பார்த்திருக்கிறேன். அதில் இத்தனை கேள்விகளுக்கு இடமிருக்கிறதா என்று வியந்து போனேன். சினிமா பற்றிய, சினிமா ரசனை பற்றிய கதவுகளை எனக்குத் திறந்து விட்டது அந்த செமினார்தான். நான்கு நாள் மழை விட்டதென்று செமினார் முடிந்து எல்லோரும் போய்விட்டிருந்தார்கள். நான் மட்டும் ஃபாதர் ஜோவை அணுகி சினிமாவைப் படிக்க முடியுமா என்றேன்.

"முடியும்! சென்னையில் தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரி இருக்கிறது. லயோலா கல்லூரியில் விஷுவல் கம்யூனிகேஷன் இருக்கிறது'' என்று வழிகாட்டிவிட்டுப் போனார். சென்னை, பூனா என்று முயன்று இறுதியில் லயோலாவில் இடம் கிடைத்ததும் கணிதப் படிப்பை முதல் வருடத்தோடு விட்டுவிட்டு ஓடிவந்துவிட்டேன்'' என்று ஒரு திரைக்கதை போல விவரிக்கும் ரோஷிணி லயோலா கல்லூரியின் விஷுவல் கம்யூனிகேஷன் படிப்பு பற்றி நிறையவே சிலாகிக்கிறார்.

''கூரைவேயப்பட்ட வகுப்புகள்... சுற்றிலும் மரங்கள். எங்கள் துறைக்குப் பின்னால் மின்சார ரயில் ஓடிக் கொண்டே இருக்கும். ஒவ்வொருமுறை ரயில் கடக்கிற போதும் பத்து வினாடிகளுக்கு வகுப்பே அமைதியாகிவிடும். வகுப்புக்கள்தான் வித்தியாசமானவை என்றால் பேராசிரியர்களும் அப்படித்தான். எங்களுக்குத் திரைக்கதைச் சொல்லித் தந்த ஃபாதர் ராஜநாயகம், எங்களை வகுப்பறையிலேயே உட்காரவிட மாட்டார். வண்ணத்துப் பூச்சிகளைத் பின் தொடர்ந்து போய் மனத்தில் படுவதை எழுதச் சொல்வார். ரபிபெர்னாட், "உனக்குத் தெரிந்த மொழியில் தேர்வை எழுது" என்று சுதந்திரம் தருவார். அங்கே எங்களுக்கு கற்றுத் தரவில்லை. எங்களுக்குள் இருக்கும் எங்களைக் கொண்டே கற்றுக் கொள்ள வைத்தார்கள். லயோலா படிப்புத்தான் லதாமேனனிடம் உதவி இயக்குனராகச் சேர

## சாக்லெட் நேர்மை!

பாளையங்கோட்டை பெல் மெட்ரிக்குலேஷன் பள்ளி மாணவர்கள் தங்கள் நேர்மையை வளர்த்துக் கொள்ள அப்பள்ளி வளாகத்திலேயே 'ஆனஸ்டி ஷாப்' எனும் கடையொன்றைத் திறந்துள்ளனர். மாணவர்களே பணம் போட்டுப் பொருள் எடுத்துக் கொள்ளும் இக் கடையில் கடைப் பொறுப்புக்கென யாரும் இல்லை.



• ரேணுகா



"நேர்மையாக இருக்க வேண்டும் என்கிற எண்ணம் மட்டுமல்ல. சுயமாக கடையில் சரியான சில்லறை கொடுத்து பொருட்கள் வாங்கவும் எங்களுக்கு உபயோகமாயிருக்கிறது'' என்கிறார் இப்பள்ளியில் படிக்கும் மாணவி குமுதினி. அறிவை மட்டும் தருவது கல்வியல்ல. வாழ்க்கைக்கு மிகவும் தேவையானது நேர்மை. அதை குழந்தைப் பருவத்திலிருந்தே வளர்ப்பது எங்கள் கடமை'' என்று கூறுகிறார் பள்ளியின் முதல்வர் ரேணுகா சங்கரநாராயணன். 'சில நேரங்களில் பணம் கொஞ்சம் குறைவாகவும் இருக்கும். ஒவ்வொரு நாளும் வசூலாகிற தொகையின் சதவிகிதத்தை நோட்டீஸ் போர்டில் போடுகிறோம். நூறு சதவிகிதம் வருகிற அன்று மாணவர்களிடையே வெளிப்படையாக சந்தோஷம் தெரியும்'' என்கிறார்.

பேட்டி, படங்கள் : தமயந்தி

பயன்பட்டது" என்று சொல்லும் ரோஷிணி அதன் பிறகு ராஜீவ் மேனனிடம் உதவி இயக்குனராகச் சேர்ந்து அவர் இயக்கிய விளம்பரப் படங்களிலும், 'கண்டு கொண் டேன்.. கண்டு கொண்டேன்' திரைப் படத்திலும் பணியாற்றி இருக்கிறார்.

"ராஜீவ் மேனனிடம் பணியாற்றியபோது தான் பாஸ்கரையும் கண்டு கொண்டேன்" என்று குறும்பாகச் சிரிக்கும் ரோஷிணியின் விளம்பரப்படங்களுக்கு ஒளிப்பதிவு செய் பவர் அவரது காதல் கணவர் பாஸ்கர்தான்.


"ஒரு விளம்பரப்படம் முடிவதற்குள் பலமுறை சண்டையிட்டுக் கொள்வோம். நான் கதைக்கு முக்கியத்துவம் கொடுப்பேன். அவர் கோணங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார். இப்படியே ஒவ்வொரு ஃபிரே மையும் போட்டி போட்டுக் கொண்டு செதுக்கி விடுவோம்" எனும் ரோஷிணி நல்ல விளம்பரத்திற்குத் தரும் இலக்கணம் இது தான்.

"வெற்றிகரமான விளம்பரம் என்பது நல்ல பாட்டு மாதிரி. எத்தனை பழைய பாட்டு என்றாலும் அலுக்காமல், சலிக்காமல் எப்படி திரும்பத் திரும்ப கேட்கிறோமோ, விளம்பரமும் அப்படிப் பார்க்கத் தூண்ட வேண்டும். ரிமோட்டுக்குத் தப்பிப் பிழைக்க வேண்டும். சினிமாவில் மூன்று மணி நேரத்தில் சொல்கிற கதையை இங்கு முப்பது வினாடியில் சொல்லி முடிக்க வேண்டும். விளம்பரத்திற்கான ஒரு வரிக் கதையை விளம்பர ஏஜென்சிகள் எங்களிடம் கொடுத்து விடுவார்கள். காப்பி ரைட்டிங் என்ற பொறுப்பு இல்லாவிட்டாலும் 'ஃபிலிம் மேக்கிங்' என்கிற காப்டன்ஷிப் எங்களை நம்பி ஒப்படைக்கப்படுகிறது! ஒவ்வொரு ஃபிரேமிலும் எங்கள் உழைப்பைக் காட்டி யாக வேண்டும். விளம்பரம் சூப்பர் என்று பெயர் வாங்கி, விற்பனை உயரவில்லை என் றால், அதுவும் வீண்" என்கிறார்.

"விற்பனை உயர்வுக்காக நாங்கள் எடுத் துத் தருகிற விளம்பரங்களுக்கு மத்தியில், 'எஸ்.ஓ.எஸ். சில்ட்ரன்ஸ் வில்லேஜ்' மாதிரி யான சமூக நோக்கம் கொண்ட சீரியஸ் விளம்பரங்களையும் எடுக்கிறோம் என்ற திருப்தி இருக்கிறது" என்று பெருமிதப்படும் இவர், தமது கணவரோடு இணைந்து சினிமாத் துறையிலும் முத்திரை பதிக்க வேண்டும் என்ற இலட்சியத்தையும் அடை காத்துக் கொண்டிருக்கிறார்.

— ஜெயந்த்

அட்டை, படங்கள்: ஸ்ரீஹரி




# மதவெறி மாநாடுகள்!

திருச்சியில் நடைபெற்ற ஹிந்து இளைஞர் மாநில மாநாடு, மாபெரும் வெற்றி அடைந்ததாகக் கூறப்படுகிறது.

எண்பதாயிரம் பேரை ஓரிடத்தில் சேர்ப்பது வெற்றி எனில், அவர்களை இரு தினங்களுக்கு அங்கே இருக்கச் செய்வது வெற்றி எனில், இந்த மாநாடு வெற்றி அடைந்திருப்பதாகக் கூறலாம். ஆனால், தொண்டு - தற்காப்பு - பண்பாடு என்ற 'ஸ்லோகன்' ஒன்றை இம்மாநாட்டுக்கு வழங்கினார்களே, அதன்படி பார்த்தால் மாநாடு படுதோல்வியே அடைந்திருக்கிறது. மாநாட்டில் பேசிய முக்கிய தலைவர்களுள், "இந்தியாவின் நூறு கோடி மக்களும் நன்றாக இருக்க வேண்டும்; நல்லவர்களாக இருக்க வேண்டும்" என்று பேசிய ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் நீங்கலாக ஒருவரும் இந்த முத்தரப்பு இலட்சியப் பாதைக்கு வழிகாட்டவில்லை.

மாநாடு மேடையில், வி.எச்.பி. தலைவர் அசோக் சிங்கால் மற்றும் அதன் செயலர் பிரவீண் தொகாடியா ஆகியோருக்குத் தங்கத் திரிசூலங்கள் பரிசளிக்கப்பட்டன.

அந்தத் திரிசூலங்களின் மும்முனைகளும் முறையே மதம் மாற்றும் கிறிஸ்துவர்களையும், பயங்கரவாத முஸ்லிம்களையும் மதச் சார்பின்மை பேசும் அரசியல்வாதிகளையும் அழிப்பதற்காக ஏற்பட்டுள்ளன என அந்த மேடையிலேயே அளிக்கப்பட்ட விளக்கம்தான் தொண்டு என்பதற்கு இவர்கள் காட்டும் இலக்கணமா?




கல்கி



2003 பிப்ரவரி 23
சித்ரபானு மாசி 11
மலர் : 61
இதழ் : 30

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




'பிப்ரவரி 22ம் தேதிக்குள் ராமஜன்ம பூமியை வி.எச்.பி. வசம் தராவிட்டால் இந்தியாவில் அத்தனை மசூதிகளும் குறி வைத்துத் தாக்கப்படும்' என தொகாடியா பேசியதுதான் தற்காப்புக்கு வழிகாட்டலா?

'மதச்சார்பின்மை பேசுகிற ஹிந்துக்களும் ஹிந்து தலைவர்களும் சுயமரியாதையற்றவர்கள்' என்று அசோக் சிங்கால் முழங்கியதுதான் பண்பாடா?

இந்தியப் பண்பாடின் மிக முக்கிய அம்சமான சகோதரத்துவத்தைக் குழிதோண்டிப் புதைப்பதுடன் ஆயிரக்கணக்கான இளைஞர்களைத் தவறான வன்முறை சார்ந்த பாதைக்குத் தூண்டியிருக்கிறது இம்மாநாடு. ஹிந்து பயங்கரவாதம் என்ற புதிய பிசாசைக் கட்டவிழ்த்துவிட்டு தேசிய ஒருமைப்பாடை அச்சுறுத்துகிறது.

நமது அரசியல் சாசனம் உறுதி செய்கிற மதச்சார்பின்மையை நிராகரிப்பதன் மூலம் தேசத் துரோகமே இழைத்திருக்கிறது இம்மாநாடு.


மக்கள் மனங்களில் பிரிவினையும் குரோதமும் விதைக்கிற சிந்தனைகள் வெளிப்படுகிற மேடைகளை மடாதிபதிகளும் பீடாதிபதிகளும் பகிர்ந்து கொண்டு தங்கள் பீடங்களின் உயர்வுக்கு இழுக்கு செய்திருக்கிறார்கள்.

இத்தனை பயங்கர பேச்சும் வன்முறையைத் தூண்டும் வாசகங்களும் பேசப்படுவதை எந்த ஒரு அரசியல் தலைவரும் கண்டிக்க முன்வரவில்லை; அரசோ காவல் துறையோ இதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

திருச்சி மாநாட்டில் பேசிய அதே வார்த்தைகளை ஊர் ஊராகச் சென்று பேசிக் கொண்டிருக்கும் தொகாடியா தலைநகரிலும் துவேஷத்தைக் கொட்டி முழக்கியிருக்கிறார்.

இதன் பிறகும் பிரதமரோ உள்துறை அமைச்சரோ அவரைக் கண்டனம் செய்ய முன்வரவில்லை.

உண்மையில், ஹிந்து பயங்கரவாதம் வளர்ந்து, நாட்டின் அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் தொகாடியா போன்றோரை பொடா சட்டத்தின் கீழ் கைது செய்வது கூட தவறாகாது. ஆனால், பாரதீயத்வா என்ற பரந்த நோக்குடன் பிரதமர் ஒருமைப்பாடு பேசுகிறாரேயொழிய உறுதிபட இத்தகைய




தீவிரவாதிகள் பேரில் நடவடிக்கை எடுப்பதில்லை.

'இங்கே பெரும்பான்மையினரான ஹிந்துக்கள் நாட்டை ஆள்வதற்குப் பதில் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள்தான் ஆண்டு வருகிறார்கள்' என்று இந்து மாநாட்டில் வாதாடியது அபத்தம். நாம் ஜனநாயக நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் யாருக்கு வாக்களிக்கிறோமோ அவர்களே ஆட்சி அமைக்கிறார்கள். இன்று நமது மத்திய அரசை ஹிந்து அடிப்படைவாத அரசு **(Hindu fascist Government)** என்றே அயல்நாடுகள் வர்ணிக்கின்றன. கூட்டணி ஆட்சியாக இருக்கும் போதே இந்த நிலை என்கிறபோது, பி.ஜே.பி. தனியே ஆட்சி அமைத்தால் என்னதான் நேராதோ என்று அச்சம் ஏற்படுகிறது.

ஹிந்து அடிப்படைவாதம் என்பது இஸ்லாமிய பயங்கரவாதத்துக்கு நிகரான அழிவை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமேயில்லை.

சில தீய சக்திகளை ஏவி, ஹிந்து உணர்வுகளைத் தூண்டி, இந்தியாவில் ஹிந்து - முஸ்லிம்களிடையே பிரிவினை ஏற்படுத்த வேண்டும் என்பதே பாகிஸ்தானின் நோக்கம். அந்நோக்கம் சுலபமாக நிறைவேற இங்குள்ள ஹிந்துக்களே தங்கள் தவறான செயல்களால் துணை போய்விடக் கூடாது. பாகிஸ்தானின் நோக்கம் வெற்றிபெற நமது மத்திய அரசும் அனுமதித்துவிடக் கூடாது. விழிப்புடனிருந்து, விஷம் கக்கும் பேச்சாளர்களை உரிய காலத்தில் எச்சரித்து, அந்த எச்சரிக்கையும் மதிக்கப்படாவிடில் கடுமையான நடவடிக்கை எடுப்பது தவறாகாது.

மத பேதங்கள் காரணமாக நிலவும் சமூக அநீதிகள் நீங்கி, சமதர்ம சமுதாயம் மலரவேண்டுமானால் இந்தியாவுக்குத் தேவை சமச்சீரான சிவில் சட்டம். அத்தகைய சட்டத்துக்காக இயக்கம் தொடங்கிப் போராட அரசியல்வாதிகளும் முன்வருவதில்லை; மதத்தலைவர்களும் முன்வருவதில்லை.

குறுக்கு வழியில் மக்கள் கூட்டத்தின் மன உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் மாநாடுகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவை மெய்யான ஹிந்து மதத்துக்கு மட்டுமின்றி இந்தியாவுக்கே கூட உலை வைக்கும் மதவெறி மாநாடுகள்!○

# சொக்கத் தங்கம்

**வா**ர்னிஷ் வாசனை, புதுத்துணி வாசனை, ஹோமப் புகை வாசனை - அதே போல, 'பாக்யராஜ் வாசனை' குப் என்று அடிக்கிறது எடுத்த உடனேயே. தொடர்ந்தும் அடிக் கிறது. சௌந்தர்யா தெரியவில்லை, உமா தெரியவில்லை, கௌண்டமணி தெரியவில்லை, செந்தில் தெரியவில்லை, பாக்யராஜ் மட்டுமே தெரிகிறார். ஆனால், அந்த வாசனை இடைவேளைக்காக தியேட்டர் கதவு திறக்கப்படும்போது எஸ்கேப் ஆகி, 'தியேட்டரில் வந்து படம் பார்த்ததற்கு நன்றி' என்ற கடைசி டைட்டிலில்தான் மீண்டும் எட்டிப் பார்க் கிறது.

பெரிய ஹீரோ இமேஜ் ஒரு பக்கம். நடிகர் சங்க இமேஜ் ஒரு பக்கம். அரசியல் இமேஜ் இன்னொரு பக்கம். மூன்றை யும் பாக்யராஜ் கையில் மந்திரம் ஓதி தாரை வார்த்துவிட்ட விஜய்காந்த், கண்டிப்பாகச் 'சொக்கத்தங்கம்'தான்! நல்ல கதா பாத்திரம் என்றால் இமேஜ் பற்றிக் கவலைப்படக் கூடாது, யார் இல்லை என்றார்கள்? ஆனால், முதுகெலும்பே இல்லாத இப்படி ஒரு காரெக் டருக்காகவா?

கதை ஆலோசகர்களுக்கு, 'திருமண - நடங் கல்- ஐடியா' போட்டி வைத்திருப்பார் போலி ருக்கிறது, பா.ரா., எல்ஜிடப்பா ஸ்பான்ஸரோடு! சுவாதிகாவிற்குத்தான் எத்தனை திருமண ஏற்பாடுகள் மணவறையில் இறந்து விட்ட மணமகன் - முதல் வரன். விஜய்காந்த் இரண் டாவது. வில்லன்களின் செட்-அப் வரன் மூன்றாவது. திரும்ப விஜய்காந்த் - நான்காவது. விஜய்காந்த்திற்கு நன்றிக்கடன் பட்ட குடும் பம் - ஐந்தாவது. இந்த முறையும் திருமணம் நின்று விட்டால் எங்கே ஆடியன்ஸிலிருந்து யாராவது எழுந்து சுவாதிகாவிற்குத் தாலி கட்டி விடுவார்களோ என்று உள்ளூர ஒரே டென்ஷன்!

'சௌண்டு' உடைய கோணல் சிரிப்பு எங்கே? காணாமல் போனவை பற்றிய அறிவிப் பில் உடனே போடவும்.

உமா, சுமித்ராவின் சிமந்த புத்ரி. முகம் சொல்கிறது. நடிப்பும்.

அப்பாடா... சிச்சுவேஷனுக்கு ஏற்ற மாதிரி ஒரு பாட்டைக் கேட்டு எத்தனை நாளாகிறது? ('வெள்ளை யாய் மனம்..')

பா.ரா.க்கு ஒரு விண்ணப் பம். ஹீரோக்களுடைய ஜிலு ஜிலு சட்டைகளுக்கும் பாடல் காட்சியில் வரும் வெள்ளை சாரியட் வண்டிக் கும் வி.ஆர்.எஸ். கொடுத்து உடனே அனுப்பி விட வும்!

- கிருஷ்ணா சிதம்பரம்

• ஆவரெஜ்



# ஆசை ஆசையாய்!

படத்தின் இயக்குனர் ரவிமரியாவுக்கு இது முதல் டெஸ்ட்மேச். அதனால்தானோ என்னவோ, பழக்கப்பட்ட உள்ளூர் பிட்ச்சே பாதுகாப்பென்று, காதல் கதையைக் கையிலெடுத்துக் கொண்டிருக்கிறார், சின்ன வித்தியாசத்தோடு. வித்தியாசம்?

வெற்றிகரமான தொழில் அதிபர் ஆக வேண்டும் என்பது காதலனின் லட்சியம். பொறியியல் படிப்பில் தங்கப் பதக்கங்களை அள்ள வேண்டும் என்பது காதலியின் லட்சியம். இந்த லட்சியங்கள் நிறைவேறும் வரை இருவரும் சந்திக்கவே கூடாது என்ற நிபந்தனையோடு, 'ஐ லவ் யூ' சொல்லிக் கொண்ட அடுத்த கணமே, காதலுக்குத் தற்காலிக விடுமுறை விடுகிறார்கள்.

கடைசிப் பந்தைத் தூக்கியடித்து காட்ச் கொடுத்து விடுவதுபோல, இந்நேரம் படத்தின் முடிவு உங்களுக்கே புரிந்திருக்கும். அதிருக்கட்டும், மேன் அண்ட் வுமன் ஆஃப் த மேச் யாராம்? அறிமுக நாயகன் நாயகியாக, ஒவ்வொரு பந்தையும் பௌண்டரிக்கு அநாயசமாக அடித்து விளாசியிருக்கும் ஜீவா, ஷர்மிலி இருவரும். குறிப்பாக ஆக்டிங் அஞ்சல்காரர் வேலையை தனது காதலுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொண்டு, தான் எழுதிய கடிதங்களையே ஷர்மியிடம் டெலிவரி செய்து, கலாய்க்கும் காட்சிகளில் இளமைத் துடிப்பும், இந்த இளசுகளின் நடிப்பும் தூக்கல். ஆனால் ஆதரவற்றோர் இல்லத்துக்குச் சென்று, இலவச உடைகளைக் கொடுக்கும் ஷர்மியின் இளகிய உள்ளம் கண்டு (கடவுளே! ஒரு பெண் மீது காதல் வயப்பட இதுமாதிரி ஒரே ஒரு காரணம் போதுமா?) காதலிக்கத் தொடங்கும் ஜீவா, அடுத்த காட்சியிலேயே ஷர்மியோடு இரட்டை அர்த்த வசனங்களில் பேசுவதை சகித்துக் கொள்ள முடியவில்லை. நாயகி யாரையேனும் காதலிக்கிறாரா என்பதை உளவறிந்து சொல்லும், தனியார் துறை துப்பறிவாளனாக நாயகன் ஜீவா, ஷர்மியைப் பின் தொடரும் சுவாரஸ்யமான தொடக்கக் காட்சிகள், இயக்குனர் புதிதாய் சிந்தித்திருக்கிறார் என்று சொல்ல வைக்கின்றன.

அதன் பிறகுதான் ஒரே பாட்டில், நாயகனைத் தொழில் அதிபர் ஆக்கி விடும் மேஜிக்கெல்லாம் நடக்கிறது.

துணிவு மிக்க பேட்ஸ்மேன்கள், திறமையுள்ள ஆல் ரவுண்டர்கள், முக்கியமாக, பிட்ச் சரியில்லையென நழுவாத கேப்டன் கிடைத்துவிட்டால், ஆட்டத்தில் வெளுத்துக் கட்டமாட்டார்களா? இந்தக் கிரிக்கெட் பார்முலாவைத் தெளிவாகப் புரிந்து கொண்டு கடைசிவரை களத்தில் தாக்குப் பிடித்திருக்கிறது 'ஆசை ஆசையாய்' டீம்.

- விஷ்வல்தாசன்

● ஆவரெஜ்



# தேவமருந்து - 29

ஆசை.

'சதி லீலாவதி' சினிமா பார்த்தீர்களா?... அதில் ஏடாகூடமாக முதுகு பிடித்துக் கொண்ட நிலையில், குப்புறப் படுத்துக் கொண்டு 'ஆ...ஊ' என்று புரண்டு புரண்டு, சவுண்டு கொடுப்பாரே ரமேஷ் அரவிந்த்.. கிட்டத்தட்ட அதே வயதில், அதே சாயலில், அதே வலியோடு, சரவணவேல் என்ற இளைஞர் வந்தார்.

"ஸார்... அடிக்கடி முதுகு வலி வந்துடுது... கன்னாபின்னான்னு பிடிச்சுக்குது. முதுகுலே எண்ணெய் விட்டு அப்பளம் இடுவீங்களாமே...! அதை செஞ்சா நல்ல குணமாயிடுதுன்னு சொல்றாங்க... என்ன அப்பளம் ஸார்...?" என்றார் அப்பாவியாக...

"பொரிக்காமலேயே சாப்பிடறது தான்... ஆனா உங்களுக்கு அதெல்லாம் வேண்டியிருக்காது சரவணன்" என்று ஆறுதல் சொன்னேன்.

சரவணன் இருப்பது சென்னை புழுதிவாக்கத்தில், அலுவலகம் திருவான்மியூரில்... ஆட்சியாளர்களின் அருமை பெருமையை விவரிக்கக் கூடிய குண்டும் குழியுமான சாலையில், அதுவும், டூ வீலரில் 'தட் தடக்..' என்று தினமும் பயணம் செய்தால் முதுகுவலி வராமலிருக்குமா...?



• 'கடி வஸ்தி' சிகிச்சை

'மூவ்' போன்ற வலி நிவாரணிகளுக்கு 'மூவ்' ஆகிவிடக் கூடிய சாதா முதுகு வலியும் இருக்கிறது. முற்றிலும் முதுகைச் செயலிழக்கச் செய்யும் ஸ்பெஷல் டைப்பும் இருக்கிறது.

நோயாளியின் ஹிஸ்டரியைக் கேட்டும், பரிசோதனைகள் செய்தும், முதுகுவலியின் காரணத்தை, இலகுவாகக் கண்டுபிடித்து விடலாம். சில நேரங்களில், இரத்தப் பரிசோதனைகள், எக்ஸ்-ரே, எம்.ஆர்.ஐ ஸ்கேன் போன்றவை தேவைப்படுகின்றன. சில நேரங்களில் என்ன காரணத்தினால் முதுகுவலி வருகிறது என்று கண்டுபிடிக்க முடியாது. இதற்கு 'நான் - ஸ்பெஸிஃபெக் லோ பேக் பெயின்' என்று பெயர். சில மனோவியல் காரணங்களால்கூட முதுகுவலி வருவதற்கு வாய்ப்புள்ளது. கீழ் முதுகில் வலியா, மேல் முதுகில் வலியா, காலுக்குப் பரவுகிறதா, திடீரென்று வந்ததா, மெள்ள அதிகரித்ததா, நடந்தால் வலி கூடுகிறதா, ஓய்வெடுத்தால் குறைகிறதா போன்றவற்றைப் பொறுத்து சிகிச்சை மாறும்.

அடிபடுவதாலோ, தசையின் அழுத்தத்தாலோ முதுகுவலி வரலாம். இரண்டு எலும்புகளுக்கிடையே இருக்கின்ற சவ்வு போன்ற பொருள் விலகுவதால், டிஸ்க் பிரச்னை ஏற்படுகிறது. சில நேரங்களில் அதிகமான உடல் எடையாலும் முதுகு பாதிக்கப்படுகிறது.

பொதுவாக, நிற்கும், நடக்கும், தூங்கும் நிலைகளில் மாறுதல் ஏற்பட்டால்கூட முதுகுவலி வரலாம். பிறப்பிலேயே உள்ள தண்டுவடக் குறைபாடினாலும் வலி இருக்கலாம். எலும்புத் தேய்மானம், சிறுநீரக நோய்கள், ஆஸ்டியோ போரோஸிஸ் (அஸ்தி க்ஷயம்) போன்றவற்றால் வரலாம். அபூர்வமாகச் சிலருக்கு தண்டுவடக் கட்டி, புற்று நோய், காசநோய், செப்டிக் கண்டிஷன்களினாலும் முதுகுவலி ஏற்பட வாய்ப்புண்டு.

சாதாரண முதுகுவலிக்கு உஷ்ண வீரியமுடைய கொட்டான் சுக்காதித் தைலம், பிரபஞ்சனம் தைலம் போன்றவற்றைச் சூடு செய்து, வலி உள்ள இடத்தில் மெதுவாகத் தடவி, வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம். அதன் பின் 'தொட்டிக் குளியல்' என்று சொல்லக்கூடிய அவகாஹ ஸ்வேதம் தந்தால்

நல்ல பலனிருக்கும்.

தசமூலம், நொச்சி, ஆமணக்கு இலை, புளி யிலை, எருக்கு இலை இவற்றைக் காய்ச்சிய தண்ணீரில், நோயாளியை இருபது நிமிடம் முதல் முப்பது நிமிடம் வரை அமரச் செய் தலும் நல்லது.

அபான வாயு தடைப்படுகின்ற முதுகு வலிகளில், மலகத்திக்கு மருந்து கொடுத்தல் முக்கியமான சிகிச்சையாகும். பக்குவப்படுத் தப்பட்ட ஆமணக்கு எண்ணெயால் தயாரிக் கப்பட்ட மருந்துகள் சிறந்த பலனைத் தரு கின்றன. நொச்சி இலையில் காய்ச்சப்பட்ட ஆமணக்கு எண்ணெய் என்ற நிர் குண்டி ஏராண்டம், சுகுமாரம் ஏராண்டம் போன் றவை 20 முதல் 30 மில்லிவரை காலை வேளைகளில் கடுங் காப்பியில் கலந்து கொடுக்கின்ற பழக்கம் நாட்டு மருத்துவர்களி டையே இருந்து வருகின்றது.

# தோசை, அப்பளம், வலி!

முதுகு வலி இருந்தால் இடுப்பு வலியும் இலவச இணைப்பு போல சேர்ந்தே வரும் என்பதால், இடுப்பு வலிக்கான சிகிச்சையும் சேர்த்தே தருகிறோம். ஆமணக்கு வேரினால் செய்யப்பட்ட கந்தர்வ ஹஸ்தாதி கஷாயம், கடுங்குறிஞ்சி வேர், தேவ தாரு, சுக்கு இவற்றால் செய்யப்பட்ட சஹ சராதி கஷாயம், சப்தசார கஷாயம் போன் றவை இடுப்பு வலிக்கு மிகுந்த பலனைத் தரு கின்றன. இவற்றைச் செய்தபிறகு 'வஸத்' என்று சொல்லக்கூடிய எனிமா சிகிச்சை தரப்படும். எனிமா சிகிச்சை, எண்ணெயைக் கொண்டும், கஷாயங்களைக் கொண்டும் செய்யப்படுகின் றது. முதல் நாள் எண்ணெயைக் கொண்டு சிகிச்சை செய்தால், மறுநாள் கஷாயத்தைக் கொண்டு சிகிச்சை செய்யலாம். மருந்து எண் ணெய்களைக் கொண்டு எண்ணெய் எனிமா, மதியம் உணவுக்குப் பின் செய்யப்படும். மறு நாள் ஆமணக்குக் கஷாயம், தேன், எண்ணெய், இந்துப்பு, சதகுப்பை இவற்றால் செய்த கலவை களைக் கொண்டு எனிமா செய்யப்படுகின் றது.

எனிமா சிகிச்சைக்குப் பிறகு பிழிச்சல் போன்ற சிகிச்சை இறுதியாகத் தரப்படும். முது குப் பகுதியில், வலி உள்ள இடத்தில் உளுந்து மாவினால் ஒரு வட்ட வடிவம் அமைத்து, அதில் எண்ணெயைச் சேமித்து வைக்கக்கூடிய சிகிச்சைக்கு 'கடீவஸ்து' என்று சொல்வார்கள். இதுவும் சிறப்பான பயன் தருகிறது.

அபான வாயுவை அதிகரிக்கின்ற காரம், புளி, எண்ணெய்ப் பலகாரங்கள், குளிர்ந்த நீர், மதுபான வகைகள், கிழங்கு வகைகள், பொரித்த, வறுத்த உணவுகளைச் சாப்பிடுதல் முதலியன, முதுகுவலிக்குக் காரணமாக அமைவதால், மேற்கூறியவற்றைத் தவிர்த் தாலே முதுகுவலி வராது.

சரியான ஓய்வு, மிதமான உணவு, சரி யான படுக்கை முறை, உடற்பயிற்சி, கவன மாக எடைகளைக் கையாளுதல், இரு சக்கர வாகனங்கள் அதிகம் ஓட்டாமல் இருத்தல், போன்றவற்றால் முதுகு வலி வராமல் காக்கலாம்.

முதுகுவலிப் பிரச்னைகளில் பெரும் பான்மையானவை, ஓய்வி னாலும், உடற் பயிற்சி யினாலும் சில எளிமை யான மருத்துவ முறைகளி னாலும் குணப்படுத்தக் கூடி யதே. அபூர்வமாகவே, ஒரு சில நோய்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது.

(தொடரும்)



"அர்ச்சகரெல்லாம் கூட அறிமுகம் போலிருக்கிறதே! தினசரி கோவிலுக்குப் போவாயா?" என்றான் ராகவன்.

"அப்படித்தான் ஆகிவிட்டது. பக்கத்திலேயே வீடு. எனக்கும் பொழுது போக வேண்டாமா?" அவள் இடப்பக்க அறையை ஒரு முறை நோட்டமிட்டுவிட்டு பூடகமான சிரிப்புடன் "அதெப்படி என்னை உனக்கு அடையாளம் தெரியாமல் போகும். புது மனைவி அருகில் இருந்தால் பழசெல்லாம் மறந்து போகுமா?" என்றாள் சன்னமான குரலில்... தொனியில் கேலியும் உரிமையும் இயைந்திருந்தது.

அவனுக்கு, உடனடியாக பதில் சொல்ல முடியவில்லை.

தற்செயலான சந்திப்புத் தான் அது. உமாவை சென்னையில் சந்திக்க நேரும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? உமாவுக்கும் சென்னைக்குமான உறவு குறித்த தகவல்கள் எதுவும் அவனுக்குக் கிடைக்கப் பெறவில்லை. மேலும் உமாவுக்கென்று சில அடையாளங்களும் அவனிடம் இருந்தன.

அவளுக்கு வயது பதினேழுதான். சற்றே நீள முகம். கல் கட்டிய புடலங்காயைப் போல் இடுப்புக்குக் கீழே தாழ்ந்து ஊசலாடும் ஒற்றைப் பின்னல்... உடம்பின் நெளிவு சுளிவுகளைத் துல்லியமாய்ப் புலப்படுத்தும் ஒடிசலான தேகம். அவனளவில், உமாவும் பள்ளிப் பருவமும் பிரிக்கவியலாத கூறுகள்.

எதிரே இருப்பவள் முற்றாகப் புதிய உமா! கன்னங்கள் செழித்த வட்ட முகம். நடு முதுகுடன் நின்று விட்ட கூந்தல். தேகத்தில் ஏற்றத் தாழ்வுகள் மறைந்த சற்றே தடிமனான உருவம். முக்கியமாக வயது முப்பத்தியொன்று. மனப்பதிவில் இருந்தவளுக்கும், எதிரே அமர்ந்திருப்பவளுக்குமான புற முரண்பாடுகளில் பதின்மூன்று ஆண்டுகள் இட்டு நிரப்பப்படாமலிருந்தன. அதுதான் சிக்கல்!

ஆனால் உமாவுக்கு அவனை அடையாளம் கண்டு கொள்வதில் சிக்கல் எதுவும் இல்லை. அத்தனை கூட்டத்திலும் கையசைத்து, தீர்மானமான குரலில் பெயர் சொல்லி அழைக்கத்தான் செய்தாள். அவள் அறிவுக்கு அது சாத்தியமாயிற்று. மனத்தளவில் கால இடைவெளியை இட்டு நிரப்பித் தயாராய் இருந்திருக்க வேண்டும். மனத்திரையில் அவன் உருவத்தை இயங்கியலாக வளர்த்து எடுத்து நாளது தேதியில் வைத்திருப்பாளாயிருக்கும்!

யோசித்துப் பார்க்கையில் அவனுக்குச் சற்று வெட்கமாகவும் இருந்தது. இரண்டாவது முறையாக அவளிடம் தோற்றாகி விட்டது!

முதல் முறை...?

உமாவின் அப்பாவுக்கு வேலை மாற்றலாகி ஊரைக் காலி செய்யும் போது...

"யோசித்துப் பார், உனக்கு வயது பதினேழுதான். முப்பது வயதில் நீ திருமணம் செய்து கொள்வதாயிருந்தால் அதுவரைக்கும் நான் காத்திருக்கத் தயார். மணப்பெண்ணுக்கும் முப்பது வயதென்றால் உனக்குப் பரவாயில்லையா?"

உமாவின் கேள்வி பெரும் அலையாய்த் திரண்டெழுந்து அவனைத் தன்னுள் சுருட்டிக் கொண்டது.

அவளது அன்பைப் புரிந்து கொள்ள அவனுக்கு வருடங்களாயிற்று. மனம் தொடர்பான 'காதல்' அது!

கடைசியில், உமா சொன்னது போலத்தான் நடந்தது. பட்டம் பெற்றாயிற்று! அரசு வேலையில் அமர்ந்த பின் தான் திருமணம் என்கின்ற பிடிவாதம் மட்டும் செல்லுபடியாகவில்லை. முப்பது வயதைக் கடந்த பிறகு, கல்யாணமும், விவசாயமும் அவனுக்குத் தவிர்க்க வியலாத விஷயங்கள் ஆகிவிட்டன. புது மனைவி வேணிக்கு வயது இருபதுதான் என்பது இப்போது மகிழ்வுக்குரிய விஷயமாகத் தோன்றுகிறது.

இடப்பக்க அறையிலிருந்து வேணியும்

# ஆண் புத்தி



## இரா. கண்ணன்

உமாவின் பத்து வயது மகள் வித்யாவும் கை கோத்துக் கொண்டு சிரிப்புடன் வெளிப் பட்டார்கள். வித்யா, சீருடை களைந்து வீட்டு உடைக்கு மாறியிருந்தாள். அசைவு களில் பள்ளிப் பருவத்து உமாவை நினைவூட்டினாள்.

உமா மிக இயல்பாக வேணியின் வலக் கையைத் தன் கைகளுக்குள் பொதிந்தெடுத்து மடியில் வைத்துக் கொண்டாள். வேணியின் மற்றொரு கை வித்யாவின் கைகளுடன் பிணைந்திருந்தது.

அவனிடம் குகம்புத்தனமான சிரிப்பு!

"என்ன...?" என்றாள் உமா அதட்டலாக.

"ஒன்றுமில்லை. அறிமுகமாகி இரண்டு மணி நேரமிருக்குமா? இந்த ஒட்டுதல் கொஞ்சம் மிகையில்லை?"

"புரியாது தான். ஆண்கள் ஆதிக்க வாதிகள். பிரித்துப் பார்க்கத்தான் தோன் றும். அதனால்தான் உலக வரைபடத்தில் அத்தனை எல்லைக் கோடுகள்."

உமா வேணியின் பக்கம் திரும்பி, "வித் யாவுடன் பேசிக் கொண்டிருங்கள், நான் ஏதாவது டிபன் தயாரித்து விடுகிறேனே!" என்று எழ யத்தனித்தாள்.

வேணி அவசரமாக உமாவின் கைகளைப் பற்றி அமர்த்தி விட்டு "இல்லை அக்கா, ரொம்ப நாள் கழித்து சந்தித்திருக்கிறீர்கள். நீங்கள் பேசிக் கொண்டிருங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று எழுந்து கொண்டாள்.

"உனக்கு எது எங்கே இருக்கிறதென்று தெரியாது. குதிரையும், சமையலறையும் புதியவர்களுக்கு ஒத்துழைக்காது. தெரியுமில்லை?'' என்றாள் உமா சிரித்துக் கொண்டே.

"பரவாயில்லை. வித்யா இருக்கிறாள் அல்லவா? சமாளித்துக் கொள்வேன்!"

வேணியும் வித்யாவும் அந்தப் பக்கம் நகர்ந்ததும் உமா கண்களால் சுட்டி, "பார்த்தாயா, இதுதான் பெண்கள்!" என்றாள் அவனைச் சீண்டுவது போல்.

பதிலுக்கு அவளை மடக்க வேண்டும் போல் தோன்றியது அவனுக்கு.

"சரி, எனக்குத்தான் உன் முகவரி தெரியாது. நான் ஊரில் தானே இருக்கிறேன்? நீயாவது எனக்குக் கடிதம் எழுதியிருக்கலாம் அல்லவா?"

இதற்கு அவள் உடனே பதில் சொல்லவில்லை. சுட்டு விரலால் நெற்றியை ஒருமுறை தேய்த்துக் கொண்டாள். பிறகு ஒரு சிரிப்புடன் அவன் கணகளை நேராகச் சந்தித்து "எழுதியிருக்கலாம் தான். ஆனால் நீ பதில் எழுதுவாய் அல்லவா? அதனால் தான்!" என்றாள்.

"ஏன்? நான் எதுவும் தவறாக எழுதிவிடுவேன் என்று நினைத்தாயா!"

"அது எனக்குத் தெரியாது!ஆனால் என் கணவர் தவறாகத்தானே எடுத்துக் கொள்ளக் கூடும்?"

"அப்படின்னா, ஒரு ஆணும் பெண்ணும் நண்பர்களாக இருக்கவே முடியாதா!"

''முடியாது என்றுதான் ஆண்கள் நினைக்கிறார்கள்!"

ராகவனுக்குப் பொறி தட்டியது. நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். உமா அவனைத் துளைப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அவள் கண்களைத் தவிர்க்க நினைத்து பார்வையைச் சமையலறை பக்கம் செலுத்தினான்.

மிகுந்த தயக்கத்திற்குப் பிறகு, ''உன் திருமண வாழ்க்கை சந்தோஷமாக அமையவில்லை என்று நினைக்கிறேன்!'' அவன் கண்கள் சமைலறையிலேயே நிலைத்திருந்தன.

உமா சற்று சத்தமாகவே சிரித்து விட்டாள்.

"பார்! இதுதான் ஆழம் பார்க்கின்ற புத்தி! நீ இப்படிப் பேசுவதன் நோக்கம் எனக்குப் புரியும். நான் ஆண்களின் பொதுப் புத்தியைத் தான் சொன்னேன்...!"

வேணியும் வித்யாவும் கையில் தட்டுகளுடன் முன்னே நின்ற போது, உரையாடல் முடிவுக்கு வந்திருந்தது.

கிளம்பும் போது உமா வேணிக்கு ரவிக்கைத் துண்டு கொடுத்தனுப்பினாள்.

அவர்கள் வீட்டையடைந்த போது ராகவனின் அக்கா பதற்றத்துடன் காத்திருப்பது தெரிந்தது.

கோவிலில் தற்செயலாக உமாவைச் சந்தித்ததையும் மற்ற விஷயங்களையும் அக்காவுக்கு விளக்க வேண்டியதாயிற்று! அவன் உமா பற்றிய செய்திகளில் ஆர்வம் காட்டாதது வேணிக்கு வியப்பளித்தது!

இரவு பத்து மணி!

அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் அவனும் வேணியும்...!

"உமாவைப் பத்தி என்ன நினைக்கிறே...?"

"என்ன நினைக்கணும்?" வேணி.


"இல்லே, தப்பா ஒண்ணும் நினைக்கலையே...!"

"தப்பா நினைக்க என்ன இருக்கு? எனக்கு அவங்களைப் பிடிச்சிருக்கு!"

ராகவன் நெற்றியில் மணிக்கட்டை வைத்து மல்லாந்து படுத்திருந்தான்.

சிறிது நேரம் பொறுத்து, "படிக்கும் போது உனக்கு யாராச்சும் ஃப்ரெண்ட் உண்டா?" என்றான் வேணியிடம்.

அவள் சற்று நேரம் யோசித்து விட்டு, "இல்லை!" என்றாள்.



''என்னை, என் வீட்டுக்காரர் ரொம்ப குறைச்சு எடை போடுறார்!''

''இப்படி ஒரு பிரச்னை வரும்னு நீ ரேஷன் கடைக்காரரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டப்பவே நினைச்சேன்!''

— பாளை பசும்பொன்

# இனி எல்லாமே ஈஸிதான்!

**இண்டர்வியூக்குப் போனா இங்கிலீஷ்,**
**ஈ-மெயில் அனுப்பணும்னா இங்கிலீஷ்,**
**கம்ப்யூட்டர் கத்துக்கணும்னா இங்கிலீஷ்,**
**கணவருடன் பார்ட்டிக்குப் போனா இங்கிலீஷ்,**
**பசங்க படிக்கற ஸ்கூலுக்குப் போனா இங்கிலீஷ்,**
**எங்கே போனாலும் இங்கிலீஷ்.. இங்கிலீஷ்.. இங்கிலீஷ்!**

என்ன... மற்றவர்கள் இங்கிலீஷில் பேசுவதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அவர்களிடம் உங்களால் சகஜமாக இங்கிலீஷில் பேச முடியவில்லை. ஏதாவது தவறாகப் பேசிவிடுவோமோ என்று தயக்கமாக இருக்கிறது!

**இதுதானே உங்க ப்ராப்ளம்? NO PROBLEM!**

உங்களது ஓய்வு நேரத்தில் தினசரி அரைமணி நேரம் செலவிட்டால் போதும்!

**ஸ்பீச் ஜெனரேட்டிங் ஃபார்முலா SGF™** அடிப்படையில் நாங்கள் அமைத்துள்ள ஓர் எளிய பயிற்சியின் மூலம் நீங்கள் சுலபமாக இங்கிலீஷ் பேசக் கற்றுக் கொள்ளலாம்.

கடந்த **22** ஆண்டுகளில் **15** லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் எங்களது **ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸின்** மூலம் பயனடைந்துள்ளனர்.

வீட்டிலிருந்தபடியே, ஓய்வு நேரத்தில் தினசரி அரைமணி நேரம் செலவிட்டு எங்களது பாடங்களைப் பிராக்டிஸ் செய்தால் போதும். **தயக்கமின்றி இங்கிலீஷ் பேச உங்களால் முடியும்.**

கீழே உள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். பாடங்களை V.P.P. மூலம் உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். தபால்காரரிடம் **ரூ.395/-** செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.

கோர்ஸ் பாடங்களை தினசரி அரைமணி நேரம் பிராக்டிஸ் செய்து, மடமடவென இங்கிலீஷில் பேச ஆரம்பியுங்கள்.



**இதோ கூப்பன்**

நானும் **விவேகானந்தாவின் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில்** சேர விரும்புகிறேன். எனக்குப் பாடங்களை V.P.P. மூலம் அனுப்புங்கள். தபால்காரரிடம் **ரூ.395/-** செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

..............................................பின்கோடு..............

கூப்பனை 15 நாட்களுக்குள் அனுப்புவோருக்கு பாடங்களுடன் 616 பக்கங்கள் கொண்ட இங்கிலீஷ்-தமிழ் டிக்ஷனரி இலவசம்.

**VIVEKANANDA INSTITUTE**

9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை - 600 017.

EKL

விவேகானந்தாவின்
**ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸ்**
இனி தடையேதுமில்லை
இங்கிலீஷ் பேச...

02 / TAM / 03 / NAGA





1

- திருவிழாவில் காணாமல் போன
ஒரு ரூபாய் கடிகாரத்திற்காக
உதை பட்டான்
'நேரஞ்சரியில்லாத' பையன்!

2

- வாழ்க்கையின் சந்தடியில்
எங்கோ ஒளிந்து
வழிப்பறிக்காரனைப் போல் வர
தருணம் பார்க்கிறது
மரணம்.





3

- நிச்சயமற்ற
நாளையைக் குறித்தே
திட்டமிடல்களனைத்தும்.

- நல்லதோ, கெட்டதோ
செய்தியெதுவாயினும்
பதறாமலழைக்கிறது
தொலைபேசி

4



# க வி தை !



5

- உச்சி வெயில்
மரத்தடியில் இளைப்பாறும்
நிழல்.

6


- வாஸ்து பார்க்க வழியில்லை
எந்தப்புரம் திரும்பினாலும் வாசல்
நடைபாதை வாசிக்கு.





7

- சவ ஊர்வலத்தில் பட்டாசுகளிடையே
வெடித்துச் சிதறும் ரோஜாக்களோடு
பூக்களைப் பற்றிய எனது கவிதையும்
செத்துப் போனது!



8

- சமையல் செய்யும் மனைவி
பாடம் படிக்கும் மகன்
பழுதாகி இருக்கும் தொலைக்காட்சி

① ⑦ → தேசியன்

② ③ ④ ⑤ ⑥ → ஜி. ஆரோக்கிய தாஸ்

⑧ → பா. ராஜா முஹம்மது

"கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளரா ஒரு எலெக்ட்ரிஷியனைத்தான் போடணும்னு தலைவர் அடம்பிடிக்கிறாரே, எதுக்கு?"

"கட்சியோட எதிர்காலம் பிரகாசமா இருக்கணுமாம்!"

- தஞ்சை தாமு





"அவைக்கு வருகிற புலவர்கள் எல்லாருமே வஞ்சப் புகழ்ச்சியாவே கவிதை பாடுறாங்களே! ஏன் அமைச்சரே?"

"நீங்க பரிசுத் தொகை அறிவிக்கிறதோட சரி, அது எதுவும் புலவர்கள் கைக்குப் போய்ச் சேர மாட்டேங்குதாம்!"

- ஆசுரா

# கஞ்ச மன்னா... வஞ்சரசே!



"அந்த டாக்டருக்கு எப்பவும் ஆஸ்பிட்டல் ஞாபகம்தான்னு எதை வச்சு சொல்றே?"

"மணி என்ன ஆகுதுன்னு கேட்டதுக்கு எதையும் இருபத்து நாலு மணி நேரம் கழிச்சு தான் சொல்ல முடியும்னு சொல்றாரே!"

- நெய்வேலி அ. கொளஞ்சி

"ஏம்பா கிளீனர்! கையில காசு இல்லாமல் அம்பது ரூபாய்க்குச் சாப்பிட்டால் இந்த ஓட்டலில் என்ன வேலை செய்யணும்...?"

"எனக்குத் தெரியாது சார்! நான் இருபது ரூபாய்க்குச் சாப்பிட்டுட்டு இப்பத்தான் இந்த வேலையில சேர்ந்திருக்கேன்..!"

- புன்னகை மன்னன்



# சுயம்

குளத்து பஸ் ஸ்டாண்ட் ஜனக் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. கனகசுப்புரத்தினம் எங்கெங்கும் சக்தியைக் கண்டானாம். ஆனால் எனக்கோ எங்கெங்கும் தடித்தடி மனுஷத் தலைகளாகவே தெரிந்தது.

எவ்வளவோ வருஷங்களுக்கு முன் அது அண்ணா பஸ் ஸ்டாண்ட் என்று பெயர் மாற்றம் பெற்று விட்ட போதிலும், என் வயதொத்தவர்களுக்கு அது இன்னமும் குளத்து பஸ் ஸ்டாண்ட்தான். அல்லியும் தாமரையும் படர்ந்திருந்த குளத்தை, கல்லையும் மண்ணையும் போட்டு நிரப்பி பஸ் ஸ்டாண்ட் ஆக்கி விட்டதை, கூட இருந்து பார்த்த நாற்பது ப்ளஸ் வயதில் இருக்கும் என் போன்றவர்களுக்கு, அதற்குள் அதன் பூர்வீகம் மறந்து விடுமா என்ன?

அவ்வப்போது மட்டுமே ஏதாவது ஒன்றிரண்டு நல்ல காரியங்கள் செய்யும் நகராட்சி போட்ட சோடியம் விளக்குகள், பஸ் ஸ்டாண்டிற்குள் நின்றிருந்த அத்தனை பயல்களின் தலையையும், தங்க முலாம் பூசியது மாதிரி மினுமினுக்க வைத்துக் கொண்டிருந்தன.

எனக்குக் கோபம் கோபமாய் வந்தது. என்ன எழவு ஊருடா இது. பைத்தியக்கார ஜனங்கள். ராத்திரி பத்து மணிக்கு அவனவன் வீட்டுக்குள் அடைஞ்சு கெடக்காம, பஸ் ஸ்டாண்டை கத்திட்டிருக்கானுவோ. அத்தனை ஜனக்கூட்டமும் என் பஸ்ஸுக்காக மட்டுமே காத்திருப்பதான பிரமை என்னுள்.

அத்தனைக் கூட்டமும் முண்டியடித்து பஸ்ஸுக்குள் ஏற, கடைசியில் நான் நின்று கொண்டே 'பயணம் செய்யும் நிலைமை வந்துவிட்டால்... இதுதான் என் கோபத்துக்குக் காரணம். நின்று கொண்டு பயணிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். பஸ்ஸுக்குள் ஏறவே இயலாது போய் விட்டால்... என் கதி என்னாவது? சொந்தத் துட்டைச் செலவழித்து லாட்ஜிலல்லவா தங்க வேண்டும்? முழங்கையைத் தலைக்கு அண்டைக் கொடுத்து பஸ் ஸ்டாண்டிலேயே படுத்துக் கொள்ளலாமென்றால், போலீஸ்காரன் தொல்லை வேறு. சந்தேகக் கேஸ், பிராத்தல் கேஸ் என்று எதையாவதும் சொல்லி உள்ளே வைத்து விடுவதற்கும் வாய்ப்பிருக்கிறது. நினைக்கும் போதே உஷ்ணப் பந்து ஒன்று வயிற்றுக்குள் உருண்டு மேலெழும்பியது.

எங்கள் ஊர் ராஜாக்கமங்கலத்துக்கு இதுதான் கடைசி பஸ். பத்து மணிக்கு குளத்து பஸ் ஸ்டாண்ட் ஸ்டார்ட்டிங் பாயிண்ட். பஸ்ஸை உருட்டு உருட்டென்று உருட்டி, இஷ்டம் போல் கொண்டு போய்ச் சேர்ப்பான்.

மணிக்கட்டைத் திருப்பி மணி பார்த்தேன். பத்தாகி பத்து நிமிடம் கழிந்து விட்டிருந்தது. ஐயைய்யோ. இனி வருவானா அல்லது பஸ் பிரேக் டவுன், டிரைவருக்குக் கையில் சுளுக்கு, என்று ஏதாவதும் நொட்டைக் காரணம் சொல்லி ட்ரிப்பைக் கட் பண்ணி விடுவானா? எனக்கு பயம் பிடித்துக் கொண்டது. எது எப்படியாகிலும் தொலையட்டும். இனி மணியைப் பார்ப்பது பிணி. நடப்பது நடக்கட்டும் என்று எனக்குள்ளே சமாதானமும் சொல்லிக் கொண்டேன்.

இதற்குள் ஒரு பெண் தன் இடுப்பில் சுமந்திருந்த ஒரு வட்டக் கூடையினால் என்னை ஒரு இடி இடித்து விட்டுப் போனாள். கன்ட்ரி லேடி என்கிற வார்த்தையோடு ஒரு கெட்ட வார்த்தையும் சேர்த்து அவளுக்குக் கேட்காதவாறு திட்டினேன். அவளைத் திட்டியபின் அவள் போவதையே சில நிமிடம் பார்த்துவிட்டு, நம்மை யாரும் கவனிக்கிறார்களா, என்று சுற்றிலும் கண்களைச் சுழற்றிய எனக்கு மெல்லிய அதிர்ச்சி.

அநேகமாய் இருபது கூட்டலில் (ப்ளஸ் ஸைய்யா.. ப்ளஸ்) நின்று கொண்டிருந்த இளவட்டங்களின் மத்தியில் நான் நின்று கொண்டிருக்கிறேன். எத்தனை பெரிய தவறு இது, என்று எனக்குள்ளே மெலிதான ஒரு நடுக்கம், பின் என்ன.. பஸ் வந்தாகி விட்டது என்று



நந்தன்

வைத்துக் கொள்வோம். அத்தனை இளவட்டப் பயல்களும் என்னை நெட்டிப் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஓடிப் போய் ஏறி விட மாட்டான்களாக்கும். அவர்களை விட இரண்டு மடங்குக் கிழவனான நான் அவர்களோடு எப்படிப் போட்டி போட்டு ஜெயிக்க முடியும்..?

நான் மரியாதையாய் நான்கு தப்படி எடுத்து வைத்து என் வயதையொத்த கிழவன்மார்களின் மத்தியில் வந்து நின்று கொண்டேன். அந்தக் கிழக் கூட்டத்தில் இரண்டொரு பெண்களும் இருக்க, என் புஜபல பராக்கிரமம் குறித்து எனக்கே ஒரு கிறக்கம் வந்தது.

பஸ்ஸுக்குள் முண்டியடித்து முன்னால் ஏறி ஸீட் பிடிக்க நான் இத்தனை முஸ்தீபுகள் செய்து கொண்டிருக்க, கூட்டம் மெது மெதுவாய்க் கலைந்து கொண்டிருந்த மாதிரி எனக்குத் தோன்றியது. எல்லாரும் இங்கே செட்டிக்குளம், பிள்ளைக்காட்டுவிளை, கோணம் என்று ஏறி இறங்கும் லோக்கல் கூட்டங்களாயிருக்கும். அதான் கிடைத்த பஸ்ஸில் ஏறிக் கொண்டு இடத்தைக் காலி செய்து கொண்டிருக்கிறதுகள். ஆனால் எனக்கு அந்தக் கொடுப்பினை இல்லை. பத்து மணிப் படுபாவி கண் திறந்தால் தான் உண்டு.

நான் மனம் வெதும்பிக் கிட்டி விட்டது அவனுக்கு உறைத்துவிட்டது போலும். பத்து மணிப் படுபாவி பத்து முப்பதைந்துக்கு வந்து சேர்ந்தான். நான் என் இரண்டு கைகளையும் மடக்கிக் கொண்டு, சுற்றியிருந்தவர்களை நெட்டித் தள்ளி, படிக்கட்டில் தாவியேறி உள்ளே புகுந்து விட்டேன், முதல் ஆளாய். யாரோ ஒருவன் உதட்டில் என் முழங்கை பட்டுவிட்டது போலும். அவன் உதட்டை கட்டை விரலால் அழுத்திக் கொண்டே "எருமை மாடு... எருமை மாடு." என்று வைது கொண்டிருந்தான்.

எவன் எப்படித் திட்டினால்

என்ன. நான் முதலில் ஏறி சொகுசாக ஒரு ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து கொண்டு, வெற்றிப் பெருமிதத்துடன் வெளியே நோட்டமிட்டேன்.

யாரோ ஒரு தடித்த ஆசாமி ஐம்பது மீட்டர் தூரத்திலிருந்து கையைக் கையை ஆட்டிக் கொண்டு, எங்கள் பஸ்ஸை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான். அவனது அத்தனை பெரிய ஆகிருதியின் அசைவையும், அவன் நெஞ்சுச் சதையின் குதியாட்டத்தையும் நான் ரசித்துக் கொண்டிருக்கும் போதே டிரைவர் பஸ்ஸை எடுத்துவிட்டார். தடித்த மனிதர் மூக்கினாலும் வாயினாலும் புஸ்ஸ" புஸ்ஸென்று காற்றை இறைத்துக் கொண்டு, வேகுவேகென்று ஓடி வந்து கொண்டிருந்தார்.

நான் உள்ளே திரும்பி கண்டக்டரைப் பார்த்தேன். கண்டக்டர் முன் வாசற்படிக் கருகில் நின்று கொண்டு மும்முரமாய் டிக்கட் கொடுத்துக் கொண்டிருந்தார். பஸ்ஸ"ம் மெதுவாக வேகமெடுக்க முனைந்தது.

கண்டக்டரைப் பார்த்து 'சார்... ஒரு ஆள் வருது' என்று ஒரு குரல் போதும். 'டக்' கென்று பஸ் நின்று தடி ஆசாமியும் ஏறி விடலாம். ஆனால் யார் குரல் கொடுப்பது? பஸ்ஸின் கடைக்கோடியில் உட்கார்ந்து கொண்டிருக்கும் நான், முன் வாசற்படிக் கருகில் நிற்கும் கண்டக்டரைப் பார்த்துக் குரல் கொடுத்தால், என் குரல் பஸ்ஸிலுள்ள அனைவருக்கும் கேட்கும். அத்தனை ஜோடி விழிகளும் என் மேல் வித்தியாசமான பார்வை ஒன்றைச் சிந்தும். என்னத்துக்கு தேவையில்லாமல். ஆட் மேன் அவுட். அதுவும் அடுத்தவனுக்காக.

நான் 'வெடுக்'கென்று உள்ளே திரும்பிக் கொண்டேன்.

அடே சந்திரசேகரா... இது நியாயமா? ஓடி வருபவனும் உன்னைப் போல் ஒரு மனிதன் தானே. பஸ் வராமல் போய் விடுமோ, என்கிற பயத்தில் சற்று முன்னால் நீ எத்தனை விசனப்பட்டாய். கண்ணில் கண்டு விட்ட பஸ்ஸை, அதுவும் கடைசி ட்ரிப்பை, தவற விடுவதென்பது எத்தனை கொடுமை! நாளைக்கு உனக்கும் இதே மாதிரியொரு நிலைமை வரலாமில்லையா..? ம்.. குரல் கொடு. பஸ்ஸை நிறுத்தச் சொல்.

'அடச்சீ. அவன் பக்கத்தில் எங்காவது போக வேண்டியவனாயிருக்கும். அதுக்குத் தான் பதினோரு மணி வரைக்கும் பஸ் இருக்கே. இதுல தான் வரணும்னு என்ன தேவை?'

பஸ் வேகம் பிடித்தது.

தடி ஆசாமியின் ஓட்டத்தில் ஒரு தொய்வு தெரிந்தது. இருந்தபோதிலும் அவனின் பலத்த கையசைப்பு, இன்னமும் கூட பஸ்ஸை நிறுத்தி ஏறிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது, என்று அவன் பூரணமாக நம்புவதாகச் செய்தி சொன்னது. ஜன்னலோரத்து மகானுபாவன்கள் ஒருவனின் கண்ணிலும் அவன் படவில்லை போலிருக்கிறது. எல்லாப் பயல்களும் சந்தோஷமாக இருப்பதாகவே எனக்குத் தோன்றிக் கொண்டிருந்தது. இவன், என் கண்ணில் மாத்திரம் பட்டுவிட்டு என் பிராணனை வாங்கிக் கொண்டிருக்கிறான், சுபோதிப்பயல்.

கடைசி முறையாய் இருக்கையினின்றும் எம்பி கண்டக்டரைப் பார்த்தேன்.

'தொலைகிறது போ. அவனுக்குக் கொடுத்து வைச்சது அவ்வளோதான். நடந்து வரட்டும். என்ன.. ஒரு எட்டு கிலோ மீட்டர் தானே. தடியன் நடக்கட்டும். உடம்பாவது குறையும்.'

பஸ் முழு வேகமெடுத்திருந்தது.

'ஜில்' லென்ற காற்று வேகமாய் முகத்தில் மோத, என் உடற் புழுக்கம் மாத்திரம் மெல்ல மெல்ல தளர்ந்து கொண்டிருந்தது. ●

''மக கல்யாணத்துக்கு தாம் தூம்னு செலவு பண்ணாதீங்கன்னு சொன்னதை அந்தாளு இவ்வளவு சீரியஸா எடுத்துப்பார்னு நான் நினைக்கவேயில்லை...''

''அப்படி என்ன செய்துட்டார்?''

''தாம்பூலப் பையில இலந்தம் பழம் போட்டுக் கொடுத்திருக்கார்!''

- சீர்காழி வி. ரேவதி





**பித்ரு தோஷ நிவர்த்தி வம்ச விருத்திக்கு வழிகாட்டும்!**

**தடைப்பட்ட திருமணம், பிள்ளைப்பேறு, கடன் தொல்லை நீங்கி ஆயுள் விருத்தியாக**

# பரிகார ஸ்தலமான இராமேஸ்வரத்தில்
# அமாவாஸை திதியில்
# அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். திருமாலின் அவதாரங்களான ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் இங்கு வந்து நீராடியதால் இராமேஸ்வரம் க்ஷேத்ரத்திற்கு மென்மேலும் பெருமை உண்டு. இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் அழியாத புண்ணியப் பலனை கொடுக்கும்.

இராமேஸ்வரத்தில் நீராடி அன்னதானம் செய்தால் கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகளில் நீராடிய புண்ணிய பலனும் ஒருசேர கிடைக்கிறது. இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். அனைவரும் நலம் பெறுவர். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். அன்னமளிப்பது அமிர்தமளிப்பதற்கு சமம். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். வறுமை நீங்கி, பெரும் பணக்காரனாவான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக வடை, பாயசத்துடன் அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறிய தொகை மற்றும் அரிசி போன்ற உணவுப் பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## நீங்கள் நினைக்கும் நாளில் இராமேஸ்வரத்தில் அன்னதானம்!

இராமேஸ்வரத்தில் நீங்கள் நினைக்கும் நாளில் அன்னதானம் செய்வதற்கு எமது அறக்கட்டளை சிறப்பான ஏற்பாடுகள் செய்துள்ளன. ஆகவே, நீங்கள் நினைக்கும் தேதியில் இராமேஸ்வரத்தில் அந்தணர்களுக்கும், சாதுக்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் அன்னதானம் செய்யலாம். ரூ.1000, ரூ. 5000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் அல்லது பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித சேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.


*CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :*

# கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

**GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST**

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA
☎: (044) 24900303, 24900603, 24416122 Fax: (044) 24916316

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து




ஒவ்வொரு குறிப்பும் உணர்த்தும் விடையை எதிரே உள்ள கோடுகளில் நிரப்புங்கள். வட்டத்துக்குள் உள்ள எழுத்துக்களை மட்டும் ஒழுங்குபடுத்தினால் விடைப் பகுதியில் உள்ள குறிப்பு உணர்த்துவது கிடைத்துவிடும்.

1. இலக்கியத்தில் மட்டும் பாலிலிருந்து நீரைப் பிரிக்கும் பறவை! ___ ___ ___ ○

2. சப்த ஸ்வரங்கள் நடத்துபவர் ○ ___ ___ ___

3. டல்லாஸ் நகரில் கொலை செய்யப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி ○ ___ ___ ___

4. தொலைக்காட்சியில் 'அசெம்ப்ளி' நடத்துபவர்கள் ___ ○ ○ ___

5. 'காதல்' சிற்பங்கள் உள்ள கோயில்களுக்குப் பெயர் போன மத்தியப் பிரதேச ஊர் ___ ○ ___ ___

6. குஷ்பூ நடத்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் இதை அடிக்கலாம் ___ ○ ___ ○

இந்தியாவில் இப்போது உச்சத்தில் உள்ள 'வியாதி'

___ ___ ___ ___ ___ ___ ___ ___

- ஜி.எஸ்.எஸ்.

---

1. அன்னம் 2. ரமணன் 3. கென்னடி 4. அரிகிரி 5. கஜுராஹோ 6. ஜாக்பாட்
விடை : கிரிக்கெட் ஜுரம்

# யூகிக்கு உடான்ஸ் கோப்பை!

இனி ஒரு மண்டலம் எல்லோருக்கும் உலகக் கோப்பை கிரிக்கெட் காய்ச்சல்தான். பற்பசை நிறுவனத்திலிருந்து, கொசுவர்த்தி நிறுவனம் வரை, ஜோதியில் கலந்து விட தமிழ் சேட்டிலைட் சேனல்கள் அந்த பவுண்டரி வட்டத்தைத் தாண்டி விலகி நிற்குமா என்ன? நையாண்டி தர்பாருக்கு அப்புறம், 'பஞ்ச தந்திரம்', 'ரமணா' என்று படங்களில் பிஸியாக இருந்த யூகிசேது மீண்டும் விஜய் தொலைக்காட்சியில் ஒன்பதரை மணிக்கு களம் இறங்கி விட்டார். யூகியுடன் World Cup! அவருக்கு பேட்டும், பந்தும், இந்திய அணியின் நோஞ்சான் நிலையும் வாகாக கைகொடுக்க, வாயிலிருந்து நகைச்சுவை ஸிக்ஸர்கள். சங்கீத ஸீஸன் இப்போது தானே முடிந்தது! அதன் சாயல் கொஞ்சம் இருக்கட்டுமே என்று கமெண்டரி, கர்நாடக சங்கீதம் இணைந்த ஃப்யூஷனில் அட்டகாசமான டைட்டில் ஸாங். 1950ம் வருடத்து ஹீரோ கெட்அப்பில் யூகி; ஸப்போர்ட்டுக்கு கிராஃபிக்ஸ் கலக்கலில் 'சிக்' பெண்கள். நேயர்கள் கேலரியிலிருந்து கூழல்களாகப் பாராட்டுக்கள்.

"உங்களுக்கு கிரிக்கெட்டெல்லாம் பரிச்சயம் உண்டா? நிறைய கோல் போட்டிருக்கிறீர்களா?" என்று நாம் கலாய்க்கத் துவங்கியவுடன், "ஸார்.. பள்ளியில் 'பில்லியார்ட்ஸ்' தவிர எல்லா ஆட்டமும் ஆடுவேன் தெரியுமா? அதுவும் கிரிக்கெட் டீமுக்கு நான் தான் காப்டன்" என்று ஸீரியஸாகிவிட்ட யூகியை, அவரது ஃபோர்முக்கு இறக்க வேண்டியதாகிவிட்டது.

"நையாண்டி தர்பாரின் எக்ஸ்டென்ஷன் போல இருக்கக் கூடாது" என்று தான் மோவாய்க் கட்டையில் தாடியோ?"

"அந்த தாடிக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் ஸிம்பாலிக் மெஸேஜ். வாய் இதழ்களோடு கறுந்தாடியை இணைத்துப் பார்த்தால் ஒரு கோப்பை வடிவம் கிடைக்கும். நமக்கு உலகக் கோப்பை கிடைக்கும் என்பதெல்லாம் வாய் உதார் தான், என்பது ஒரு மெஸேஜ். (டூ மச் யூகி! கைக்கும் வாய்க்கும் கப்புக்கும்!) இடையே பல தடங்கல்கள் என்பதையும் சொல்லும் வடிவம் அது" என்கிறார் யூகி.

ஐயா! உலகக் கோப்பை



கிரிக்கெட் மட்டும்தான் நம் மூளையை ஆக்ரமிக்கும் விஷயமா? மற்றப் பிரச்னையெல்லாம் இருக்குது. அயோத்தியாவிலிருந்து, காவிரி, பவானி, பட்டினிச்சாவு, பெட்ரோல் விலை உயர்வு, சாத்தான் குளம் என்று பெவிலியனில் பேட்டிங்குக்காக காத்திருக்கும் பிளேயர்கள் போன்று வரிசையாகப் பிரச்னைகள் காத்திருக்கின்றன என்பதை உணர்த்துவதுதான் யூகியின் ஐடியா. இதற்காகத்தான் விருந்தினர்களாக கிரிக்கெட் வாசனை தெரியாதவர்களை பெரும்பாலும் கூப்பிட இருக்கிறோம். நையாண்டி போல் ஒரேயடியாக டாக் ஷோவாக அல்லாமல், காமிரா அவுட்டோர் ஆட்டமும் ஆடுகிறது.

"நூறு மில்லியன் மக்களிடையே பதினோரு மோசமான ப்ளேயர்களைத் தேர்ந்தெடுக்க செலக்டர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் பாருங்கள்" என்று நக்கலடிக்கிறார் யூகி. நம் அணியின் தலைவிதியை நிர்ணயம் செய்ய, யூகி கிளி ஜோஸியர், நம்புங்கள் நாராயணன் என்று கூப்பிட்டு கரிசனத்துடன் விசாரித்திருக்கிறார். ஆனால் கிடைத்தது எதிர்பார்த்த பதில் தான். "1983ம் ஆண்டு வாங்கினோம். இப்போது இருபது ஆண்டுகளாகிவிட்டது. கனவாய், பழங் கதையாய் போய் விடுமோ கோப்பை" என்று அவர் கலங்கினாலும், நகைச்சுவைக் கலக்கல்களுக்கு இந்தியன் டீம் நிறையவே கைகொடுக்கிறது யூகிக்கு. (கங்குலிக்கு ரோஷம் வரட்டும்)

அவ்வப்போது யூகியின் உடான்ஸ்களும் உண்டு. 'பவுண்டரி லைன் எப்படி வந்தது தெரியுமா?" போன நூற்றாண்டில் ஒரு பாட்ஸ்மேன் அடித்த பால், மலையைத் தாண்டி அந்தப் பக்கம் போய் விழ, அதை எடுத்து வருவதற்குள் 274 ரன் ஓடிவிட்டார்களாம். அம்மாடி... இது தாங்காது என்று தான் பவுண்டரி லைனை உருவாக்கி, நான்கு ரன்னை ஒதுக்கினார்களாம். இது தவிர, செங்கல்பட்டு பக்கத்தில் கள்ளிக் கட்டை பொறுக்கிய பெண்ணை ஒரு வெள்ளைக்கார துரை குறுக்கு விசாரணை செய்ய, கள்ளிக் கட்டு, பின்னால் கிரிக்கெட் என்று வார்த்தை விளையாட்டில் மாறி விட்டதாம். காதில் பூக் கூடையை வைக்கும் இதுபோன்ற உடான்ஸ் களுக்கு யூகிக்குக் கோப்பை கொடுக்கலாம்.




"கிரிக்கெட்டில் இந்தியாவின் நிலையைப் பார்த்து நொந்து போக வேண்டாம் ஸார். உலக அளவில் நாம் மூன்றாவது இடத்தில் இருக்கிறோம்'' என்கிறார் யூகி.

''என்ன யூகி, ஸூப்பர் ஸிக்ஸில் கூட நமக்கு இடம் கிடைக்காது என்கிறார்கள். மூன்றாம் இடமா?'' என்றவுடன், ''ஆமாம் ஸார்... உலக விமன்ஸ் கிரிக்கெட்டில் நமக்கு மூன்றாம் இடம். உலகத்தில் மூன்றே நாடுகளில்தான் விமன்ஸ் டீம் இருக்கிறது தெரியுமா?''

— ப்ரியன்

படம் : ராம்சந்திரசேகர்

# இதெல்லாம் தேவையா?

சிறப்புக் கடிதம்

'கல்கி'யில் வெளிவந்த 'குவா குவா வங்கி' பற்றிப் படித்தேன். குழந்தை இல்லை என்ற நிலை கொடிதுதான். அதனினும் கொடிது யாருடைய விந்தையோ தானமாகப் பெற்று ஒரு பெண்ணைக் கருவுற வைப்பது.

எத்தனை குழந்தைகள் உலகில் ஜனித்து யாராவது தத்தெடுப்பார்களா என்று ஏக்கத்துடன் அனாதையாய்க் காத்திருக்கின்றன. அந்த மழலையை வாட விடாமல், தம் குழந்தையாய் எடுத்து வளர்த்தால் என்ன?

சம்பந்தப்பட்ட ஆண், இன்னொரு ஆணின் உதவியால் தன் மனைவிக்குப் பிறக்கும் பிள்ளையை ஏற்றுக் கொள்வான் என்றால், கணவனும் மனைவியுமாய் சேர்ந்து, ஏற்கெனவே பிறந்து விட்ட ஓர் அனாதைக் குழந்தையைத் தம் பிள்ளையாய் ஏற்றுக் கொள்ள முடியாதா...?



இதிலே பிள்ளை வேண்டும் என்ற ஏக்கத்தைவிட, மற்றவர்கள் தங்களை குறையுள்ளவர் என்று நினைக்கக் கூடாது என்ற சுயநலம் தான் பிரதானமாய்த் தெரிகிறது. இது நமக்கும் நம் வாழ்வு முறைக்கும் என்றும் ஒவ்வாத விஷயம்.

விந்து வங்கி இப்போது அமெரிக்காவில் பிரபலமாம். ஈராக் போருக்குப் போகும் அமெரிக்க வீரர்கள், தங்கள் விந்தை இப்போதே எடுத்து இந்த வங்கியில் வைக்கிறார்களாம். ஒரு வேளை கெமிக்கல் வார்ஃபேர் இருந்தால் தாங்கள் திரும்பியபின் குழந்தையை உருவாக்கும் சக்தி தங்கள் உடலுக்கு இருக்குமா என்னும் பயத்தில். இது போன்ற தனிப்பட்ட தேவைகளுக்காக மட்டும் தான் இந்த வங்கி இருக்க வேண்டும்.

அமெரிக்காவில் ஸ்வாமி விவேகானந்தர் பயணம் செய்தபோது "உங்களைப் போன்ற அறிவும் அழகும் வாய்ந்த மகன் எனக்குத் தேவை. நாம் திருமணம் செய்து கொள்ளலாமா?" என்று ஓர் அமெரிக்க மாது கேட்டாளாம். "என்னைப் போன்ற மகன் எதற்கு! அன்னையே, இன்றிலிருந்து என்னையே உங்கள் மகனாய் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றாராம் ஸ்வாமி விவேகானந்தர்.

இத்தகைய வேர்கள் உள்ள நாட்டில், இது போன்ற விந்து வங்கிகள் தேவையா?

— பாரதி பாஸ்கர்



பொறியியல் கல்லூரியில் தங்கள் மகனையோ மகளையோ சேர்த்துவிட வேண்டும் என்ற எண்ணத்திலிருக்கும் பெற்றோர்கள் திகைத்துப் போயிருக்கிறார்கள். சமீபத்தில் வெளியான உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாக, சுயநிதிக் கல்லூரிகளில் அனுமதி என்பது இனி வித்தியாசமான வடிவத்தைப் பெறும் என்பதால் அந்தக் கலக்கம்.

இந்த நிலை குறித்த பல கோணங்களை அண்ணா ஜெம்ஸ் அறிவியல் பூங்கா பள்ளியைச் சேர்ந்த கௌதம், கௌசிக், ஹரீஷ் ராம்மோகன், நிலன் சாய்கிருஷ்ணன் மற்றும் பால வித்யாமந்திர் பள்ளியைச் சேர்ந்த திப்தி, கௌசிக், நிரஞ்ஜன், ஜோசப் ஆகியோரும் கேள்விகளாகத் தொடுக்க, அர்த்தமுள்ள விடைகளை அடுக்குகிறார், அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தரான ஆனந்த கிருஷ்ணன்.


• சாய்கிருஷ்ணன்




• கௌஷிக்


• கௌதம்


• ஹரிஷ்ராம் மோகன்

**பொறியியல் கல்லூரிகளுக்கான நுழைவுத் தேர்வு குறித்த உங்கள் கருத்து என்ன சார்?**

இதைவிட ஒரு மிகப் பெரிய கொடூரம் நம் மாணவர்களுக்கு இருக்க முடியாது. உலகிலேயே வேறு எந்த நாட்டிலும் பள்ளிப் படிப்பை முடித்த ஒரு மாணவன் இந்த அளவுக்குப் பலவித நுழைவுத் தேர்வுகளை எழுத வேண்டிய கட்டாயம் இருக்காது. ஐ.ஐ.டி.க்காக, அண்ணா பல்கலைக் கழகத்துக்காக, ஜிப்மருக்காக, ராணுவ மருத்துவப் பயிற்சிக்காக, ரூர்க்கிக்காக, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்துக்காக என்று ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி நுழைவுத் தேர்வு. ப்ளஸ் டூ தேர்வை முடித்தோமா, கொஞ்சம் நிம்மதியாக இருந்தோமா என்றில்லாமல் தொடர்ந்து நுழைவுத் தேர்வுகள்.

அண்ணா பல்கலைக் கழகத்தின் நுழைவுத் தேர்வு மதிப்பெண்களைப் பார்த்தால், அரை மதிப்பெண் கம்மியாக எடுத்தாகூட நூற்றுக்கணக்கில் ராங்க் தள்ளிப் போய் விடுகிறது எனும் நிலை. இதில் லாஜிக் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வைரம் மற்றும் தங்கம் போல அவ்வளவு துல்லியமாகவா மதிப்பெண்கள் மதிப்பிடப்படுகின்றன?


**உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பொறியியல் கல்லூரிகளில் சேரும் விஷயத்தில் ஒரு பெரிய குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கிறதே?**

சிறுபான்மையினர் நடத்தும் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில் அரசு தலையிடக் கூடாது என்கிறது உச்ச நீதிமன்றத் தீர்ப்பு. சிறுபான்மையினர் மட்டுமல்ல, அரசு நிதியுதவி செய்யாத பிற கல்லூரிகளுக்கும் இது பொருந்தும். நீதிமன்றம் ஒரு அனுமானத்தில் இது போன்றத் தீர்ப்பைக் கொடுத்திருக்கிறது.

• திப்தி



• எஸ். கௌஷிக்



• ஜோசப்



இந்தக் கல்லூரிகள் எல்லாம் நேர்மையான முறையில் செயல்பட்டு, திறமையுள்ள மாணவர்களுக்கு அட்மிஷன் கொடுக்கும் என்பதுதான் அந்த அனுமானம்.

**ஆக இந்த நீதிமன்றத் தீர்ப்பால் மாணவர்களுக்கு எந்தவித அநீதியும் நடந்துவிடாது என்கிறீர்களா?**

நான் நீதிமன்றத்தின் அனுமானத்தைத்தான் சொன்னேன். இது உண்மையாகுமா என்பது கேள்விக்குறி. பல வருடங்களுக்கு முன்பே கூட, பல தனியார் கல்லூரிகள் தமிழ் நாட்டில் இயங்கி வந்திருக்கின்றன. சென்னையில் லயோலா, எத்திராஜ், விவேகானந்தா மற்றும் கிறித்தவக் கல்லூரிகள், திருச்சியில் உள்ள நேஷனல் கல்லூரி போன்றவை தனியாரால் தொடங்கப்பட்டவைதான். இதுபோன்ற பல கல்லூரிகளைத் துவங்கியவர்கள் கொடை வள்ளல்களாக இருந்தார்கள். சமூக அக்கறை கொண்டவர்களாக இருந்தார்கள். தங்கள் பூர்வீக சொத்துக்களை விற்று இது போன்ற கல்வி நிறுவனங்களை நல்லெண்ணத்தோடு நிறுவினார்கள்.

ஆனால் இன்று இது போன்றவர்கள் இருக்கிறார்களா? சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளை நடத்துபவர்கள் யார்?



• ஆனந்த கிருஷ்ணன்

# இன்ஜினியரிங்:

# மாணவர்களின் மனித உரிமைப் பிரச்னை!

கல்வியாளர்களா? எட்டாம் வகுப்பைத் தாண்டாதவர்கள் எல்லாம் பொறியியல் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். கைநாட்டுப் பேர்வழிகள் கூட இதில் உண்டு. அரசியல்வாதிகளும் 'வேறு' ஆர்வத்தினால் இது போன்ற கல்லூரிகளை நடத்துகிறார்கள். நிர்வாகக் குழுவில் தங்கள் மருமகள், பேரப்பிள்ளை ஆகியோரையெல்லாம் சேர்த்துக் கொண்டு, அது ஏதோ குடும்ப அமைப்பு போல் செயல்படுகிறார்கள். இவர்கள் நோக்கம் கல்வியல்ல, வியாபாரம். இதனால்தான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை இவர்கள் எப்படி அமல்படுத்தப் போகிறார்கள் என்பது கவலையைத் தருகிறது.

இப்போதே கூட பல தனியார் பொறியியல் கல்லூரிகளில் ஆசிரியர்கள் தரமானவர்களாகவோ, அனுபவம் உள்ளவர்களாகவோ இல்லை. காரணம் அவர்கள் கொடுப்பது மிகக் குறைந்த சம்பளம். நேற்றுதான் பி.ஈ. முடித்தவர்கள் கூட இந்தக் கல்லூரிகளில் பாடமெடுக்கிறார்கள். கல்வித்தரம் எப்படி இருக்கும்? தங்கள் கல்லூரியிலிருந்து, குறைந்தது இவ்வளவு சதவிகித மாணவர்களாவது தேர்ச்சி பெற்றால்தான் கல்லூரிக்கான அங்கீகாரம் தொடரும் என்பதால், இவர்களாகவே மதிப்பெண்களை அள்ளிப் போட்டுக் கொண்டார்கள். இப்போது அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் இந்தக் கல்லூரிகள் வந்த பிறகு, அந்த மாணவர்கள் தேர்வு எழுதுவதிலும், மதிப்பெண் பெறுவதிலும் பல பிரச்னைகளைச் சந்தித்து வருகிறார்கள்.

**இதுவரை தமிழ்நாட்டில் உள்ள எல்லா பொறியியல் கல்லூரிகளுக்குமான பொதுவான 'ஒற்றைச்சாளர அனுமதித் தேர்வை' அண்ணா பல்கலைக் கழகம் நடத்தி வந்தது. இப்படி அறிமுகமாவதற்கு முன் நிலைமை எப்படி இருந்தது?**

1996ல் இது அறிமுகமானது. பொதுவான நுழைவுத் தேர்வு என்பது ஆந்திரம், கர்நாடகம், கேரள மாநிலங்களிலும் உண்டு என்றாலும், மாநிலத்தின் அத்தனைப் பொறியியல் கல்லூரிகளுக்கான அட்மிஷனுக்கும் ஒரே வித அமைப்பு என்பது தமிழகத்தில்தான் அறிமுகமானது. அதற்குமுன் ஒவ்வொரு மாணவனும் தான் சேர விரும்பும் மூன்று நான்கு பொறியியல் கல்லூரிகளின் பெயரை விண்ணப்பதிலேயே வரிசைப்படுத்துவான். இந்தச் செயல்பாட்டில் உள்ள பலவித குறைகளைக் கூட, இந்த சிங்கிள் விண்டோ அட்மிஷன் என்ற முறை தீர்த்து வைத்தது.

**அப்படியிருக்கும்போது அதை மாற்றும்படி ஏன் உச்சநீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும்?**

அதுதான் நீதிமன்றத்தின் அனுமானத்தைச் சொன்னேனே. தவிர வேறு மாதிரிச் சொன்னால் அது நீதிமன்ற அவமதிப்பாகிவிடும்.

லஞ்சம் தலைவிரித்தாட வாய்ப்பு உண்டே! பணம் கொடுப்போருக்கு கேள்வித் தாளை முன்னதாகவே லீக் செய்துவிடலாம். ஓரிரு லட்சங்கள் நன்கொடையாகவோ, வேறுவிதமாகவோ கொடுத்தால் வெற்றுத்தாளை சரியான பதில்கள் அடங்கிய தாள்களாக மாற்றி வைக்கலாம். பின்னாளில் யாராவது பொதுவான கண்காணிப்பாளர் கேள்வி கேட்டால் "நுழைவுத் தேர்வுக்கான விடைத்தாள்களை முன்பே எரித்துவிட்டோமே" என்பது போன்ற பதிலைக் கூறலாம்.

இப்போதே கூட அடிப்படையான தொகையை அரசு நிர்ணயித்திருந்தாலும், நூலகக் கட்டணம், பேருந்துக் கட்டணம், கான்டீன் கட்டணம் என்ற பெயரில் பல தனியார் கல்லூரிகள் எக்கச்சக்கமாகக் கட்டணங்களைத் தீட்டுகின்றன. இவற்றில் ரசீது கூடத் தராமல் அடிக்கும் கொள்ளைகள் உண்டு. அட்மிஷனும் முழுவதும் அவர்கள் கையில் என்று வந்துவிட்டால், அவர்களுக்கு மேலும் வசதி. தேர்வுக்கான ஹால் டிக்கெட்டைப் பெறுவதற்கு முன் தினம், குறிப்பிட்ட தொகையைக் கட்டினால்தான் அதைத் தருவோம் என்று கூடக் கூறலாம். ஏதோ பயமுறுத்துவதற்காக இதையெல்லாம் சொல்லவில்லை. என்னுடைய நீண்ட அனுபவத்தில் நான் கண்ட பல நிகழ்வுகளை வைத்துக் கொண்டுதான் கூறுகிறேன்.

சி.பி.எஸ்.ஸி. சிலபஸைப் படிக்கும் மாணவர்களுக்கு, பொறியியல் கல்லூரிகளுக்கான நுழைவுத் தேர்வு இப்போதே கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது. காரணம் மாநில அரசுப் பள்ளிகளில் ப்ளஸ்டூவுக்கு உள்ள

''டிராஃபிக் சிக்னல் ஜம்ப் பண்ணினதுக்கு வழக்கமா வாங்கற மாமூல விட ரெண்டு மடங்கு கேட்கறீங்களே...''

''இது சாலைப் பாதுகாப்பு வாரமாச்சே!''

– அம்பை தேவா


பாடத் திட்டத்தின்படிதான் நுழைவுத் தேர்வில் கேள்விகள் வடிவமைக்கப்படுகின்றன. இந்த விஷயங்களில் சீர்திருத்தம் வேண்டாமா?

முதலில் ப்ளஸ் டூவில் வாங்கின மதிப்பெண்களை நம்பாமல் மீண்டும் நுழைவுத் தேர்வு நடத்துவதே தவறானது என்பேன். இத்தனைக்கும் பொதுத் தேர்வுகளை நடத்துவது அரசுதானே? பல்வேறு விதமான பாடத் திட்டங்களுக்கிடையே உள்ள வேற்றுமைகள் மறையும் வகையில், முதலில் சில அடிப்படை சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். இதையெல்லாம் செய்யாமல், மாறி மாறி மாணவர்களைத் தேர்வெழுத வைப்பது என்பது அநியாயமானது. சொல்லப்போனால், நீங்கள் எல்லாம் நேரே தேசிய மனித உரிமைக் கமிஷனிடம் சென்று உங்கள் துன்பங்களைக் கூறி வழக்குத் தொடுக்கலாம் என்று கூடத் தோன்றுகிறது.

தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 250 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. தனித்தனியாக ஒரு மாணவன் இவற்றில் பல கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு எழுதுவது சாத்தியமல்ல. வெளியூருக்குச் சென்று எழுத வேண்டியிருக்கும். ஒரே நாளில் இரு கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு இருந்துவிட்டால்?

**இப்போதே அத்தனை பொறியியல் சீட்களும் நிறையவில்லை என்கிறார்கள். அப்படியிருக்க சுயநிதிக் கல்லூரிகள் இப்படிக் கெடுபிடி செய்தால் மாணவர்கள் சேருவது மேலும் குறையாதா? அவர்களுக்குத் தானே நஷ்டம்?**

நகர்ப்புறங்களில் உள்ள, ஓரளவு பெயர் பெற்ற கல்லூரிகளுக்குக் கவலையில்லை. அதே சமயம் முன்னேறாத மற்றும் முன்னேறிக் கொண்டிருக்கும் தனியார் கல்லூரிகள், இந்த வருடத்திலிருந்து மிகக் குறைவான கட்டணத்தை வாங்கி மாணவர்களைச் சேர்த்துக் கொண்டால், போட்டி அதிகமாகி விடுமே என்ற அச்சத்தினால், இந்தக் கல்லூரிகள் ஒரு குழுவாகக் கூடி ஒரே மாதிரியான (அதிகப்படி!) கட்டணத்தை நிர்ணயிக்கலாம் என முடிவெடுக்க வாய்ப்பு உண்டு.



**அமெரிக்காவில் பல கல்லூரிகள் மாணவர்களை அழைத்துச் சேர்த்துக் கொள்கின்றன. பலவித ஸ்காலர்ஷிப்களும் கிடைக்கின்றன. இங்கு ஏன் வேறு மாதிரியான நிலை?**

அமெரிக்காவில் எந்தக் கல்லூரியாக இருந்தாலும், ஒரே குறிப்பிட்ட நுழைவுத் தேர்வில் வாங்கிய மதிப்பெண்தான் கணக்கெடுத்துக் கொள்ளப்படும். பத்தாவதிலிருந்து பன்னிரண்டாவது படிக்கும்வரை, இந்தத் தேர்வை எப்போது வேண்டுமானாலும் எழுதும் சாய்ஸ் மாணவருக்கு உண்டு. அதிக மதிப்பெண் பெறுவதற்காக தொடர்ந்து இதே தேர்வை எழுதலாம். தங்கள் கல்லூரியின் புகழ் மிக முக்கியம் என்று கருதுவதால், தகுதி மற்றும் திறமை வாய்ந்த மாணவர்களை அமெரிக்கக் கல்லூரிகள் கூவியழைக்கின்றன.

**ப்ளஸ் டூ பாஸ் செய்திருந்தாலே, பொறியியல் கல்லூரியில் இனி அனுமதிப்போம் என்று தனியார் கல்லூரிகள் ஒரு புறம் கூற, முன்பு போல் குறைந்தது ஐம்பது சதவீதம் ப்ளஸ் டூ தேர்வில் பெற்றிருந்தால் மட்டுமே அந்த மாணவர்களுக்கு அண்ணா பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் உண்டு என்று கூறுகிறார்கள். எது சரியான நிலை?**

இது ஒரு பெரிய பிரச்னையாக எனக்குப் படவில்லை. திறந்தவெளிப் பல்கலைக் கழகம் எனும்போது, யார் வேண்டுமானாலும் ஒரு தேர்வை எழுதலாம் என்கிற நிலை இல்லையா என்ன? அந்த விதத்தில் ப்ளஸ் டூ தேர்வில் குறைந்த மதிப்பெண்ணில் தேர்ச்சி பெற்ற ஒருவனால் நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற முடியும்தான். ஆனால் தனியார் கல்லூரிகளின் மேற்படி நிலைப்பாட்டின் நோக்கம்தான் அச்சத்தைத் தருகிறது.

*(வருங்காலத்தில் பொறியியல் படிப்புக்கு என்ன மதிப்பு இருக்கும்? எது போன்ற கல்வித் துறைகளைத் தேர்ந்தெடுப்பது புத்திசாலித்தனமானது? படிக்கும்போதே வேறெந்த விஷயங்களில் கவனம் செலுத்தினால் மாணவர்களின் வருங்காலம் உன்னதமான இருக்கும்? மாணவர்களின் இது போன்ற கேள்விகளுக்கு டாக்டர் ஆனந்த கிருஷ்ணனின் ஆக்கபூர்வமான பதில்கள் - அடுத்த இதழில்)*

தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்.**

படங்கள் : **ஸ்ரீஹரி**

# சிவகாமியின் சபதம்



## நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

## புலிகேசியின் வாக்குறுதி

புலிகேசி சக்கரவர்த்தி முகத்தில் புன்னகையுடன், ''அடிகளே! தங்களுடைய பிக்ஷு விரதத்துக்கு நாட்டியப் பெண் சிவகாமியினால் பங்கம் நேராமலிருக்கலாம். ஆனால், நம்முடைய தென்னாட்டுப் படையெடுப்புக்கு அந்தப் பெண் தெய்வத்தினால் பங்கம் நேர்ந்து விட்டது!'' என்றார்.

பிக்ஷு வியப்பும் கோபமும் கலந்த குரலில், ''அது எப்படி? படையெடுப்புக்கும் சிவகாமிக்கும் என்ன சம்பந்தம்? மகேந்திர பல்லவனுடைய சூழ்ச்சித் திறமையினால் அல்லவா நமது உத்தேசம் நிறைவேறவில்லை?'' என்று கேட்டார்.

''அடிகளே! மகேந்திரனுடைய சூழ்ச்சித் திறனுக்குத் தங்களுடைய சூழ்ச்சித் திறன் குறைவானதா? யுத்தரங்கத்தில் நாம் சில சமயம் தோல்வியடைந்திருக்கிறோம். ஆனால், அரசியல் தந்திரத்தில் இதற்கு முன்னால் எப்போதாவது நாம் தோல்வியடைந்ததுண்டா? சிவகாமியிடமோ, அவளை ஆட்கொண்ட கலைத் தெய்வத்திடமோ தங்களுக்கு மோகம் ஏற்பட்டிராவிட்டால், மகேந்திர பல்லவன் தங்களைச் சிறைப் பிடித்திருக்க முடியுமா? தங்களுடைய திருவுள்ளத்தைப் பரிசோதனை செய்து உண்மையைச் சொல்லுங்கள்!''

இவ்விதம் புலிகேசி கூறியபோது பிக்ஷுவின் முகத்தில் தோன்றிய கோபக்குறி மறைந்து, வெட்கம் கலந்த பிடிவாதம் காணப்பட்டது.

தரையை நோக்கித் தலையைக் குனிந்த வண்ணம், ''சக்கரவர்த்தி! இந்த அறிவிழந்த பிக்ஷுவை மன்னித்து விடுங்கள்! சாம்ராஜ்யத்தின் தொண்டுக்கு நான் இனித் தகுதியில்லாதவன். இத்தனை காலமாய் நான் செய்திருக்கும்

அமரர் கல்கி

சேவையை முன்னிட்டு மன்னித்து விடுதலை கொடுங்கள்!'' என்றார் பிக்ஷு.

''அண்ணா! இது என்ன விளையாட்டு?''

''இல்லை, தம்பி! விளையாட்டு இல்லை. உண்மையாகத்தான் சொல்கிறேன். எனக்கு விடை கொடு; நான் போகிறேன்.''

''எங்கே போவதாக உத்தேசம்?''

''எங்கேயாவது மனிதர்களுடைய கண் காணாத இடத்துக்குப் போகிறேன். அஜந்தாவைப் போன்ற இன்னொரு மலைப் பிரதேசத்தைக் கண்டு பிடித்து அதற்குள்ளே, உள்ளே, உள்ளே யாரும் எளிதில் வர முடியாத இடத்துக்குப் போய்விடுகிறேன். அங்கே சிவகாமியை நடனம் ஆடச் சொல்லிப் பார்த்துக் கொண்டே என் மிகுதி ஆயுளைக் கழித்து விடுகிறேன்.''

''அண்ணா! அப்படித் தனியாகச் சிவகாமியை நீ கொண்டு போய் வைத்துக் கொண்டிருந்தால், அந்தப் பெண் நடனம் ஆடுவாளா?''

''கலைஞர்களின் இயல்பு உனக்குத் தெரியாது, தம்பி! பெரிய சாம்ராஜ்யத்தை ஆளும் சக்கரவர்த்தியின் அதிகாரத்தினால் சிவகாமியை ஆடச் சொல்ல முடியாது. ஆனால், நிற்க நிழலில்லாத இந்த ஏழை பிக்ஷுவினால் சிவகாமியை ஆடச் செய்ய முடியும்.''

''ஓஹோ!''

''ஆம், தம்பி! அதனாலேதான் நான் உன்னைப் போல் வேஷம் தரித்திருக்கும் வரையில் அவளை நடனம் ஆடச் சொல்லவில்லை.''

''அண்ணா! இந்தப் பைத்தியம் உனக்கு வேண்டாம். சிவகாமியைக் காஞ்சிக்கே திருப்பி அனுப்பி விடுகிறேன். இல்லாவிட்டால் நம் தளபதிகளில் யாராவது ஒருவனுக்கு அவளைக் கல்யாணம் செய்து கொடுத்து விடுவோம்.''

பிக்ஷுவின் கண்களில் கோபக் கனல் பறந்தது. ''தம்பி! சிவகாமியைப் பெண்டாளும் எண்ணத்துடன் அவள் அருகில் நெருங்குகிறவன் யமனுலகம் போக ஆயத்தமாயிருக்க வேண்டும்'' என்றார்.

''அண்ணா! மாமல்லன் யமனுலகம் போய் விட்டானா?'' என்று புலிகேசி பரிகாசக் குரலில் கேட்டார்.

''இல்லை; அந்த நிர்மூடன் அதைக் காட்டிலும் கொடிய தண்டனையை இந்த உலகிலேயே அனுபவிக்கப் போகிறான். கேள், தம்பி! மாமல்லனை இந்தக் கையினாலேயே கொன்று விடத் தீர்மானித்திருந்தேன். இரண்டு மூன்று தடவை சந்தர்ப்பங்களும் வாய்த்தன. ஆனால், கடைசி நேரத்தில் என் மனத்தை மாற்றிக் கொண்டேன்.''

''ஆகா! நீ மட்டும் உன் மனத்தை மாற்றிக் கொள்ளாமல் மாமல்லனைக் கொன்றிருந்தால், பல்லவ இராஜ்யத்தில் இப்போது வராகக் கொடி பறந்து கொண்டிருக்கும். மகேந்திர பல்லவனும் மதுரைப் பாண்டியனும் நம் காலின் கீழ் கிடப்பார்கள்.

''ஒருவேளை அப்படி ஆகியிருக்கலாம். ஆனால், சிவகாமியைத் தன்னுடைய சுகபோகப் பொருளாக்கிக் கொள்ள நினைத்த மாமல்லனுக்கு அது தக்க தண்டனையாகியிராது.''

''இப்போது என்ன தண்டனை?''

''அவனுடைய ஆருயிர்க் காதலியைச் சளுக்கர் கொண்டு போன செய்தி வாழ் நாளெல்லாம் அவனுக்கு நரக வேதனை அளிக்கும். இரவு பகல் அவன் மனத்தை அரித்துக் கொண்டிருக்கும். இதைக் காட்டிலும் அவனுக்குத் தண்டனை வேறு கிடையாது.''

''நல்லது, அண்ணா! இப்போது என்ன சொல்கிறாய்?''

''இராஜரீக விவகாரங்களிலிருந்து அடியோடு விலகிக் கொள்வதாகச் சொல்கிறேன். இருபத்தைந்து வருஷம் உனக்காகவும் சாம்ராஜ்யத்துக்காகவும் உழைத்தேன். இனிமேல் சிலகாலம் எனக்காக வாழ்கிறேன். தம்பி! எனக்கு விடை கொடு! எங்கேனும் ஏகாந்தமான பிரதேசத்தைத் தேடிச் செல்கிறேன்.''

''அண்ணா! இராஜ்ய விவகாரங்களிலிருந்து விலகிக் கொள். அதற்காகக்

காடு மலை தேடிப் போக வேண்டாம். வாதாபியிலேயே ஒரு நல்ல மாளிகையைப் பார்த்து எடுத்துக் கொள். வேண்டுமானால் அதில் ஒரு நடன மண்டபமும் கட்டிக்கொள். சிவகாமி அதில் ஆனந்தமாய் நடனமாடட்டும்; நீ பார்த்துக் கொண்டே இரு."

"தம்பி! மெய்யாகச் சொல்கிறாயா? இதெல்லாம் எனக்காக நீ செய்து தரப் போகிறாயா?"

"நிச்சயமாகச் செய்து தருகிறேன். ஆனால், அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது."

"நிபந்தனையா? என்னிடமா கேட்கிறாய், தம்பி!"

"நிபந்தனைதான்; ஆனால், உன்னிடம் நான் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளும் நிபந்தனை; உன்னைத் தவிர யாரும் செய்ய முடியாத காரியம். எனக்கு இந்தக் கடைசி உதவியை நீ செய்து கொடு. அப்புறம் உன்னை நான் ஒன்றும் கேட்பதில்லை."

"அது என்ன?"

"சற்று முன் சொன்னேனே, அதுதான். வேங்கியில் விஷ்ணுவர்த்தனன் படுகாயப்பட்டுக் கிடப்பதாகச் செய்தி



வந்திருக்கிறது. நாடெல்லாம் கலகமும் குழப்பமுமாய் இருக்கிறதாம். நீ அங்கு உடனே போய் அவனைக் காப்பாற்ற வேண்டும். என்னைப் போல் விஷ்ணுவும் உன் உடன் பிறந்த சகோதரன்தானே?"

"உடன் பிறந்த சகோதரன்தான். ஆனால், அவனுக்கு என்னைக் கண்டால் பிடிப்பதே இல்லை! அவனிடமிருந்து நான் பாரவியைப் பிரித்து விரட்டிய குற்றத்தை அவன் மன்னிக்கவே இல்லை..."

"அண்ணா! பாரவி கவியை ஏன் விஷ்ணுவிடமிருந்து நீ பிரித்தாய்? அதனால் எப்பேர்ப்பட்ட விபத்துக்கள் நேர்ந்தன!"

"எல்லாம் அவனுடைய நன்மைக்காகத்தான் செய்தேன். அவன் ஓயாமல் கவிதை படித்துக் கொண்டும் எழுதிக் கொண்டும் வீண்பொழுது போக்கிக் கொண்டிருந்தான்..."

புலிகேசி புன்னகை புரிந்தார். மனத்திற்குள், "என் உடன் பிறந்தவர்களில் இரண்டு பேரில் ஒருவனுக்குக் கவிதைப் பைத்தியம்; இன்னொருவனுக்குக் கலைப் பைத்தியம். புத்தி மாறாட்டம் இல்லாதவன் நான் ஒருவன்தான். அன்று விஷ்ணுவைக் காப்பாற்றியதுபோல் இன்று பிக்ஷுவை நான் காப்பாற்றியாக வேண்டும்" என்று எண்ணிக் கொண்டார். பின்னர் கூறினார்.

"ஆம், அண்ணா! அவனுடைய நன்மைக்காகவே செய்தாய். உன்னுடைய விருப்பத்தின்படி நான்தான் பாரவியை நாட்டை விட்டுப் போகச் சொன்னேன். ஆனால், அதன் பலன் என்ன ஆயிற்று? பாரவி கங்க நாட்டுக்குப் போனான். அங்கிருந்து துர்விநீதனுடைய மகளைப் பற்றி வர்ணித்து விஷ்ணுவுக்குக் கலியாணம் செய்து வைத்தான். பிறகு காஞ்சி நகருக்குப் போனான். அங்கிருந்து காஞ்சி நகரைப் பற்றி வர்ணனைகள் அனுப்பிக் கொண்டிருந்தான். அதனால் காஞ்சி சுந்தரியின் மேல் எனக்கு மோகம் உண்டாயிற்று."

"அந்தப் பழைய கதைகளையெல்லாம் எதற்காகச் சொல்கிறாய்?"

"உனக்குப் பிடிக்காவிட்டால் சொல்லவில்லை. ஆனால் இந்தக் கடைசி உதவியை நீ எனக்குச் செய்துவிடு, அண்ணா! நாம்தான் காஞ்சியைக் கைப்பற்ற முடியாமல் திரும்புகிறோம். வேங்கியிலிருந்து விஷ்ணுவர்த்தனனும் தோல்வியடைந்து திரும்பினால் அதைக்காட்டிலும் நம்முடைய குலத்துக்கு அவமானம் வேண்டியதில்லை. இந்த ஒரே ஓர் உதவி மட்டும் செய்துவிடு. உன்னுடன் நமது பாதிப் படையை அழைத்துக் கொண்டு போ!"

புத்த பிக்ஷு சற்று யோசித்துவிட்டு, "ஆகட்டும், தம்பி; ஆனால், எனக்கு ஒரு வாக்குறுதி தர வேண்டும்!" என்றார்.

"சிவகாமியைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்பதுதானே? அப்படியே வாக்குறுதி தருகிறேன். இத்தனை காலமும் நீ எனக்குச் செய்திருக்கும் உதவிகளுக்கு இதுகூட நான் செய்ய வேண்டாமா? வாதாபியின் அழகான அரண்மனை ஒன்றில் அவளைப் பத்திரமாய் வைத்து நீ, வரும் வரையில் பாதுகாத்து ஒப்புவிக்கிறேன்."

"தம்பி! சிவகாமி கலைத் தெய்வம்; அவளிடம் துராசையுடன் நெருங்குகிறவன் அதோகதி அடைவான்."

"அதை நான் மறக்க மாட்டேன். ஆனால், நடனக் கலையைப் பற்றி நீ சொல்லச் சொல்ல எனக்கே அதில் ஆசை உண்டாகிவிட்டது. சிவகாமியை நடனம் ஆடச் சொல்லி நான் பார்க்கலாமா?"

"அவள் ஆடமாட்டாள்."


"அவளாக இஷ்டப்பட்டு ஆடினால்..."

"எனக்கு ஆட்சேபமில்லை."

"மிகவும் சந்தோஷம்."

"தம்பி! நம்முடைய பாட்டனாருக்குச் சத்யாச்ரயர் என்று பட்டம் கொடுத்தார்கள். அதே பட்டப் பெயர் உனக்குக் கிடைத்திருக்கிறது. ஒரு விஷயத்திலாவது உன் பட்டப் பெயருக்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டும்."

"சத்தியமாகச் சிவகாமியைப் பத்திரமாய்ப் பாதுகாத்து உன்னிடம் ஒப்புவிக்கிறேன்."




இவ்விதம் புலிகேசிச் சக்கரவர்த்திக்கும், புத்த பிக்ஷுவுக்கும் நடந்த நீண்ட சம்பாஷணை முடிவடைந்தது.

அன்றிரவு இரண்டாவது ஜாமத்திலே தான் இருவரும் சிவகாமி அரைத் தூக்கமாய்ப் படுத்திருந்த இடத்துக்குச் சென்று நிலா, வெளிச்சத்தில் நின்று, அவளைப் பார்த்தார்கள்.

## நாற்பத்து நான்காம் அத்தியாயம்

# நள்ளிரவுப் பிரயாணம்

மணிமங்கலம் போர் நடந்து ஏறக்குறைய ஒருமாத காலம் மகேந்திர பல்லவர் உணர்வற்ற நிலையில் படுத்த படுக்கையாய்க் கிடந்தார். போர்க்களத்தில் அவர் மீது பாய்ந்து காயப்படுத்திய கத்தி விஷந்தோய்ந்த கத்தி, என்று தெரிய வந்தது. அரண்மனை வைத்தியர்கள் சக்கரவர்த்தியைக் குணப்படுத்த எவ்வளவோ





பிரயத்தனப்பட்டும் தக்க பலன் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் திருவெண்காடு நமசிவாய வைத்தியர் வந்து சேர்ந்தார். தளபதி பரஞ்சோதி திருவெண்காட்டுக்கு ஆள் அனுப்பி அவரை வரவழைத்தார். நமசிவாய வைத்தியருடைய சிகிச்சை விரைவில் பலன் தந்தது. மகேந்திரருடைய அறிவும் தெளிவு பெற்றது.

அறிவு தெளிந்ததும் மகேந்திர பல்லவர் முதன்முதலாக ஆயனர் - சிவகாமியைப் பற்றி விசாரித்தார். ஆயனர் கால் ஒடிந்து கிடக்கிறார் என்றும், சிவகாமியைச் சளுக்கர்கள் சிறைப்பிடித்துச் சென்றார்கள் என்றும் தெரிந்ததும் அவர் அடைந்த மனக்கலக்கத்திற்கு அளவே இல்லை. அதனால் குணமான உடம்பு மறுபடியும் கெட்டுவிடுமோ என்று பயப்படும்படி இருந்தது.

மாமல்லர் தந்தையைப் பார்க்கச் சென்றபோது, அவரை முன்னொரு நாள் ஆயனர் என்ன கேள்வி கேட்டாரோ, அதையே மகேந்திரரும் கேட்டார். "நரசிம்மா! சிவகாமி எங்கே?" என்றார்.

நரசிம்மர் மிக்க வேதனையடைந்தவராய், "அப்பா! அதைப் பற்றி இப்போது என்ன கவலை? முதலில் தங்களுக்கு உடம்பு நன்றாய்க் குணமாகட்டும்!" என்றார்.

"மாமல்லா! சிவகாமியிடம் நீ காதல் கொண்டதாகச் சொன்னதெல்லாம் வெறும் வார்த்தை என்று இப்போது தெரிகிறது. இதோ நான் கிளம்புகிறேன், சிவகாமியைக் கண்டுபிடித்துக் கொண்டுவர!" என்று சொல்லிய வண்ணம் மகேந்திர பல்லவர் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றார்.

மாமல்லர் வெட்கமும் பரபரப்பும் கொண்டவராய்க் கூறினார்: "அப்பா! தங்களுக்கு உடம்பு குணமாவதற்காகவே காத்திருந்தேன். தாங்கள் என்ன சொல்வீர்களோ என்று சந்தேகமாயிருந்தது. தாங்களே இப்படிச் சொல்லும்போது..."

"வேறு என்ன நான் சொல்வதற்கு இருக்கிறது மாமல்லா? ஆயனருடைய சிற்பத் திறமையும், சிவகாமியின் நடனத் திறமையும் இமயத்திலிருந்து இலங்கை வரையில் பரவியிருக்கின்றன. அப்படிப்பட்ட சிவகாமியை அந்த வாதாபி ராட்சதன் கொண்டு போய்விட்டான் என்றால், அதைக் காட்டிலும் பல்லவ குலத்துக்கு வேறு என்ன அவமானம் வேண்டும்? அப்படிப்பட்ட அவமானத்தைச் சகித்துக் கொண்டு உயிரோடிருப்பதைக் காட்டிலும், போர்க்களத்திலேயே என் உயிர் போயிருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும்."

"தந்தையே! இப்படியெல்லாம் பேச வேண்டாம்; தங்களுக்கு உடம்பு குணமானதும் தங்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படுவதற்கு நானும் தளபதியும் ஆயத்தம் செய்திருக்கிறோம்..."

"என்ன ஆயத்தம் செய்திருக்கிறீர்கள்?"

"படை திரட்டிச் சேர்த்திருக்கிறோம்."


"புத்திசாலிகள்தான்! படைகளுடன் சென்றால் சிவகாமியையும் கொண்டு வர மாட்டீர்கள்; நீங்களும் திரும்பி வர மாட்டீர்கள்."

மாமல்லர் வியப்புடன், "அப்பா வேறு என்ன செய்வது? தங்களுடைய யோசனை என்ன?" என்றார்.

"பரஞ்சோதியையும், சத்ருக்னனையும் அழைத்துக் கொண்டு வா! என்னுடைய யோசனையைச் சொல்கிறேன்" என்றார் மகேந்திரர்.

அவ்விதமே மாமல்லர், பரஞ்சோதி, சத்ருக்னன் ஆகியவர்கள் அன்று மாலை சக்கரவர்த்தியிடம் வந்தபோது, அவர் தமது யோசனையைக் கூறினார். பரஞ்சோதியும் சத்ருக்னனும் மாறுவேடம் பூண்டு வாதாபிக்குப் போய்ச் சிவகாமியை அழைத்து வர வேண்டும் என்பதுதான் அந்த யோசனை. அப்படித் திருட்டுத்தனமாய்ப் போய்ச் சிவகாமியை அழைத்துக் கொண்டு வருவது பற்றி முதலில் மாமல்லர் ஆட்சேபித்தார். திருட்டுத்தனமாய்க் கொண்டு போகப்பட்டவளை அதேமுறையில் திருப்பிக் கொண்டு வருவதில் தவறில்லை என்று மகேந்திரர் சொன்னார். அதோடு அவ்விதம் இப்போது ஒரு தடவை வாதாபிக்குப் போய்விட்டு வருவது பின்னால் அவர்கள் வாதாபி மேல் பகிரங்கமாகப் படையெடுத்துப் போவதற்கும் அநுகூலமாயிருக்கும் என்று மகேந்திர சக்கரவர்த்தி தெரிவித்தார்.

வாதாபி மீது படையெடுக்கு



## அருள்வாக்கு!

கண்ணுக்கு டான்ஸ், காதுக்குப் பாட்டு, மனஸுக்கு நவரஸங்கள் என்பதாக இந்த்ரிய ஸௌக்யங்களைத் தருவதாகத் தோன்றினாலும் இந்த வித்தைகள் ஸாமவேதத்தை அடிப்படையாகக் கொண்டு உண்டானவை என்பதனாலேயே இவற்றுக்குப் பெருமை ஏற்படுகிறது. வேதங்களுக்குள்ளே தாம் ஸாமமாயிருப்பதாகவும் பகவானே சொல்லியிருப்பதால் இன்னும் பெருமை! மற்ற உபவேதங்களுக்கு, அவற்றுக்கு மூலமாவுள்ள வேதத்தோடு உள்ள ஸம்பந்தத்தை விட காந்தர்வ வேதத்துக்கு ஸாம வேதத்தோடுள்ள ஸம்பந்தம் இன்னும் நெருக்கமாக



எல்லோருக்குமே தெரிகிறது. ஸாமகானத்தின் ஸ்வரங்களிலிருந்துதான் ஸப்த ஸ்வரமும் உண்டாயிருக்க வேண்டுமென்று ஸாமகானத்தைக் கேட்கிற எவருக்கும் தெரிகிறது. ஸாமகானம் என்று பெயர் இருப்பதிலிருந்து, அதுவே ஸங்கீத, வித்யையுடன் சேர்ந்ததுதானென்று தெரிகிறது. லலிதா ஸஹஸ்ர நாமத்தில் 'ஸாம கான ப்ரியா' என்று அம்பிகைக்கு ஒரு பெயர் சொல்லியிருக்கிறது. சிவனுக்கான அஷ்டோத்தரத்திலும் 'ஸாம ப்ரியாய நம:' என்று ஒரு பெயரைச் சொல்லி விட்டு, உடனே இது அதன் கான விசேஷத்துக்காகத்தான் என்று தெரிவிக்கிறாற்போல், அடுத்ததாக 'ஸ்வரமயாய நம:' என்ற நாமாவைக் கொடுத்திருக்கிறது. மஹா விஷ்ணுவான ஸ்ரீ க்ருஷ்ணன் தம்மை வேதங்களில் ஸாமம் என்று சொல்லிக் கொண்டிருப்பதாகவும் பார்த்தோம்.

இதிலிருந்தே ஸங்கீதம் முதலான காந்தர்வக் கலைகளுக்குள்ள தெய்விகத் தன்மை தெரிய வரும். உபவேதங்களுக்குள் மநுஷ்யனை ரொம்பக் கீழான கேளிக்கைகளுக்கு இழுத்துச் செல்லக் கூடியது என்று தோன்றுகிற காந்தர்வ வித்யையேதான் அவனை ரொம்ப மேலே இழுத்துக் கொண்டு போய், அப்படியே ஈஸ்வரனோடு ஐக்யமாயிருப்பதற்கும் உதவுகிறது.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்**

யோசனை மகேந்திர பல்லவருக்கு இருப்பது தெரிந்ததும் மாமல்லருக்கும் உற்சாகம் உண்டாகித் தம்முடைய ஆட்சேபங்களையெல்லாம் நிறுத்திக் கொண்டார். எல்லாம் பேசி முடிந்ததும் மாமல்லர் எழுந்து, தந்தைக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, "அப்பா! தளபதியுடன் நானும் போய் வருகிறேன். கருணை கூர்ந்து அநுமதி கொடுக்க வேண்டும்!" என்று கெஞ்சுகிற குரலில் விண்ணப்பம் செய்தார்.

மகேந்திரர் முதலில் இதை மறுதலித்தார். கடைசியில், மாமல்லரிடம் முரட்டுத்தனமான காரியங்களில் இறங்குவதில்லை என்பதாகவும், எல்லா விஷயங்களிலும் தளபதி பரஞ்சோதியின் ஆலோசனைப்படி நடப்பதாகவும் உறுதி பெற்றுக் கொண்டு, விடை கொடுத்தார்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு நடுநிசி வேளையில், காஞ்சி அரண்மனை முற்றத்தில் ஆறு குதிரைகள் மீது ஆறு பேர் ஆரோகணித்துப் பிரயாணத்துக்கு ஆயத்தமாய் நின்றார்கள். தாடி, மீசை வைத்துக் கட்டிக் கொண்டிருந்த அந்த வேஷதாரிகள் மாமல்லர், பரஞ்சோதி, சத்ருக்னன், குண்டோதரன், கண்ணபிரான், அவனுடைய தந்தை அசுவபாலர் ஆகியவர்கள்தான்.

அப்படி நின்ற அறுவரும் அரண்மனை மேல்மாடத்தின் முன்றிலை அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் அந்த முன்றிலுக்கு மகேந்திர சக்கரவர்த்தியும் புவனமகாதேவியும் வந்து சேர்ந்தார்கள்.

"புறப்படுங்கள்; ஜயத்துடன் சீக்கிரம் திரும்புங்கள்" என்று மகேந்திர பல்லவர் கூறியதும் மாமல்லரும் பரஞ்சோதியும் அவர்களைப் பார்த்து வணங்கிவிட்டுக் குதிரைகளைத் தட்டிவிட்டார்கள்.

குதிரைகள் அரண்மனை வெளி வாசலைக் கடந்து வீதிக்குப் போனதும், புவனமகாதேவியை மகேந்திர பல்லவர் பார்த்து, "தேவி! இராஜ குலத்தில் பிறந்ததற்குத் தண்டனை இது!" என்று சோகம் ததும்பும் குரலில் கூறினார்.

(தொடரும்)

# அழகும், ஆரோக்கியமும் ('உடல் மெலிய')



பலருக்கு உடல் எடை என்பது தலையாயப் பிரச்சினை. குண்டாக இருப்பதால் பலவித நோய்கள் வருகிறது. சில டாக்டர்கள் உடல் எடையைக் குறைத்துவிட்டு பிறகு மருந்து கொடுக்கிறேன் என்று சொல்லி விடுவார்கள். இதற்கு என்ன செய்வது? சிலர் 'டயட்' என்ற பெயரில் சாப்பிடாமல் உடலை மிகவும் வீக்காக்கிக் கொள்வார்கள். இதனால் இன்னும் நோய்கள் சேருகின்றது. உடல் மெலிய மிக முக்கிய அம்சமாகக் கருதப்படுவது "வாக்கிங்". தினமும் காலையில் 1½ மணி நேரம் மாலை 1½ மணி நேரம் "வாக்கிங்" போவது நல்லது. வாக்கிங் போகும் நேர்த்தை மாற்றக்கூடாது. வெளியில் வாக்கிங் போக முடியாத சூழ்நிலையில் உள்ளவர்கள் மொட்டை மாடியிலோ (அ) வீட்டைச் சுற்றியோ போகலாம்.

இனி உடல் மெலிய என்ன 'டயட்' எடுக்கலாம் என்பதை பார்க்கலாம். வாரத்திற்கு 2 தடவை வாழைத்தண்டு ஜூஸ் சாப்பிடலாம். இதை வெறும் வயிற்றில் சாப்பிட்டால் 1 மாதத்தில் வேண்டாத நீர் வற்றி உடல் மெலிந்து பார்க்க அழகாக இருக்கும்.

அன்னாசி பழத்தை சிறு துண்டங்களாக்கி 4 ஸ்பூன் ஓமத்தூளை போட்டு 2 டம்ளர் தண்ணீருடன் இரவே கொதிக்க வைத்து மூடி, பகலில் இதை மிக்ஸியில் போட்டு அடித்து 1 டம்ளர் ஜூஸ் எடுத்துச் சாப்பிட பெரிய வயிறு நீர் வற்றி சின்னதாக பார்க்க நன்றாக இருக்கும். இந்த ஜூஸை தொடர்ந்து 10 நாள் சாப்பிடவும். வெந்நீர் நிறைய குடிக்க வேண்டும். நெய், வெண்ணை, தாளித்த பதார்த்தங்கள், டீ, காபி ஆகியவற்றை அறவே அருந்தக் கூடாது. நொறுக்குத் தீனியும் சாப்பிடக் கூடாது. ஆடை நீக்கிய பால், தயிர், இளநீர் சாப்பிடலாம். உப்பு, சர்க்கரை குறைக்கவும். ஆவியில் வேக வைத்த இட்லி, இடியாப்பம், காய்கறிகளை சாலடாகவும், சாப்பிடுவது நல்லது. தக்காளி ஜூஸ் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். உடம்புக்கும் நல்லது. உடலும் மெலியும். இவை அனைத்தையும் 30 வயதுக்கு மேலே செய்து ஆரம்பித்தால் உடல் என்றும் மெலிந்து அழகாக இருக்கும். குண்டாக இருந்து உடல் உடனே இளைக்க விரும்புகிறவர்களுக்கு நாங்கள் 9 வகையான மூலிகைகளைக் கொண்டு 'Sun Herbs' என்ற இயற்கை உணவை தயாரிக்கிறோம். அதிலுள்ள பொருட்கள் உடலை எப்படி மெலிய வைக்கிறது என்பதை பார்ப்போம்.

முதலில் இதிலுள்ள நெல்லிக்காய் வைட்டமின் C. இது உடலுக்கு சுறுசுறுப்பையும், சோர்வில்லாமல் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது. அடுத்தது கடுக்காய் பவுடர். இது கிருமிநாசினி. அதனால் வயிற்றிலுள்ள புண், தொண்டைப் புண்களையும் சரி செய்து, வராமல் தடுக்கிறது. அடுத்து வாழைத்தண்டு, தான்றிக்காய் _ இது உடலிலுள்ள வேண்டாத நீரை எடுத்து விடும். அடுத்து ஆவாரம்பூ, உடலுக்கும் கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரும். இதயத்திற்கு நல்லது. சர்க்கரையைக் கட்டுப்படுத்தும். செம்பருத்திப் பவுடரில் தங்க சத்து உள்ளது. இது மேனியை தங்க நிறத்தில் ஜொலிக்கச் செய்யும். உடல் உஷ்ணம் தணியும். படபடப்பு போகும். ரத்த விருத்தியாகும். இதயத்திற்கு மிகவும் நல்லது. இதை மாதிரியே தாமரையும் இதயத்தை வலுவடையச் செய்யும். அடுத்து வேப்பிலை _ சிறந்த கிருமிநாசினி. இந்த 9 வகையான மூலிகைகளையும் சரியான விகிதத்தில் கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பவுடரில் 1½ ஸ்பூன் எடுத்து ½ டம்ளரில் லேசாக கரைத்து, வெறும் வயிற்றில் முடிக்க வேண்டும். மீதி டம்ளரில் இருக்கும் பவுடரில் 1 டம்ளர் தண்ணீரைக் கொட்டி குடிக்க வேண்டும். பிறகு ½ மணி நேரம் வாக்கிங் (அ) உடற்பயிற்சி (அ) குனிந்து நிமிர்ந்து வேலை செய்துவிட்டு பிறகு காபி(அ) உடல் மெலியும் கஞ்சியை குடிக்க வேண்டும். ஒரு மாதத்தில் நிச்சயம் உடல் மெலியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக மனதை தூய்மையாகவும், டென்ஷன் இல்லாமலும் வைத்துக் கொள்ள வேண்டும்.

குண்டாக உள்ளவர்கள் எடை குறைய வேண்டுமானால், காலை எழுந்தவுடன் 5 நிமிடங்கள் தியானம் செய்ய வேண்டும். அவ்வாறு தியானம் செய்யும் போது இன்னும் 10 நாட்களில் 'எடை குறைக்க என்னால் முடியும்' என்ற வார்த்தைகளை 12 தடவை மனதில் திரும்ப, திரும்ப சொல்வதால் மனதில் படிந்து முகத்தில் திருப்தி வந்து விடும். இவ்வாறு தன்னை தயார்படுத்திக் கொண்டு, மேலே கூறிய அனைத்தும் செய்யும்போது நீங்களும் மெலிந்து அழகாக மாறலாம்.

உடல் மெலிய 'Sun Herbs' பவுடரும், கஞ்சி பவுடரும், மூலிகை பேஸ்பேக்கும், முடி வளர, இளநரை பொடுகு போக மூலிகை எண்ணெய்க்கும், இஞ்சி, மாதுளை, நன்னாரி போன்ற 'fresh juice'க்கும் **'அழகும் ஆரோக்கியமும்'** என்ற புத்தகத்திற்கும் அணுகுங்கள்.


**திருமதி. ஆர். பானுமதி,**
7/2, மன்னார் தெரு, சதாசிவம் பிளாட், (தி. நகர் பஸ் ஸ்டாண்ட் எதிரில்)
போன்: 24338748, 52127875


**HERBAL TEA AVAILABLE for Synes, Gastric, Asthma, Diabetic & Weight reduction.**

Advt



சின்னத் திரையில் 'அண்ணி' முடிந்த பின், ஆரம்பிக்கப் போகிற கே. பாலசந்தரின் அடுத்த மெகா தொடர் 'சஹானா'. இது, 'சிந்து பைரவி'யின் இரண்டாம் பாகம். கடந்த நாற்பது நாட்களாக பாலசந்தர் படு பிஸி. இலேசான டென்ஷனுடனும், அபரிமிதமான உற்சாகத்துடனும், தொடரை இயக்கிக் கொண்டிருக்கிறார்...



# சிந்து

"சிந்து பைரவி வெளியாகி, வெற்றி பெற்று, சில வருஷங்கள் கழித்து, எனக்கு அந்த ஐடியா வந்தது. இரண்டாம் பகுதிக்காக ஒரு கதையை உருவாக்கி, பின் ஒரு விதத் தயக்கம். இரண்டாம் பாகத்தை எத்தனை சிறப்பாகக் கொடுத்தாலும், முதல் படம் போல இல்லை என்று சொல்லி விடுவார்களோ என்ற எண்ணம் ஏற்பட்டது.

"ஆறு மாதங்களுக்கு முன்பு, யதேச்சையாக, 'சிந்து பைரவி' இரண்டாம் பாகத்தின் கதை எழுதி வைத்த ஃபைல் என் கண்ணில் பட்டது. படித்துப் பார்த்த போது, சுவாரசியமாக இருந்தது. இந்தக் கதையை சினிமாவாக எடுப்பதுதான் ரிஸ்க்கேயொழிய, டி.வி தொடராகச் செய்ய முடியும் என்று நினைத்தேன்."

*"இரண்டாம் பாகத்தில் சிவகுமார், சுகாசினி இரண்டு பேருமே நடிக்கவில்லையாமே?"*

"ஆம்! 'அண்ணாமலை' டி.வி தொடரில் சிவகுமார் பிஸியாக இருப்பதால், இதற்குத் தேவையான அளவுக்குத் தேதிகள் தர அவரால் முடியவில்லை. சுகாசினி நடிக்க



• வரதராஜன், ஷைலஜா

# பைரவி-II



• ஒய்.ஜி. மகேந்திரன், சுலக்ஷணா...

சம்மதித்தார். ஆனாலும் சிவகுமார் இல்லாத போது, சுகாசினியை மட்டும் பயன் படுத்திக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை. எனவே, ஒய்.ஜி. மகேந்திரனும், கர்நாடக இசைப் பாடகி அனுராதா சுரேஷ் கிருஷ்ணமூர்த்தியும் நடிக்கிறார்கள். பைரவியாக, சுலக்ஷணா நடிக்கிறார். படத்தில் இருந்த ஏறத்தாழ மற்ற எல்லா கேரக்டர்களும், சீரியலிலும் இருக்கிறார்கள். உபரியாக சில கதாபாத்திரங்கள்! ரேணுகாவுக்கு மறுபடி ஒரு வித்தியாசமான கேரக்டர் கொடுத்திருக்கிறேன்."

"சிந்து பைரவியின் கடைசிக் காட்சியில், சிந்து, ஜி.கே.பி தம்பதிக்குக் கொடுத்து விட்டுப் போவாரே, அந்தப் பெண் குழந்தையின் கதைதான் இந்த டி.வி தொடரா?"

"படத்தில் சிந்து கொடுத்து விட்டுப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்று நான் சொல்லவில்லை. எனவே அது ஒரு ஆண் குழந்தை என்று இந்தக் கதையில் வைத்துக் கொண்டு விட்டேன். ஆகவே, சஹானா, ஜி.கே.பி தம்பதிக்கு, சிந்து கொடுத்து விட்டுப் போன குழந்தையில்லை."


"அப்படியென்றால் சஹானா யார்?"

"விடை கடைசியில் சொல்கிறேன்!"

"ஆரவாரமாய்த் தொடங்கப்பட்ட ஐந்து எபிசேட் மைக்ரோ தொடர்கள், வரவேற்புப் பெறாமல் போனதற்கு என்ன காரணம்?"

"தொடர்களை ஸ்பான்சர் செய்யும் பெரிய நிறுவனங்களின் ஆதரவு இல்லாமல் போனதுதான் முக்கியக் காரணம். மைக்ரோ தொடரை ஓரிரு நாட்கள் பார்க்க முடியாமல் போனால், 'பரவாயில்லை! அடுத்த வாரம், வேறு மைக்ரோ தொடரைப் பார்த்துக் கொள்ளலாம். இதை மிஸ் பண்ணினால் நஷ்டமில்லை, என்று பொதுமக்களும் நினைக்கிறார்கள். இதனால்தான் அந்த கான்செப்டே அடிபட்டுப் போனது."

"சமீபத்தில் ஒரு புத்தக வெளியீட்டு விழாவில், 'சினிமா போலவே, டி.வியும் சீக்கிரமே உருப்படாமல் போகும்' என்று ரொம்பவும் மனம் வெதும்பிப் பேசினீர்களே!"



• ராகவேந்திரா - மணிமாலா

"இங்கேயும் குறுகிய காலத்தில் நிறைய பணம் பண்ண வேண்டும் என்கிற எண்ணம் மேலோங்கி விட்டது. சினிமாவிலிருந்து ஒதுக்கப்பட்டு, சும்மா இருந்த பலருக்கு இன்று டி.விதான் வாழ்வு அளித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இங்கே சின்சியாரிடி குறைந்து கொண்டு வருகிறது. டபுள் மீட்டர், டிரிபிள் மீட்டர் என்றெல்லாம் குறியீடுகளில் பேசிக் கொள்கிறார்கள் (ஒரே தேதியை இரண்டு, மூன்று பேருக்குக் கொடுத்து விட்டு, இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம் என்று நேரத்தை அட்ஜஸ்ட் பண்ணி, ஒரே நாளில் இரண்டு, மூணு மடங்கு சம்பாதிப்பது). ஈடுபாடு இல்லாமல், பணமே பிரதானமாகிப் போனால், அப்புறம் எது தான் உருப்படும்?

"அடுத்த சினிமா?"

"முழுக்க முழுக்க நியூஜிலாந்தில் ஒரு படம் எடுக்கத் திட்டமிட்டிருந்தேன். நாற்பது, ஐம்பது பேர் கொண்ட படப்பிடிப்புக் குழு சுமார் அறுபது நாட்கள் போல நியூஜிலாந்தில் தங்கி, படம் பிடிப்பது என்றால், பெரிய பட்ஜெட் படமாகி விடும். அது கொஞ்சம் ரிஸ்க்! எனவே, அந்தக் கதையை அப்படியே வைத்திருக்கிறேன். அதைப் படம் எடுப்பேன். எப்போது என்பது சஸ்பென்ஸ்!"

"சரி! சஹானா யார்?"

குழந்தையை ஜி.கே.பி. தம்பதியிடம் கொடுத்து விட்டு, மலேஷியா போய்விடும் சிந்து, அங்கே சந்திக்கிற பெண்தான் சஹானா!"

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

---

## ஏக்கம் தீர்ந்து போச்சு!

"அடேயப்பா... எத்தனை நாள் ஆசை... இப்பத்தான் நிறைவேறுச்சு" என்று நெஞ்சில் கை வைத்து கண்களை அகல விரித்து,



சந்தோஷ ரஸம் காட்டினார் சுகன்யா. நோ, டும் டும் இல்லை; இது ஜலக் ஜலக் விஷயம்!

ஜெயா டி.வியில் 'தகதிமிதா' நிகழ்ச்சியை, இனி சுகன்யா வழங்கப் போகிறார். அஃப்கோர்ஸ், புதிய மாற்றங்களுடன்! "கலாக்ஷேத்ராவிலே படிச்சிட்டிருந்த போதுதான் சினிமா சான்ஸ் கிடைச்சது. அதுக்கப்புறம் கண்மூடித் திறக்கறதுக்குள்ளே எழுபது படம் பண்ணி முடிச்சுட்டேன். சினிமாவிலும் பரத நாட்டியக் கலைஞராக நடிக்கும் வாய்ப்பு கிடைக்கவேயில்லை. அந்த ஏக்கம் இப்ப தீர்ந்து போச்சு" என்றார் சுகன்யா... காலை மாலை விடாமல் பரத நாட்டியம் பிராக்டீஸ் செய்து வருவதில் சுகன்யாவின் எடை ஐந்து கிலோ குறைந்து விட்டதாம்.

பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புனித க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்து புண்ணிய பலனைப் பெறலாம்!

# பரிகாரத்தலமாக விளங்கும் இராமேஸ்வரத்தில் மாதாமாதம் அமாவாசையன்று நெய் தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

**ஜெகத்குரு காஞ்சிஸ்ரீ பரமாச்சார்யார் அனுக்கிரகத்துடன் பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புனித க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நெய் தீபமேற்றி அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்குகொள்ள அன்புடன் அழைக்கிறோம்!**

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ இராமநாதசுவாமி தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பன்னிரெண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் ஒன்றான இராமேஸ்வரத்தில் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீராமநாதசுவாமி உடனிருந்து அருள்பாலிக்கிறார். மூர்த்தி, தீர்த்தம், தலம் மூவகையாலும் இராமேஸ்வரம் சிறப்புற்று சிவவிஷ்ணு ஸ்தலமாக பிரகாசிக்கிறது. மாங்கல்ய தோஷம், புத்திர தோஷம், செவ்வாய் தோஷம், நாகதோஷம் போன்ற எல்லாவிதமான தோஷங்களுக்கும் பரிகாரத்தலமாக இராமேஸ்வரம் விளங்குகிறது. இத்தகைய சிறப்புமிக்க புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நேரில் சென்று நெய் தீபமேற்றி அன்னதானம் செய்ய இயலாத அன்பர்களுக்காக, "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் அன்னதானத்திருப்பணி நடைபெறுகிறது. புண்ணியபூமி இராமேஸ்வரத்தில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னதானம் அளிக்கும் பணியிலும், குடும்பம் நலம் பெற நெய் விளக்கேற்றும் பணியிலும் நாமும் பங்குகொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.


★ தங்கள் சார்பாக நெய் தீபமேற்றி அன்னதானம் செய்ய தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பலாம்.
★ ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கும், நெய் தீபம் ஏற்றுவதற்கும் நன்கொடையை அனுப்புவோர், திருமண நாள், பிறந்த நாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று இராமேஸ்வரத்தில் நெய் தீபமேற்றி அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் பூஜிக்கப்பட்ட 'கோடி தீர்த்த' சொம்பும், வலம்புரி சங்கும் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீ இராமநாதசுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு இராமலிங்க தீபம் அனுப்பி வைக்கப்படும். மேலும் ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று இராமேஸ்வரத்தில் நெய் தீபம் ஏற்றி அன்னதானம் செய்து பத்து வருடங்கள் "ஆன்மீகம்" மாத இதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியினரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 336 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள "ஸ்ரீமத் இராமாயணம்" புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு இராமேஸ்வரத்தில் நேரில் சென்று 'தர்ப்பணம்' செய்ய முடியாதவர் களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் தர்ப்பணம் செய்யப்படுகிறது. பித்ருக்களைக் குறித்து இராமேஸ்வரத்தில் செய்யப்படும் தர்ப்பணம் செல்வம், கீர்த்தி, ஆயுள், ஸ்வர்க்கம் முதலிய நன்மைகளை அளிக்கும். எதிரிகளை விலக்கும். தன் வம்சம் தழைத்தோங்கச் செய்யும். மறைந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய ரூ.750/- அனுப்பும்போது யாருக்கு தர்ப்பணம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் ஆகிய மூவகையாலும் சிறப்பு வாய்ந்த இராமேஸ்வரத்தில் தர்ப்பணம் செய்து கிடைத்தற்கரிய பேற்றைப் பெற்று க்ஷேமமாக வாழ அழைக்கிறோம்.

இராமேஸ்வரத்தில் அமாவாசையன்று அன்னதானம் செய்ய விரும்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக நெய் தீபம் ஏற்றுகிறோம். தாங்கள் என்ன வேண்டுதலுக்காக தீபம் ஏற்ற வேண்டும் என்பதையும், உங்கள் பெயர், நட்சத்திரத்தையும் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதி அனுப்பினால் அதன்படி அமாவாசையன்று தீபம் ஏற்றி தங்களுக்கு பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். தீபமேற்றும் பணியிலும், அன்னதானப் பணியிலும் ஈடுபட விரும்பும் ஆன்மீக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அன்னதானப் பணியும், தீப வழிபாட்டுப் பணியும் தெய்வீகப்பணியாக தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.



ஸ்ரீ பர்வதவர்த்தினி

**நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.**


*Cheque/D.D/M.O அனுப்ப வேண்டிய முகவரி:*

## ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

**SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)**

68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.

Tel: 24959302 Fax: (044) 7102308 E-mail: sivasiva@vsnl.net



ஸ்ரீ இராமநாதசுவாமி

குழந்தையில்லாத குறையை நீக்கி நல்ல புத்திரனைப் பெற்றெடுத்து மகிழ தீப வழிபாடு செய்வது சிறந்தது!

அந்தக் காலத் தண்ணீருக்கு இந்தக் குணம் இல்லை. அர்த்த சாமத்தில் போய் கிணற்றுக்குள் வாளியை வீசி அதன் துயில் கலைத்தாலும், வாளி நிறைய மேலேறி வரும், வஞ்சகமற்ற தண்ணீர்.... வற்றிப் போய் விட்டதே...

கண்ணீராய் வழிந்து கொண்டு... காத்திருக்கும் தாய்க்குலத்திற்கு கடுப் பேற்றுகிற தண்ணீர் இந்தக் காலம்...

அம்மன் கோவில் வாசலில் இருந்த வட்டக் கிணற்றைச் சுற்றிலும் ஆணும் பெண்ணுமாய் நின்று கொண்டு, அவரவர் வாளிகளைக் கிணற்றுக்குள் விட்டு, தண்ணீர் இறைத்த காலங்களில் எங்கள் ஊர் ஒற்றுமை கெடவில்லை. மனித நேயம் மாசுபட வில்லை... உறவு முறைகள் ஊனப்பட வில்லை.

ஏழெட்டு ஜாதிகள் கிணற்றுக்கு வந்து நின்று தண்ணீர் இறைத்தாலுமே, மதினி... கொழுந்தன்... மாமன்... மருமகள்... தாய்... மகன்... என்று உறவுமுறை கொண்டாடி, ஒருவருக்கொருவர் கேலியும் கிண்டலுமாய்ப் பேசி, வாயளந்து, வம்பளந்து, சிரிப்பும் விளையாட்டுமாய் வீடு திரும்பியிருக் கிறார்கள். அவர்களோடு சேர்ந்து அவர் களின் குடத்துத் தண்ணீரும்... 'தளக்...தளக்.' என்று சிரித்துக் கொண்டு வந்த காலம் பொற்காலம்.

இப்பொழுது அந்தக் குடிநீர்க் கிணறு காய்ந்து கிடக்கிறது. தெருவுக்கு இரண்டு திருகு குழாய்கள் வந்து விட்டன. குடங்களை வரிசையாய்ப் போட்டு... கும்பலாய் நின்று கொண்டு... முக இறுக்கங்களோடும்... முணு முணுப்போடும், சலிப்போடும், வெறுப் போடும், முண்டியடித்துத் தண்ணீர் பிடிக்கிற மோசமான காலம்.

இவ்வளவு நேரம் தான் விழுவேன்... இத் தனை குடங்களில்தான் நிறைவேன்... என்று கடியாரம் கட்டிக் கொண்டு... கண்டிப் போடு விழுகின்ற கறாரான தண்ணீர்..

என்ன செய்வது? கிணறு காய்ந்து விட்டது. கிழக் கிணறு, மேலக் கிணறு எல்லாமே கூடிப் பேசியது போலக் கை விரித்து விட்டன. குடங்களை நிரப்பியாக வேண்டும்...

குழாயடியில் காத்துக் கிடந்தன. இதில் என்ன ஒரு வசதி என்றால், புஜங்கள் வலிக்க இனி இறைக்க வேண்டாம். மூச்சு வாங்க வாளித்தண்ணீரை மேல் இழுக்க வேண் டாம்...

கால்களுக்குள் கயிறு சிக்கி விடாமல்... இறைக்கிற கைகளுக்குள்ளேயே கயிற்றைச் சுருட்டிக் கொள்கிற சாமர்த்தியம் தேவை யில்லை.

இரண்டு விரலால் குழாயின் தலையைத் திருகித் தண்ணீர் பிடிக்கிற சுலபமான வேலைதான்.

ஆனால் அவ்வளவு எளிதில் குழாயின் தலையைத் திருகி விட முடியாது.

நகர சபையில் நாற்காலிகளை வீசுவது போல, குழாயடியில் குடங்களை வீசவேண் டும்..

அந்த இடத்துச் சாக்கடையே தன் மூக்கைப் பொத்தும் அளவுக்கு வார்த்தை களால் நாற வேண்டும்...

எப்படியோ... மானம் மரியாதை... அன்பு... சிநேகிதம்... சிரிப்பு எல்லாவற்றையும் காவு கொடுத்துவிட்டு தண்ணீர் மீட்டு வரலாம்..

இந்த விஷயம் குழாயடியில் குடத்தோடு நிற்கிற என்னை ரொம்பவும் யோசிக்க வைத்தது.

எவ்வளவு நேரம்தான் யோசித்துக் கொண்டு நின்றேனோ எனக்கே தெரியாது. என் மனைவி வெடுக்கென்று குடத்தைப் பிடுங்கிய போதுதான் சுயநினைவுக்கு வந்தேன்.

மனுஷன் இப்படி மண்ணாப் போயிரக் கூடாது... ச்சய்.. இவரைக் கட்டியும் அழ வச்சுட்டானே... கண் அவிஞ்ச கடவுளு...

# சொட்டு!



வே. குருநாதன்

மூக்கைச் சிந்திக் கொண்டாள்... முகம் இறுகிக் கொண்டாள்.

"என்னக்கா? மாமாவை ஏன் ஏசுறீக?" தாவணிப் பெண்ணொருத்தி எனக்குப் பரிந்து பேசினாள்.

"பின்ன என்னம்மா? வந்து இரண்டு மணி நேரம் ஆகுது பாத்துக்கோ.. விடியக் காலம் வந்த மனுஷன்... ஒரு குடம் தண்ணி வீட்டுக்கு வரல... இந்த மனுஷன வைச்சுக் கிட்டு நான் என்ன செய்றது? எந்த வேலைக்கும் லாயக்கில்லம்மா... நான் சமை யலைக் கவனிப்பனா? தண்ணி எடுப்பனா? இல்ல, என்ன வீட்ல வைச்ச கஞ்சி உனத்த உனக்குத் திறமையிருக்கா? நானும் எட்டு மணிக்குத் தீப்பெட்டி ஆபீஸ் ஓடணும்... என்ன செய்யட்டும், கொஞ்சமாவது அறிவு வேண்டாம்? மளமளன்னு நாலு குடம் தண்ணியாவது வீட்டுக்கு வந்தாத் தான எனக்கு வேலை ஓடும்...? போங்க வீட்டுக்கு."

என்னைக் குழாயடியிலிருந்து விரட்டியடித்தாள் என் மனைவி. கோபித்துக் கொண்டு நடந்தேன். கொஞ்ச தூரம் தான் நடந்திருப்பேன். குழாயடியில் போர் மூண்டது. குடங்கள்

உருண்டன. கெட்ட கெட்ட வார்த்தைகள்... தலைமுறையின் முகத்தில் சாணியை வீசுகிற துஷ்ட வாக்யங்கள்...

வசை மாரி பொழிந்து... வசை மாரியில் நனைந்து... ஒரு வழியாய் என் மனைவியும் கொண்டு போன குடங்களை நிறை குடங் களாக்கி விட்டாள்.

வேகமாய் நடந்துபோய் நிறை குடத்தை வாங்கித் தோளில் தாங்கிக் கொண்டு வீட்டிற்கு நடந்தேன். இடுப்பில் ஒரு குடமும் தலையில் ஒரு குடமுமாய்ப் பின்னால் அவள்...

"நாலு குடம் தண்ணி பிடிக்கத் திறமை யில்ல... இந்த ஆம்பளை கிட்டயும் நான் கிடந்து கழிக்கேன்ல... என் தலை விதி."

எனக்கு அர்ச்சனை செய்து கொண்டே அவள் பின்னால் வந்தாள். அதைக் கேட்டு என்னைக் கேலி செய்து சிரிப்பதுபோல்...

என் தோள் குடத்துத் தண்ணீரே 'தளக் தளக்'கென்று கும்மாளம் போட்டு வந்தது.

**வீ**ட்டிற்குள் வந்ததுமே நிறை குடத்தை இறக்கி வைத்தேன். குடத்திற்குள் இருந்த தண்ணீரில் என் முகம் தெரிந்தது.

நான் சிறு பிள்ளையாய் இருந்த நாட் களில்... அம்மா எடுத்து வரும் தண்ணீர்க் குடத்தில் முகம் பார்த்திருக்கிறேன்... கூரையி லிருந்து கடுங்காப்பி நிறத்தில் வழியும் தண்ணீரைக் கையில் பிடித்து விளையாடி யிருக்கிறேன்... ஊசித்தூரலில் ஓடி விளை யாடி குதித்திருக்கிறேன். அந்த நாட்களில் எல்லாம் என் பிஞ்சு மனசைச் சந்தோஷப் படுத்தியதும் இதே தண்ணீர்தான்... இப் பொழுது மட்டும் இதற்கு என்ன வந்தது?

அப்போது என் பிரிய நண்பனாய் இருந்த தண்ணீர், இப்பொழுது மட்டும் ஏன் என்னை என் மனைவியிடமே அவமானப் பட வைக்கிறது?

கிணறு மறந்து... கிடங்கு மறந்து... ஆறு மறந்து... ஆட்களையே மறந்த தண்ணீர், இன்று குழாய்க்குள் இருந்து மட்டுமே வரு வதால்தான் அதன் குணம் கூட குறுகிப் போய் விட்டதா?

எதிர் வீட்டுச் செல்வா பேச மாட்டான். இரண்டு குடம் தண்ணீர்ச் சண்டை. கீழ வீட்டு மல்லிகா மதினி என் மனைவியுடன் சண்டை... ஒரு குடம் தண்ணீரை விட்டுத் தராத விவகாரம்.

மேல வீட்டு உமாவிடம் என் மனைவிக்கு மனஸ்தாபம். அவள் வீட்டுக் குழாயில் குடம் வைக்க விடவில்லையாம்.

இப்படி.... எத்தனை பேர் உறவை... நட்பை... சிரிப்பை...சிநேகிதத்தைக் கொன்று விட்டு... குழாயிலிருந்து குடம் இறங்குகிறது இந்தத் தண்ணீர். இதைப் பிடிக்கவில்லை எனக்கு.

என்ன செய்வது? கொட்டிவிட முடியுமா? கூட்டத்தில் இடிபட்டு... ஏளனப் பட்டு... வசைபட்டு... வாயறைப்பட்டு... என் மனைவி மீட்டு வந்த திரவ தங்கமல்லவா? தம்ளரில் முகந்து குடித்தேன்.

முதல் டம்ளர்... இரண்டாவது டம்ளர்... மூன்றாவது டம்ளர்... தாகம் தணிந்த பாடில்லை... எப்படித் தணியும்? எனது தாகம் வெறுந்தாகமா? என் கிராமம் தொலைத்து விட்ட, பழைய மனித நேயத்திற் கான மகா தாகமில்லையா?


அது இந்தக் குழாய்த் தண்ணீரில் தணி யவே செய்யாது போலும்... தாகத்துடன் கண் கலங்கினேன். ○




## சைவ அனகோண்டா!

நெல்லையில் பாளை மார்க்கெட்டில் வசிக்கும் கவிஞர் லெனின் காகிதம், வெந்தயம், உளுந்து, புளியங்கொட்டை இவற்றை அரைத்து முப்பது அடி நீளமும் இருபத்து ஆறு கிலோ எடையும் கொண்ட அனகோண்டா பாம்பை உரு வாக்கியிருக்கிறார். பாம்பின் பற்கள் போல் அச்சு அசலாகத் தோன்றுபவை கோழி இறகின் துனியாம்.

— தமயந்தி



• லெனின்



# 20

# குறையொன்றுமில்லை

## முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

**வே**தம் ஓதப்படுவதைக் கேட்கிறோம். அதன் பொருள் புரியாவிட்டாலும் கேட்கிறோம். அந்த சப்தம் பிரும்ம மயமானது.

விக்ரகமாக எப்படி பரமாத்மாவை சேவிக்கிறோமோ...

யக்ஞமாக - யக்ஞ மூர்த்தியாக எப்படி வடிவற்ற நிலையில் அவனை சேவிக்கிறோமோ...

அப்படியேதான் சப்த வடிவமாகவும் வேத உச்சாரணம் மூலம் அவனை சேவிக்கிறோம்.

அதனால்தான் சில சூத்திரங்களை விவரித்து பாஷ்யம் எழுதும்போது, எல்லா ஆசார்யர்களும் ஒன்றையே சொல்கிறார்கள்: 'அதேயவச நித்யத்வம்.' வேதம் எல்லாக் காலத்திலும் நித்யமாய் இருந்து கொண்டே இருக்கிறது. இதற்குப் பிரளய காலத்திலும் கூட அழிவு கிடையாது.

பூர்வத்தில் அது எப்படி உச்சரிக்கப்பட்டதோ, அப்படியே எப்போதும் உச்சரிக்கப்படும். சரணாகதி மந்திரம் என்றே அதற்குப் பெயர். ஆதியிலே பிரும்மாவுக்கு பகவான் வேதங்களைக் கொடுத்தான். பிரும்மா கற்றுக் கொண்டார்.

'ச்ரூயதைதி சுருதி:' _ கேட்கப்படுவதே வேதம் என்ற வாக்கு உண்டு. ஓலைப்படா பிரமாணம் என்றே வேதத்துக்குப் பெயர். எழுதாதது; எழுத முடியாதது; கேட்டுக் கேட்டு வரவேண்டியது இந்த சுருதி.

ஹயக்ரீவ ரூபியாக பரமாத்மா இருந்து பிரும்மாவுக்கு வேதங்களைப் புகட்டினார்.

சுவாமி தேசிகன், இந்த ஹயக்ரீவரை முப்பத்திரண்டு சுலோகங்களால் ஸ்தோத்திரம் பண்ணினார். 'வாக்குக்கு அதிசனாய் இருக்கும்படியான ஹே, வாதீசா. நீ வந்து என் மனத்திலே ஸ்திரமாய் இருக்க வேண்டும்' என்று பிரார்த்தித்தார்.


ஹயக்ரீவ கிருபா கடாக்ஷத்தினாலே பெருஞானியாய் இருந்தார் சுவாமி தேசிகன். இருபது வயதுக்குள்ளே பதினான்கு வித்யா ஸ்தானங்களிலேயும் நர்த்தனம் புரிந்தார். அது ஹயக்ரீவ கடாக்ஷத்தினால்தான் வாய்ந்தது.

அப்படி ஹயக்ரீவ ரூபியான பகவானால் பிரும்மாவுக்கு உபதேசிக்கப்பட்டு, ஆதியிலிருந்தே கேட்கப்பட்டும் சொல்லப்பட்டும் வருகிற விஷயம் வேதம். புத்தகத்தைப் பார்த்து அதை மனப்பாடம் பண்ணினால் சரியாக வராது. கேட்டுக் கேட்டுத்தான் வரவேண்டும்.

வேதோச்சாரண சமயத்திலே _ வேதத்தைக் கற்றுக் கொடுக்கிற சமயத்திலே _ அங்கே சான்னித்தியமாக பரமாத்மா விளங்குகிறான்.

விக்கிரஹ பிரதிஷ்டை பண்ணினால் போதாது. நித்யம் அங்கே உட்கார்ந்து வேத பாராயணம் பண்ண வேண்டும். அப்போதுதான் அந்த மூர்த்திக்கு நம்மை அனுக்கிரஹிக்கும்படியான சக்தி ஏற்படும்.

"அடடா! அவன் அனுக்ரஹ மூர்த்தி ஆயிற்றே... எத்தனை சக்தி போங்கள்! அந்த இடத்திலே ஒரு தடவை போய் சேவித்து விட்டு வாருங்கள்... போய் வந்தீர்களானால் உங்கள் கஷ்டமெல்லாம் போய்விடும் எல்லாம் கை கூடும்" என்று பலனை ஏற்கெனவே அனுபவித்தவர் அந்த மூர்த்தியைக் கொண்டாடுகிறார். கொண்டாடுகிறவர் யார் என்று கேட்டால், பரத்வாஜ மஹரிஷி. யாரைக் கொண்டாடுகிறார் என்றால்



மட்டபல்லி லக்ஷ்மி நரசிம்ஹரைத்தான். லக்ஷ்மி நரசிம்ஹருக்கு அப்படிப்பட்ட சக்தி ஏற்பட்டிருக்கிறது. சக்தி என்றால் சாமானிய சக்தி இல்லை. எம்பெருமானுடைய தீர்க்க மான நாசிகை, விசாலமான நேத்திரம் – புடை படர்ந்து மிளிர்ந்து செவ்வரியோடிய அப்பெரியவாய கண்கள்; அந்த புருவங்கள்; உயர்ந்ததான ச்ரோத்ரம் – கர்ண பத்ரம்; அதர பல்லவம்; உயர்ந்ததாய் இருக்கும் படியான அந்த முகவாய்க்கட்டை... இவற்றையெல்லாம் என்றைக்கும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். கம்பு சுந்தரம் என்னும் கழுத்து – அதிலே மூன்று வரிகள் இருக்க வேண்டும். அப்படி இருப்பதுதான் உயர்ந்தது. ராமபிரான் அப்படிக் காட்சி யளித்தான், விபவா அவதாரத்திலே.

மட்டபல்லிநாதனுக்கும் அப்படிப்பட்ட லட்சணங்கள். அவனுடைய தேஜஸ், அந்த பராக்கிரமம் எல்லாம் எங்கேயிருந்து வந்தது...?

வேதத்தைப் பாராயணம் பண்ணித்தான் எல்லாம் ஏற்பட்டது. வேத பாராயணம் பண்ணியதால்தான் அந்த மூர்த்திக்கு அனுக்கிரஹ புத்தி ஏற்படும்.

ஒருத்தர் நன்றாக வேதம் சொல்லுகிறார். அவர் கையிலே அடைக்காய்ப் பெட்டி வைத்துக் கொண்டிருப்பார். வெற்றிலை பாக்கு போட்டுக் கொள்ளாவிட்டால் அவருக்கு வேதம் சொல்ல வராது. அப்படியொரு கெட்டப் பழக்கம்!

அந்தப் பெட்டியிலே அவர் என்ன பண்ணுவார்... எலி கொண்டு போய் விடாமல் இருப்பதற்காக சாளக்கிராமத்தை வைத்திருப்பார். நாவல் பழம் மாதிரி ரொம்பக் குட்டியாய் இருக்கும் அந்த சாளக்கிராமம். சந்தானகோபாலன் என்ற சாளக்கிராமம். நிருநிருவென்று பளபளப்பாய் இருக்கும். ஒருமுறை தூத்துக்குடியிலே அந்த சாளக்கிராமத்துக்குத் திருமஞ்சனம் பண்ணினார்... அப்படிப் பஞ்சாமிர்த திருமஞ்சனம் பண்ணியபோது அதிலே கறுப்பு திராட்சை இருந்திருக்கிறது. பஞ்சாமிர்தம் பிரசாதமாக வினியோகமான போது அந்த சாளக்கிராமமும் திராட்சையோடு திராட்சையாகப் புறப்பட்டுப் போய் விட்டது! இரண்டு நாள் கழித்து ஒருத்தர் வந்து, "சுவாமி, இதை வாங்கிக் கொள்ளுங்கள்" என்று திருப்பிக் கொடுத்தார். 'சந்தான கோபாலனுக்கு இன்னும் நம்மிடத்தில் ப்ரீதி போகவில்லை' என்று நிம்மதி ஆயிற்று இவருக்கு. 'அவன் புறப்பட்டுப் போய்விட்டானே, நாம்

''தலைவர் ரொம்ப குழம்பிப்போயிருக்கார்னு தோணுது.''

''எப்படி?''

''மேடையில பேர்வைக்கக் கொடுத்த குழந்தைங்களுக்கு லஞ்சராஜ்னும், லாவண்ய ஸ்ரீன்னும் பேர் வச்சு அனுப்பிட்டாரே!''

– சீர்காழி வி.ரேவதி

பண்ணுகிற பூஜையிலே ஏதோ லோபம் இருக்கிறதோ' என்று தோன்றியது. மூன்றாம் நாள் இவர் அதை எடுத்துக் கொண்டு வந்து விட்டார்.

இன்னொரு முறை என்னாயிற்று... வெற்றிலைப் பாக்கு பெட்டியிலே சாளக்கிராமத்தை வைத்திருந்தார் அல்லவா? அவர் பார்வை சரியில்லை... வாயிலே பாக்கைப் போட்டுக் கொள்வதற்குப் பதிலாக, சாளக்கிராமத்தைப் போட்டுக் கொண்டு விட்டார்! போட்டுக் கொண்டு, ஒரு பக்கமாக வாயிலே அடக்கிக் கொண்டு, அடித்து அடித்து கனம் சொல்கிறார்!

எல்லோரும் அவருடைய வித்வத்தைக் கண்டு ஆச்சர்யப்படுகிறார்கள். உட்கார்ந்து கேட்கிறவர்களெல்லாம், 'இது என்ன பூலோகமா, வைகுண்டமா?' என்னும் அளவுக்கு வேத சப்தத்தினால் அந்த இடத்தையே நிரப்பிவிட்டார்.


இன்னொருத்தர் ரொம்ப சாத்விகர். அதிர்ந்து பேசாதவர். எல்லோரும் போன பிறகு அவர் மட்டும் எழுந்து வந்து, 'உங்களுக்குச் சொல்கிற அளவுக்கு எனக்கு ஞானம் கிடையாது; இருந்தாலும், இப்போது நீங்கள் வாயிலே அடக்கிக் கொண்டிருப்பது பாக்கு இல்லை; சாளக்கிராமம்' என்றார்.

இவர் நடுநடுங்கிப் போய்விட்டார். சாளக்கிராமத்தை அவசரமாக உமிழ்ந்தார்.

வந்தவர் சொல்கிறார்... "உங்களுக்கு ஆட்சேபணை இல்லையானால் அதை என்னிடம் கொடுங்கள். நான் ரத்தினக் கசிதமான பேழை ஒன்று பண்ணி, அதிலே எழுந்தருளப்பண்ணி நித்யம் பூஜை பண்ணுகிறேன்' என்றார்.

'அப்படியா?' அவ்வளவு பாக்கியமா?' என்று ஆவலாய் சாளக்கிராமத்தை இவர் கொடுக்க, வாங்கிப் போனவர், ரத்தின மண்டபம் இழைத்து, அதிலே தங்கப் பேழை, அதிலே பட்டு – வெல்வெட்டெல்லாம் போட்டு, சாளக்கிராமத்தை எழுலப் பண்ணினார்.

நித்யம் தூப – தீப நைவேத்யம்; விசேஷ



மான பிரசாதங்கள் என்று அமுது செய் வித்தார்.

ஒரு நாள் அவர் நின்று கொண்டு திருவா ராதனம் பண்ணுகிறார்... உள்ளேயிருந்து அழுகைக் குரல் கேட்கிறது. 'ஓ'வென்று அழுகை! பகவான் அழுகிறான்!

"ஏன் அழுகிறாய்?" என்று இவர் கேட்கிறார்; பதறிப் போய்க் கேட்கிறார்.

"என்னைக் கொண்டுபோய் பழையபடி அந்த அடைக்காய்ப் பெட்டியிலேயே விட்டு விடு... அடைக்காய்ப் பெட்டியிலேயே விட்டு விடு..." என்றான் அந்த சந்தானகோபாலன்.

இவர் நடுங்கிப் போய்விட்டார். 'இங்கே என்ன குறை! தங்கப் பேழையிலே அல்லவா வைத்திருக்கிறேன்!'

"இதெல்லாம் யாருக்கு வேண்டும்!" என்றான் பகவான்!

"பின்னே என்ன வேண்டும்...?"

"என் செவி குளிர அந்த வேதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தேனே... மற்றதெல் லாம் எனக்கு எதற்கு?" என்று கேட்டு விட்டான் பரமாத்மா.

ஆகையினாலே மறுபடியும் அடைக் காய்ப் பெட்டியிலேயே என்னை விட்டுவிடு என்று சொல்லி விட்டார்.

"அந்த வாய்க்குள்ளே போனேனானால் அது என்ன எச்சிலா எனக்கு? எச்சிலே இல்லை" என்று சொல்லி விட்டார். "அதி லேயே மூழ்கியிருப்பேன்" என்று சொல்லி விட்டார்! அதனால்தான் ஆண்டாள் கூடப் பாடுகிறாள் பாருங்கள்...

***மாயனை மன்னும் வடமதுரை***
***மைந்தனை***
***தூயப் பெருநீர் யமுனைத் துறைவனை...***

யமுனைக்குத் தூய்மை என்பது என்ன...? அதிலே நீராடிய கோபஸ்த்ரீகளெல்லாம் "கிருஷ்ணா, கோவிந்தா, மாதவா!" என்று சொல்லிக் கொண்டே வாய் கொப்பளித் தார்களாம். அதனால்தான் யமுனைக்குத் தூய்மை ஏற்பட்டது என்று ஆசார்யர்கள் வியாக்யானம் பண்ணுகிறார்கள்.

வேதம் இல்லாமல், பகவத் சப்தத்தைச் சொல்லாமல், எவ்வளவுதான் உயர்த்தியாக நாம் எழலப் பண்ணினாலும், அந்த மூர்த்திக்கு விசேஷமான அனுக்கிரஹ ஸ்வரூபம் ஏற்படுமா? அதை வேதத்தி னாலேதான் உருவேற்ற வேண்டும்.

அதேபோல், காயத்ரியை ஜபிப்பதனால் தான் நமக்கு சக்தி ஏற்படும்.

மூர்த்திக்கும் அப்படித்தான்... அவன் மிகவும் உகந்து விரும்புவது வேதமான காரணத்தினாலே, வேதத்தை அவன் ரக்ஷிக் கிறானா? நாம் ரக்ஷிக்கிறோமா என்ற விசா ரம் எழுந்தால், அவன் தான் ரக்ஷிக்கிறான். பிரளய காலத்திலேயும் அழியாமல் ரக்ஷித்து, மறுபடியும் சிருஷ்டிக் கிரமத்திலே நமக்கு உபதேசம் பண்ணுவதாலே, வேத சம்ரக்ஷகன் அந்த எம்பெருமான்தான்.

'ஆறும் ஆறும் ஆறுமாய்' என்ற பாசு ரத்தில் முதல் 'ஆறு' இதைத்தான் உணர்த்து கிறது.

அடுத்த ஆறு என்னவென்று பார்த்தோ மானால், ஒவ்வொரு ருதுவையும் வேதம் சொல்லிக் கொண்டே போகிறது. ஆறு ருதுக் களாகவும் இருந்து காலத்தை மாற்றுகிறவன் பரமாத்மா.

'வேன:' என்றால் சூரியன் என்று அர்த் தம். சூரியனாக இருந்து காலத்தை நடத்தக் கூடியவன் பரமாத்மா. சூரியன் காலத்துக்கு அதிபதி – அப்படி காலத்துக்கு அதிபதியாக இருக்கிறான் பரமாத்மா. அதனால்தான் தேவர்களெல்லாம் க்ஷீராப்தியிலே முறை யிட்டார்கள்.

'ஹிரண்ய கசிபு என்பவன் ரொம்ப ஹிம்சை பண்ணுகிறான். கோர தபஸ் பண்ணுகிறான். பல அக்ருத்யங்கள் பண்ணு கிறான். அவன் இந்த மாதிரி பண்ணு கிறானே, அவனை அழிக்க வேண்டாமா! ஹே பிரபு!' என்று கேட்டார்கள் தேவர்கள். அதற்கு பகவான் பதில் சொல்கிறான்:

'காலம் வரும்; பொறுத்திருங்கள்!' என்று பதில் சொல்கிறான்.

இதற்கு என்ன அர்த்தம்?...

வேறு ஒரு காலம் வரும், பொறுத் திருங்கள் என்று அர்த்தமில்லை... 'கால னாகிற நான் வருவேன்; கவலைப்படாதீர் கள்' என்று அர்த்தம்.

அசுவமேத மஹா மந்திரத்திலே இது குறித்துச் சொல்லியிருக்கிறது.. ரொம்ப விசேஷமாகச் சொல்லியிருக்கிறது. அதையும் பார்ப்போம்.

(வளரும்)

# கொடை!

நாகப்பட்டினம்.

புதிய பேருந்து நிலையம். தனியார் பேருந்துக்காகக் காத்திருந்தேன்.

"வழக்கமாக ஐந்து மணிக்கே வந்துவிடும் பேருந்து, இன்றைக்கு ஏன் இன்னும் வரவில்லை...!"

தஞ்சாவூர், திருவாரூர் செல்வதற்கு ஒரு கும்பல் தவிப்போடு காத்திருந்தது.

பேருந்து வந்தவுடன் அடித்துப் பிடித்து ஏறி... இடம் போட்டு உட்கார வேண்டுமே..?!

இப்பொழுதே டென்ஷன் கூடியது. வெறுப்புடன் பேருந்து வருகிறதா என கவனித்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று... என் கால்களில் யாரோ சுரண்டுவது போல் இருக்க... திரும்பினேன்.

ஐந்து வயதுச் சிறுமி. கண்கள் இடுங்கி, தலைமுடி செம்பட்டையாக வறண்டு போயிருந்தது. அவள் அணிந்திருந்த பொத்தல் உடையும், ஒரு வித துர்நாற்றமும் என்னைக் கோபப்படுத்தின.

"ச்... சீ.. தள்ளிப் போ..." நான் எரிந்து விழுந்தேன்.



அந்தச் சிறுமி அதற்கும் அலட்டிக் கொள்ளாமல் "அண்ணா... காசு போடுண்ணா! காசு போடுண்ணா!" என இறல் விழுந்த ரிக்கார்டாகச் சொல்லிக் கொண்டே, மீண்டும் என் கால்களைச் சுரண்டினாள்.

எனக்குக் கோபம் தலைக்கேறியது.

"காசும் கிடையாது, ஒண்ணும் கிடையாது. ஓடிப் போ!" விரட்டினேன்.

அப்போதும் அந்தச் சிறுமி நகரவில்லை. "அண்ணா... காசு போடுண்ணா..!" மீண்டும் கெஞ்சினாள்.

என் அருகில் நின்றிருந்தவர்கள் என்னையே ஏளனமாகப் பார்க்க...

சட்டைப் பையில் துழாவி ஒரு ரூபாய் நாணயம் ஒன்றை எடுத்து... அவள் கையில் போட்டேன்.


அந்தச் சிறுமி நன்றியுடன் நகர்ந்த நிமிஷம் -

ஐந்தாறு பள்ளி மாணவிகள் கொடி நாள் உண்டியலைக் குலுக்கியபடியே வந்தனர்.

அந்தச் சிறுமி அவர்களைத் தடுத்து நிறுத்தினாள். என்னிடமிருந்து பெற்ற ஒற்றை ரூபாயை உண்டியலில் போட்டுவிட்டு மகிழ்ச்சியுடன் துள்ளி ஓடினாள்.


**ஆரூர். ராமசுப்ரமணி**

















# புக் பேங்க்

**மரங்களுக்காகவும் சில வீடுகள்: ஆர். புருஷோத்தமன்**

முரண்களை எதிர்ப்பட்டு நிற்பதுவும், முரணே இயல்பாய் வாழ்வதுவும், திசை மாறித் தடம் புரண்டு கிடப்பதும், என வாழ்க்கையின் பல்வேறு பரப்புகளை மேலிருந்து பார்ப்பது போல் பல்வேறு கோணங்களில் வடித்திருக்கும் கவிதைகள். வளமான, அடர்த்தியான சொற்கதம்பம், மனித மனங்களுக்கான கூடுகள்.

***விடியல் வெளியீடு, சென்னை - 600 045, விலை ரூ. 25/-***

**செந்தமிழ்த் தேனீ சோமலே : இரா. மோகன்**

பயண இலக்கியம், நாட்டுப்புற இயல், வரலாறு என பல்வேறு துறைகளில் முத்திரை பதித்த சோம. லெ. இலக்குமணச் செட்டியாரைப் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்துக் கோவை.

***மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை - 600 108***

**சமைக்கலாம் வாங்க: மெனுராணி செல்லம்**

தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவு முறைகளைச் சொல்லித் தர, பெரியவர்கள் இல்லாதவர்களுக்கு மிக உதவும் புத்தகம்.

***கற்பகம் புத்தகாலயம், 50/18, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார், சென்னை - 600 017, விலை. ரூ. 40/-***

**தொழில்மேதை விஸ்வநாதன்: ஆர்.நடராஜன்**

முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களுடன் ஒன்றாய் வழக்கறிஞராக, சுதந்திரப் போராட்ட வீரராக இருந்து பின்னர் தொழில் துறையில் சாதனையாக 'சேஷசாயி பேப்பர்ஸ்' நிறுவனத்தை உருவாக்கிய ஒரு மேதையின் வரலாறு. முன்னேற்றம் காணத் துடிப்பவர்களுக்குப் பாடநூல்.

***எஸ்.வி. சாரதா ஃபவுண்டேஷன், சென்னை - 600 041, விலை. ரூ. 75/-***

**அண்ணலார் (ஸல்) நபித்துவம் - ஒரு பகுப்பாய்வு: டாக்டர் ஜமால் பதாவி, தமிழில் ஈ. ரஹீம், எஸ். ஷாஜஹான்**

அண்ணல் நபியின் இறைத் தூது பற்றிய உண்மைப் பொருளையும், உலக மக்களின் ஒன்றிணைப்பும் பற்றிக் கூறும் நூல். இஸ்லாமிய அன்பர்கள் அறிய பல செய்திகளைக் கொண்டுள்ளது.

***இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 138(78) பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600 012, விலை ரூ. 20/-***

**சரித்திர நாயகன் காமராஜர்: சிவலை இளமதி**

எளிமை, நேர்மை, மனிதாபிமானம், சேவை என்பதை அரசியலோடு கலந்து வாழ்வையே சேவைக்காக அர்ப்பணித்த கர்மவீரரின் வரலாறு. கடந்த நூற்றாண்டின் தமிழக, தேசிய அரசியலை அறிய, அரசியல் வாழ்வைச் செப்பனிட்டுக் கொள்ள வழிகாட்டும் நூல்.

***வஸந்த் அண்ட் கோ, 15, தெற்கு உஸ்மான் சாலை, திநகர், சென்னை - 600 017, விலை ரூ.250/-***

- விஷ்வக்

# காதல் பிசாசே!

யுகபாரதி

***நெல்மணி போல்***
***பரப்பப்பட்டிருக்கிறது உன் அழகு***
***நெருங்கி நெருங்கி***
***கொத்த வருகிறது என் கனவு***
***கக்கடைசியில்***
***கனவை அழகு மேய்ந்துவிட***
***காமத்தைக் கல்வீசித் துரத்துகிறது***
***இதயம்***

காதலர் தினம் கொண்டாடப்படுவது குறித்து பலவாறான சர்ச்சைகள். வேறெந்தத் திருநாளை விடவும், காதலர் தினத்துக்கு, மகத்துவமும் கவர்ச்சியும் கூடிக் கொண்டே வருகின்றது. இது, கலாசாரத்தைக் கெடுக்கிறது என ஒரு புறமும், காலத்தின் கட்டாயம் என இன்னொரு புறமும், விவாதிக்கிறார்கள். இந்த விவாதத்தின் மையம் உண்மையோடு ஒன்றிக் கிடப்பதால், அதை உரசவும் உணரவும் வேண்டியது அவசியம்.

கொண்டாடப்படுவதால் ஒரு கலாசாரம் கெட்டுப் போய்விடும் என்றால் அந்தக் கலாசாரத்தின் பலவீனம் வேதனையானது. கொண்டாடப்படுவதுதான் காலத்தின் கட்டாயம் என்றால், காதலர்களின் இதயம் அதை விடவும் பலவீனமானது.

வெவ்வேறு வேலைகளின் நிமித்தம் பிரிந்திருக்கும் சொந்தங்கள் ஒன்று கூடி, சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ளவே பண்டிகைகள் உதயமாயின. மேற்கத்திய நாடுகளில், காதலைப் பரிமாறிக் கொள்ளவும் ஒரு நாள் தேவைப்படுகிறது. குழந்தையைக் கொஞ்சுவதற்கும் அட்டவணை போடுகிற தேசத்தில், தாய்ப்பாசமும் தர்ம சங்கடமானதுதான். இங்கே அவசியமில்லை.

காதலிக்கப்பட்ட எல்லா நாட்களும் விருப்பத்துக்குரியன. விருப்பத்தைத் தெரிவிக்க ஒரு நாளா? மலர்க்கொத்துகள் அல்லது பரிசுப் பொருட்களைக் கைமாற்றிக் கொள்வதால் மட்டுமே அன்பு உறுதிபடப் போவதில்லை. உறுதியான அன்பென்பது உயிரின் வேர் போல. வெளிக்காட்டாமல் மனசுக்குள் புதைத்துக் கொள்வது. காட்டாத காதலெல்லாம் மீட்டாத வீணையைப் போல என்கிறது ஒரு திரைப்பாடல். வீணை மீட்டுவது விரலோடு சம்பந்தப்பட்டதல்ல, மனசோடு மையமிட்டது. விரலோடு சம்பந்தப்பட்டதாகக் கருதுவதன் விளைவே காதலர் தின ஆரவாரம்.

நம் தாத்தாவும் அப்பாவும் காதலித்ததுண்டு. நம்மை விடவும் அவர்கள் காதலில் உண்மையிருந்தது. மதிய வெயிலில் கடற்கரைச் சூட்டில் முத்தமிட்டுக் கொண்டதல்ல அவர்கள் காதல். புல் விரிந்த பூங்காவில் மறைவு தேடி அமர்ந்து, மடி சாய்ந்து கொண்டதல்ல அவர்கள் காதல். தொடவும் தயங்கி; விரல் பட்டால் விலகி, காதலோடு கற்பைக் காப்பாற்றிக் கொண்டது அவர்களின் காதல். கற்பை உடலோடு பொருத்திக் கொள்வது பெரும் பிழை.

தன் காதலி ஒருவனோடு பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து சந்தேகிக்கிறவன் காதலனில்லை. தன் மீது நம்பிக்கையற்றுத் திரிகிறவனால் காதலிக்க முடியாது. காதலிக்க என்ன? சிரிக்கக் கூட முடியாது. காதல், ஒருவர் மீது ஒருவர் வைக்கிற நம்பிக்கை. நம்பிக்கை ஏமாற்றுவதில்லை. தன்னை ஏமாற்றிவிட்டதாகக் குறைப்பட்டுக் கொண்டால் இது நம்பிக்கையற்ற பேச்சு.

**ஒத்த மனத்தினளே - குளிர்**
**ஓடை முடிவொலி போல்**
**சத்தம் கொடுக்குதடி - மலை**
**சந்தனம் சிந்துதடி**
**முத்துச் சிரிப்பழகி - மலர்**
**மூச்சு மணக்குதடி**
**கத்தரிக் கோடையிலே - இளங்**
**கத்திரி காய்க்குதடி**

விழித்திருக்கும் கண்களோடு ஓடையின் அழகை ரசிக்கலாம். சத்தத்தை உணர முடியாது. கல்லோடு கல்லுரசி நதி நீரில்




மீனுரசும் சத்தம். சத்தமல்ல இசை. இந்த இசையை நுகர ஒத்த மனம் வேண்டும். இரண்டான மூச்சு ஒன்றாகும் போது தெய்வீகம் என முந்தைய வாரத்தில் எழுதியதாக நினைவு. முத்துச் சிரிப்பழகி மலர் மூச்சு மணக்குதடிதான் இந்தக் கவிதையின் புதுமை. உவமைக் கவிஞர் சுரதா எழுதியது. தேன் மழை தொகுப்பிலுள்ள கவிதையிது. இதில் இன்னொரு இடம் 'பொங்கி வழிந்திருந்தேன் - அது பூக்களின் வேர்வையடி.'

தேனைப் பூக்களின் வியர்வையாக உருவகித்த முதல் நபர் இவராகத்தான் இருக்கும் போல. ஒத்த மனம்தான் காதலின் குணம். கொண்டாடுவதல்ல.

மிகப்பல வருடங்களுக்கு முன்பாக இந்திர விழா கொண்டாடப்பட்டதே அதன் மாற்று வடிவம் தான் காதலர் தினம் என்கிறார்கள். இந்திர விழா இருந்ததென்னவோ உண்மைதான். ஆனால், அது மலினப் படுத்தப்படவில்லை. மனித உறவுகளைக் கொச்சைப் படுத்தவில்லை.

காதலர் தினக் கொண்டாட்டத்தை, வணிகமயமாகி வரும் நுகர்வு கலாசாரத்தோடுதான் பொருத்திப் பார்க்க வேண்டும். அழகிப் போட்டியில் எத்தனையெத்தனை சூசகங்கள் நிரம்பியிருக்கிறதோ, அத்தனையும் இதில் அடங்கியுள்ளன. இந்தத் திருவிழாவைக் கொண்டாட செலவழிக்கப்படுகிற தொகை; செலவழிக்கப்படுகிற நேரம்; செலவழிக்கப்படுகிற காகிதம் ஆகியவற்றைக் கணக்கிட்டால் இது விளங்கும். இத்தனையும் காதலர்க்கானதல்ல. இதன் மூலம் லாபமடைவது முதலாளிகள் மட்டுமே.

சின்னஞ்சிறுசுகள் ஏதோ ஆசையோடு கொண்டாடிக் கொள்ளட்டுமே, இதிலெல்லாம் கருத்தை நுழைத்துப் பார்ப்பது வேடிக்கை எனச் சிலர் கருதலாம். காரணமில்லாமல் ஒரு காரியத்தைச் செய்வதை விடவும் சும்மா இருப்பது மேல். 'சிறு பொறிதான் பெருந்தீயாய்ச் சினத்தோங்கும்' என்பான் பாரதி. 'எனது முகமும் உங்களின் முகங்களும்' தொகுப்பில் இரா. பொன்னாண்டான் இதையே எழுதுகிறார் புதிய கண்களோடு.

***கிணற்றுக்குள்***
***எப்போதாவது***

கற்கள் விழுவதுண்டு

அது
எழுப்பும் அலைகளில்
ஆனந்தப்பட்டதுண்டு

தண்ணீருக்கும் வெளியே வர
ஆசைதான்

பிறகு
அடிக்கடி கற்கள்
விழ ஆரம்பித்தன
ஒரு நாள்
கிணறு தூர்ந்து போனது.

கற்கள் விழுந்து கிணறு தூர்ந்து போனதை, திருவிழாக்களால் தேசம் தீர்ந்து போவதாகவும் எடுத்துக் கொள்ளலாம். தண்ணீர் வெளி வருகிற ஆசையில் கற்களைத் தாங்கிக் கொள்கிறது. சாலையின் ஓரமாய்க் கிடந்தால்தான் மைல்கல். குறுக்கே கிடந்தால் வேகத்தடை.

அவரவர் இருப்பிடத்தில் அவரவர் இருந்து கொள்வோம். என்றாலும், ஒரு செயல் மூலம் இருவரும் இணைந்திருப்போம். அந்தச் செயல் நினைவுகள். நான் எழுதும் கடிதத்தின் முதல் வரி மட்டுமே என்னுடையது, அடுத்த வரி உன்னுடையது, மூன்றாவது என்னுடையது, நான்காவது காதலுடையது.

எங்கேயோ இருந்து கொண்டு நீ நினைத்தால் நான் தும்முகிறேன். எங்கேயோ இருந்து கொண்டு நீ அழுதால் நான் வலியால் துடிக்கிறேன். இதுதானே காதல்?

கோயில் -மாடத்துப்
புறாக்களுக்கு
நெல்விறைக்கிறேன்
உன்னிடமிருந்துதான்
தொற்றிக் கொண்டது இப்பழக்கமும்
நீ நெல்விறைக்கையில்
உண்ட அதே புறாக்கள்தானே
இவைகள்?

அவள் அனுப்பி வைத்த தூதுவர்கள் போல இந்தப் புறாக்கள் படுகின்றன ஏ.எஸ்.எம். அனுவுக்கு. இது பரிசுப் பொருட்களை அனுப்புவதை விடவும் உன்னதமான செய்கை. உன் செயல் புறாக்களுக்கான நெல்மணிகளை இறைக்க உதவியதே அதற்காகக் கோடி நன்றி. எதன் பொருட்டும் ஓர் உயிர் பசியாறுவதே சிறந்தது. கொஞ்சம் போல் சுயநலமுள்ளது என்றாலும், அது நமக்கானதாகும்போது தவறில்லை.

உன்னாலும் என்னாலும் ஊட்டி ஊட்டி வளர்க்கப்படும் இப்புறாக்கள் பெருமைக்குரியவை. தாஜ்மகாலின் மீது அமர்கிற குருவிகளை எச்சமிடக் கூடுமெனத் துரத்துவதில்லை யாரும். இரட்டைக் குருவிகளின் சங்கமத்தை நினைவுச் சின்னங்கள் வரவேற்கும். இந்த நினைவுகள் சின்னங்களா காதிருக்கக் கொண்டாடி முடிக்காமல், உணர்ந்து தொழுதல் நலம்.


ஒரு நாள் என்பது வரையறுக்கப்பட்ட மணித்துளிகள். மணித்துளிகளால் காதல் வரையறுக்கப்படக் கூடாது. ஆயுள் மொத்தமும் உனக்கே என வேண்டிக் கொள்வோம். இந்தக் காதலர் தினத்தை மூட்டைக்கட்டி கிணற்றில் எறிந்து விட்டு ஒவ்வொரு தினத்தையும் காதலாக கொண்டாடுவோம். இதை வாசித்து முடிந்ததும் உங்களில் யாரேனும் ஒருவருக்குக் கேட்கத் தோன்றும். "நீங்கள் காதலிச்சதே இல்லையா?" கேள்விகளைக் காதலிப்பதும் சுகமானது தான்.

(தொடரும்)



"ஆபீசுக்கு வேட்டா போனதால் திரும்பி வந்துட்டீங்களா... ஏன்?"
"எல்லோரும் அசந்து தூங்கிட்டிருந்தாங்க... எதுக்கு அவங்களை டிஸ்டர்ப் பண்ணுவா னேன்னுதான்!"
— நெல்லை ராஜ்

மதுரை மாணவர்
ஸ்பெஷல்





# மாத்யூ ஹெய்டன்
# ஷான் பொல்லாக்

-போஸ்டர்

**"கனவு காணுங்கள்"**

— டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்

**1000/– ரூபாய் பரிசுப் போட்டி**

# கோகுலம்

மார்ச் 2003

ரூ 6/- மட்டுமே!



''எதுக்குக் கோணிப் பையை எடுத்து நீட்டறே?''

''வீட்டுக்கு லேட்டா போனா பொண்டாட்டிக் கிட்டே சொல்ல, ஏதாவது சாக்கு வேணும்னு கேட்டியே!''

''நீ ஒரு குழந்தை' இதை ஆங்கிலத்தில் ஒரே வார்த்தையில் சொல்ல முடியுமா?''

''முடியாதே... நீ சொல்லு!''

''Kid ney!''







''பேரீச்சம்பழம்' பாட்டுக்கு டான்ஸ் ஆட ஒத்துக்கிட்ட நடிகை மும்தாஜ் கடைசியிலே ஏன் வரமாட்டேன்னுட்டாங்க?''

''அவங்களுக்கு 'டேட்ஸ்' ஒத்து வரலையாம்!''



"பின்லேடனுக்குப் பிடிச்ச தமிழ் எழுத்து எது?"

"ஃ"

"எப்படி?"

"அதுதான் ஆயுத எழுத்தாச்சே!"



# பின்லேடனுக்குப் பிடிச்ச தமிழ் எழுத்து!

படம்: ஸ்ரீஹரி



"நெத்திலி மீன் சாப்பிட்டா ஹார்ட்டுக்கு நல்லது."


"சாப்பிடாட்டி?"

"மீனுக்கு நல்லது."


# சொல்லிவைச்ச அஞ்சு பேர்?

✉ "கெட்டி மேளம் கெட்டி மேளம்" இலவச இணைப்பு மிக நல்ல உபயோகமான தயாரிப்பு. வெளியூர் வாசகர்களுக்கும், உபயோகப்படும்படி மாவட்ட வாரியாக தகவல்களைத் தயாரித்துக் கொடுக்கும்படி வேண்டுகிறோம்!

மொரட்டுப்பாளையம், க.நா. இராஜேஸ்வரன்.









✉ கல்யாண வயதில் பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு வரன்தேடி, அலுத்துப் போயிருக்கும் பெற்றோர்களுக்கு ஆறுதல் தரும் விதமாக ஏதோ வரன்களைத்தான் அறிமுகப்படுத்தப்போகிறீர் என்று பார்த்தால் நகை, சீர்வரிசை, சாப்பாடு, மண்டபம் பற்றி மட்டுமே சொல்லி ஏக்கப் பெருமூச்சு விட வைத்து விட்டீர்களே!

சென்னை – 14, அய்யாறு வாசுதேவன்

✉ கமலின் பேட்டியில் சமூகத்தைப் பற்றிய அவரது ஆழ்ந்த அக்கறை மனித நேயமுள்ள சிறந்த மனிதராக அவரை அடையாளம் காட்டியது.

திருப்பரங்குன்றம், டி.கே.சுப்பிரமணியன்

✉ தேச நலனைக் காட்டிலும் கட்சி நலனே பெரிது என்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்ட பிரதமர் வாஜ்பாய், 'சங் பரிவார்' கட்சிகளின் 'பேஜ்' பாயாகி விட்ட அவலத்தையும், மத்திய அமைச்சரவையில் செய்த அதிரடி மாற்றங்களையும், தங்கள் பளீர் தலையங்கம் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டி விட்டது.

மதுரை - 16, ஆர். கோபாலன்

✉ 'ராமச்சந்திரா' படத்தில் தம்மாத்தூண்டு நல்ல விஷயமே 'திரு' பாண்டியராஜன்தான் என்று கிண்டலடித்திருக்கிறீரே, உமக்கு ரொம்ப லொள்ளுய்யா!

அயன்புரம், த. சத்தியநாராயணன்

✉ ஒரு பக்கக் கதைகளுக்கு சினிமா படங்களின் தலைப்பு பொருத்தமாக இருந்தது. இந்த அளவுக்குக் கதையம் சத்துடனாவது அந்தந்த படங்கள் இருந்திருக்குமா என்பது கூட சந்தேகமே.

சென்னை - 61, ஆர். நாகராஜன்

✉ 'ரஜினியால் கூட இது முடியாது' என கமல் தமது திறமையைத்தான் ஒப்பிட்டிருப்பார் என நினைத்து வேகமாக உள்ளே சென்று அசடு வழிந்தேன்!

திருவாரூர் -1, எஸ். பாலச்சந்தர்

✉ சங்கர சுப்ரமணியனின் 'நகரம்' கவிதை மிகவும் நேர்த்தி. நகர்ப்புறத்தில் ப்ளாட் வாங்கிவிட்டு உணர்வு ரீதியாக சங்கடப்படுவோரின் ஏக்கத்தை அப்படியே பிரதிபலித்தது. அவர் தம் பெயரை 'சங்கட சுப்ரமணியன்' என்று கூட மாற்றிக் கொள்ளலாம்! பிளாட் வாங்கியிருப்பார் போலும்!

சிதம்பரம், க. மோகன்

✉ என்ன தலைவா! அம்மாம் பெரிய சென்னையில், 'அம்மாவோட' ஓராண்டு ஆட்சியைப் பற்றி ஏதாவது ஒரு சிறு குத்தம் சொல்ல ஒரேயொரு ஜீவன் கூட கிடைக்கலியா? அஞ்சு பேரும் சொல்லி வச்ச மாதிரி, புகழறாங்களே!

புதூர், கே.சண்முகம்

# குரல் இனிது நடிப்பு புதிது!




குறிப்பாகப் பெண்கள் பிரச்னைகளை அலசும் 'குலவை' நாடக விழா, இந்த ஆண்டும் சில சிகரங்களைத் தொட்டது. எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் 'மௌனக்குரல்' பிரிவு, அலியான்ஸ் பிரான்சைஸின் உள் அரங்கில், ஒன்பதாம் தேதியன்று முழு நாள் பெண்கள் நாடகக் கலை விழா நடத்தியது.

இந்திரா பாலா (தெலுங்கு), லட்சுமி சந்திரசேகர் (கன்னடம்), அதிதி தேசாய் (குஜராத்தி) உஷாராணி (தமிழ்), உஷா நங்கியார் (சம்ஸ்கிருதம்), சப்னா சாண்டு (இந்தி), பாகிரதி (இந்தி), கலைராணி (தமிழ்), மாயா ராவ் (ஆங்கிலம்) என்று அத்தனை பேரும் தனி நபர் நாடக உத்தியை, எத்தனை வகையாகக் கையாள முடியுமோ, அத்தனை சிறப்பாகக் கையாண்டதுதான், ஒரு முழு நாளும் நடந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு அடிப்படைக் காரணம்.

முதல் நிகழ்ச்சியை வழங்கிய இந்திரா பாலா, கீசகவதத்தைத்தான் தெலுங்கில் 'நர்த்தனசாலா'வாக வழங்கினார். ஆனால் என்ன குரல் வளம்! ஆண் குரல் மட்டுமல்லாது, பெண் குரலிலேயே எத்தனை வகை! கண்களை மூடிக் கொண்டு விட்டால், மேடையில் பல பேர் இருக்கிற மாதிரித் தோன்ற வைக்கிறாரே, அது என்ன திறமை! ஒரு வயலின், ஒரு புல்லாங்குழல், ஒரு தபலா என்று வைத்துக் கொண்டு, பாடியும் நடித்தும் அசத்திவிட்டார் இந்திரா. (அதிலும் போனஸாக ஆபேரியில் 'நகு மோமு'வும் பாடி, ஆலாபனையில் ஒரு பிருகா சர்க்கஸே நடத்தி, அப்ளாஸ்களை அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டார்!)

லட்சுமி சந்திரசேகர், புராணங்களிலும் கன்னட இலக்கியங்களிலும் பெரிதும் பேசப்பட்ட பெண் பாத்திரங்கள், சமூகத்தில் பட்ட பாட்டை அநாயாசமாக வெளிப்படுத்தினார். விதவிதமான முகமூடிகளைப் பயன்படுத்தி, பாத்திரங்களைக் கண் முன்னே கொண்டு வந்தார். வயதான விதவைக் கோலத்திலும், 'சதி'யில் எரிந்து போன ரூப் கன்வர் பாத்திரத்திலும் அசர வைத்தார்.

சமுதாயத்திலும், குடும்பத்திலும் எப்படி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் பிரச்னையை வளர்த்துக் கொண்டு, சிக்கலில் சிக்கிக் கொள்கிறார்கள் என்பதை, அதிதி தேசாய் தம் குஜராத்தி நாடகத்தில் காண்பித்தார்.

தமிழில் உஷா ராணியின் 'பனித்தீ'யும், கலைராணியின் 'மழை'யும், இந்தியில் சப்னாவின் 'லூனா'வும், மக்ஸஸே விருது பெற்ற கே.வி.சுப்பண்ணாவின் நாடகப் பட்டறையில் உருவான, பாகிரதியின் 'சகுந்தலை'யும் ஆங்கிலத்தில் மாயா ராவின் படைப்பும், வந்திருந்த அத்தனை இளைய தலைமுறையினரையும் கட்டிப் போட்டது.

வசனம் சற்று அதிகம் இருப்பது போல் தோன்றினாலும், அதை ஒரு குறையாகவே தோன்றவிடாமல், குரலாலும், நடிப்பாலும் அநாயாசமாக வெளிப்படுத்தும்போது அசத்திவிடுகிறார்கள் அத்தனை பேரும்.

- எஸ்.வி.என்.

# நிழல் 4

ராஜனை உற்றுப் பார்த்தாள் சாவித்ரி. பால் வடியும் முகம்.

மிச்சமிருந்த பாலைக் குடித்தபடியே, அவனது தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டியது தனது கடமை எனத் தீர்மானித்தாள். திருமணமாகி நான்கு நாட்களாகி விட்டிருக்க, உடனடியாக அந்த முயற்சிகளைத் தொடங்கினாள். அதன் முதல் கட்டமாக அவள் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். முக்கிய உரை ஆற்றுவதற்கான ஒத்திகையின் பகுதி அது என்பது புரியாமல், அவள் ஏதோ பாடத் தொடங்கப் போகிறாள் என எண்ணி அவன் அஞ்சினான். நலுங்கின்போதே அவள் பாட்டென்ற ஒன்றை வெளிப்படுத்தித் தன் துணிவை அம்பலமாக்கியிருந்தாள்.

''எனக்கு எதைப் பார்த்து ரொம்ப பயம் சொல்லுங்க?''

பொதுவான கோணத்தில் யோசித்தான் ராஜன். பெண்கள் எதற்கு பயப்படுவார்கள்? சுலபமான விடையை வெளிப்படுத்தினான்.

''கரப்பான் பூச்சி!''

''தப்பு. கரப்பானைக் கண்டால் இப்டி இப்டி அதன் மீசையைப் பிடிச்சுத் தூக்கி வீசுவேன்'' என்று சாவித்ரி காட்டிய அபிநயத்தில் ராஜன் தன் மீசையைப் பொத்திக் கொண்டான்.

''ஊசி மருந்துன்னா ரொம்ப பயமோ?''

''எங்கம்மா சொல்வாங்க, 'ஊசி போட்டுக்கும்போது கூட அழாத ஒரே குழந்தை நீயாத்தான் இருப்பே'ன்னு. அப்பவே அப்டின்னா இப்பப் போய் பயப்படுவேனா?''

கரப்பான் பூச்சி, ஊசி – இவற்றைவிடப் பொருத்தமான விடைகள் எப்படி இருக்க முடியும்? ராஜன் மருண்டான். பிறகு மூளையில் பல்பு எரிய 'நல்ல பாம்பு, மலைப் பாம்பு, கட்டு விரியன், கண்ணாடி விரியன், அனகோண்டா, பச்சைப் பாம்பு, சாரை' என்று பட்டியலை அடுக்கிவிட்டுப் பெருமூச்சு விட்டான்.

''நீங்க ஏன் இப்டி புஸ்புஸ்னு அதுங்க மாதிரி மூச்சு விடறீங்க?'' என்று கேட்ட சாவித்ரி, தன் விரல்களைத் திறந்து உள்ளங்கையைப் பார்ப்பதும், பிறகு விரல்களை மூடி உள்ளங்கையைப் பார்க்க முடியாமல் போவதுமாக, ஒரு விளையாட்டுத் தானே செய்து கொண்டாள்.

பிறகு, ''உண்மையைச் சொல்லணும்னா எனக்கு நிழல்னா ரொம்ப பயம்ங்க. என் நிழலைப் பார்த்து நானே பயப்படுவேன்.''

''அந்த விதத்தில் உனக்கு என்



நிழல் நிழல் நிழல் நிழல் நிழல் நிழல்

கிட்ட பயமே இருக்காது". சிரித்துப் பேசிய படியே அவளை நோக்கி நடந்தான். அவன் தோளின்மீது சாவித்ரி சாய்ந்து கொண்டாள்.

**நா**ட்கள் மெதுவே நகர்ந்தன. வெளியில் செல்லும்போது தரையிலும், வீட்டில் விளக்கு வைத்த பிறகு சுவரிலும் அவன் நிழல் விழாததைப் பார்த்து, நடுநடுவே அதிசயித்தாள்.

ராஜனின் வெளிப்படைத் தன்மை அவளுக்கு நிரம்பப் பிடித்திருந்தது.

"இன்னிக்கு என் சமையலிலே எந்த ஐட்டம் ரொம்பப் பிடிச்சது உங்களுக்கு?" என்று கேட்டபோது 'சுட்ட அப்பளம் ஏ ஒன்' என்று அவன் கூறிய அப்பாவித் தனத்தை நினைத்துச் சிரித்தாள். கடைத் தெருவில் அவனுக்காக ஒரு சட்டையை அவள் தேர்ந்தெடுத்தபோது 'உங் கப்பாகிட்ட இதைப் பத்திச் சொல்லிடு. அவரும் அடுத்த மாச தலை தீபாவளிக்கு இதே கலரிலே சட்டை எடுத்துறப் போறார்' என்று அவன் யதார்த்தமாகக் கூறிய போதும் சிரித்தாள்.

'தங்கை கல்யாணத்துக்காக வெளிய பதினாறாயிரம் கடன் வாங்கியிருக்கோம் சாவித்ரி. கிராமத்தில் அப்பாவின் நிலம் ஒண்ணு இருக்கு. அதை வித்தா அடைச்சிடலாம்' என்பதிலிருந்து 'நான் எட்டாங் கிளாஸ் படிக்கிறவரையில் ராத்திரியிலே படுக்கையை ஈரமாக்குவேன்' என்பது வரை அவன் திருமணமான ஒரே வாரத்தில் விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள, அவள் அப்போதும் சிரித்தாள். நம்பிக்கைக்குகந்த கணவன் கிடைத்த நிறைவுச் சிரிப்பு.



**“எனக்கெதுக்குங்க இன்னும் நகைகள்? நீங்க கவலைப்படாதீங்க. எனக்கு உங்க கையாலே கட்டிக்கிட்ட திருமாங்கல்யமே போதும். ஏதோ என் சின்ன வயசு ஆசையைச் சொன்னேன், அவ்வளவுதான்.”**

இவ்வளவு ஆத்மார்த்தமாக இருப்பவனிடம், தானும் தன் அந்தரங்கங்களைக் கூறி விடுவது தானே நியாயம்!

'எனக்கு பரதநாட்டியம் கத்துக்கணும்னு ஆசை. அப்பா கூடாதுன்னுட்டார். 'உடம்பு இளைக்கணும்னா, ஸ்கிப்பிங் செய். செலவில்லாத பயிற்சி'ன்னார் கிண்டலா. நான் சின்ன வயசில பருமனாத்தான் இருந்தேன். டான்ஸ் கத்துக்க முடியலேங்கிற வருத்தத்திலேயே இளைச்சுட்

நிழல் நிழல் நிழல் • அருண் சரண்யா

டேன் போல' என்றாள்.

"இப்ப வேணா டான்ஸ் கத்துக்கறியா?"

''ஐய, அதெல்லாம் முடிஞ்சு போன ஆசைங்க."

"இப்ப இருக்கற ஆசை என்ன?"

சாவித்ரி தன் வயிற்றுப் பகுதியைத் தடவிக் கொண்டதைப் பார்த்ததும் ராஜனுக்கு புல்லரித்தது. 'சீக்கிரமே பிறக்கும்மா. கடவுள் புண்ணியத்திலே ரெட்டைக் குழந்தைகளாகவே பிறக்கட்டும்' என்றான் உணர்ச்சிப் பிரவாகமாக.

'ஐய, அதில்லீங்க. தங்க ஒட்டியாணம் போட்டுக்கணும்னு ரொம்ப வருஷமா ஆசை. நடக்கிற காரியமா சொல்லுங்க?' என்றபடி சிரித்தாள்.

ராஜன் விழித்தான். அரசு வேலையில் அவன் இல்லை என்பதால் சம்பளம் மட்டும் தான் என்பதோடு, அதே காரணத்தால் அதிகப்படி வேலை செய்து சம்பாதிக்க உபரி நேரமும் இல்லை. இந்த நிலையில் ஒட்டியாணமா?

அதற்குப் பிறகு தனிமையில் அவள் இடுப்பைத் தொடும்போதெல்லாம் குற்ற உணர்ச்சி பொங்கியது. 'எனக்கு ஒரு நகை வாங்கி அணிவிக்க முடியாத நீ எப்படி என்னை வெட்கமில்லாமல் தொடுகிறாய்?' என்று அந்த இடுப்பு அவனைக் கேளாமல் கேட்டது.




தன் நிழல் குறையைப் பெரிது படுத்தாமல் தனக்கு வாழ்க்கைப்பட சம்மதித்தவளுக்கு ஒரு ஒட்டியாணம் கூட அணிவிக்க முடியாமல் இருக்கிறோமே! நினைக்க நினைக்க வியர்வையும் கழிவிரக்கமும் பொங்கின. மின்விசிறியின் வேகத்தை அதிகப்படுத்த, வியர்வை பொங்குவது மட்டும் நின்றது.

திடீரென்று ஓர் ஐயம் ஏற்பட்டது. வழக்கமான அப்பாவித்தனத்துடன் அதை சாவித்ரியிடம் வெளிப்படுத்தினான். ''உனக்கு நிஜமாவே தங்க ஒட்டியாணம் வேணுமா? அல்லது அப்படி வாங்கினா, அதை அழிச்சு சின்னச் சின்ன நகைகளா நிறைய செய்துக்கலாம்னு பாக்கறியா?'

மசாலாவில் திளைக்கும் மன உறுதியுடன் 'தூள்' பார்க்க தியேட்டருக்குச் சென்றவனுக்கு அங்கு 'அன்பே சிவம்' திரையிடப்பட்டால் ஏற்படும் மனநிலை சாவித்ரிக்கும் ஏற்பட, கலவரத்துடன் முகம் மாறினாள். 'எனக்கெதுக்குங்க இன்னும் நகைகள்? நீங்க கவலைப்படாதீங்க. எனக்கு உங்க கையாலே கட்டிக்கிட்ட திருமாங்கல்யமே போதும். ஏதோ என் சின்ன வயசு ஆசையைச் சொன்னேன், அவ்வளவுதான்' என்றாள்.

என்றாலும், தங்க ஒட்டியாணம் ஒன்றை வாங்கிக் கொடுத்தால்தான் அவன் கவலை குறையும் போலிருந்தது. மாறாக, நாளுக்கு நாள் மனத்திருப்தி மற்றும் ஊட்ட உணவு காரணமாக சாவித்ரியின் இடுப்புச் சுற்றளவு அதிகரிக்க, ராஜனின் கவலை அதிகரித்தது. ஒட்டியாணத்தின் அளவும் அதிகமாகத் தேவைப்படுமே! மேலும் அதிகத் தொகை தேவைப்படும்!

யாரோ வானொலியில் சங்க இலக்கியம் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். தலைவனைப் பிரிந்து வாழ வேண்டிய நிலை தலைவிக்கு. அப்போது தலைவன் அவளுக்கு வாங்கித் தந்திருந்த வளையல், அவளுக்கு ஒட்டியாணமாக ஆகிவிட்டதாம். அதாவது பிரிவு ஏக்கத்தில் அந்த அளவு இளைத்து விட்டாளாம். என்றாவது ஒட்டியாணம் வாங்குமளவுக்கு நிதி நிலைமை முன்னேறினால் அப்போது கொஞ்ச நாள் சாவித்ரியைப் பிரிந்திருக்கலாமா என்று கூட ஒரு சின்ன எண்ணம் தோன்றியது ராஜனுக்கு.

ஆனால் அந்த எண்ணத்தை உடனடியாகப் புறம் தள்ளினான். காரணம், பழங்காலத் திரைப்படங்களில் வருவதுபோல் அவனது உடலிலிருந்து மற்றொரு உருவம்

பிரிந்து (மனசாட்சி!) 'மடையா, அவள் இளைப்பாளா இல்லையா என்பது இருக்கட்டும். உன்னால் அவளைப் பிரிந்து இருக்க முடியுமா?' என்று கேட்டது. 'முடியாது சாவித்ரி. உன்னைப் பிரிஞ்சு என்னால இருக்க முடியாது' என்று ராஜன் வாய் விட்டுப் புலம்பிய பிறகே அந்த உருவம் மறைந்தது.

'எப்படியாவது ஒரு தங்க ஒட்டியாணம் வாங்கி விட வேண்டும்.'

அற்பசொற்பமான பல வீட்டுச் சாமான்களை வாங்கும் பொருட்டு அந்த ஞாயிற்றுக்கிழமை ரங்கநாதன் தெருவுக்குச் சென்றிருந்தபோதுதான், அது அவன் கண்ணில் பட்டது. சாவித்ரியிடம் அதை சுட்டிக் காட்டலாமென்றால் அருகிலிருந்த கடைக்குள் நுழைந்திருந்தாள்.

தெருவோரமாக ஒரு சாதாரணமான மஞ்சள் பை. எடுத்து உள்ளே பார்த்தான். கற்றை கற்றையாக ரூபாய் நோட்டுகள். கிராமத்திலிருந்து யாராவது விவசாயப் பணத்தையோ, நிலம் விற்ற பணத்தையோ, எடுத்துக் கொண்டு வந்திருக்க வேண்டும். மகள் திருமணத்திற்கு நகை வாங்க வந்திருப்பாரோ? என்ன நகை? வைரத்தோடு? சங்கிலி? ஒட்டியாணம்? ஒட்டியாணம்!

தராசுத் தட்டில் ஒருபுறம் அவன் மனசாட்சியும் மறுபுறம் சாவித்ரியின் இடுப்புமாக மாறி மாறி நர்த்தனமாடத் தொடங்கியிருந்தன.

எதிர்வெயில் அடித்துக் கொண்டிருந்தது. சாவித்ரி குக்கர் காஸ்கெட்டை வாங்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தாள்.

'சாவித்ரி, நீ ஆசைப்பட்ட ஒட்டியாணத்தை இன்னக்கி வாங்கித் தரப்போறேன்' என்று இப்போது சொன்னால் என்ன செய்வாள்? 'என்னால் நம்பவே முடியலிங்க' என்று சந்தோஷத்தில் தெருவென்பதை மறந்து கூக்குரலெழுப்பக் கூடும்.

அருகில் வந்த சாவித்ரி அவன் நினைத்தபடியே கூக்குரலிட்டாள். 'என்னாலே நம்பவே முடியலீங்க!'

ராஜனாலும் நம்பவே முடியவில்லை. தான் கூற நினைத்ததை வெளிப்படுத்தாத போதே, சாவித்ரி எப்படி ஆனந்தக் கூச்சல் எழுப்பினாள்?

சாவித்ரியின் பார்வை ராஜனின் பின் பக்கத் தரையின்மீது பதிந்திருந்தது.

(முற்றும்)

# மங்கையர் மலர்



**"மங்கையர் மலர், திருமண மலர் பகுதியிலேயே விளம்பரம் செய்வதை பெண்கள் ஏன் விரும்புகிறார்கள்?"**

மஞ்சுளா ரமேஷ்,
ஆசிரியர், மங்கையர் மலர், சென்னை.

“ஏனென்றால் – தங்கள் மகன், மகளுக்குத் திருமணம் செய்ய விரும்பும் தாய்மார்களின் கைகளுக்கு இவ்விளம்பரம் நேரிடையாகச் செல்கிறது.

அதனால்தான் செய்யப்படும் விளம்பரங்களுக்கும் நிறைய பதில்கள் வருகின்றன.

மங்கையர் மலர் திருமண மலரில் விளம்பரம் செய்தாலே ‘ராசி’, திருமணம் குதிர்ந்து விடும் என்பது பல்லாண்டுகளாக நடந்து வரும் நம்பிக்கை.

ஜாதி பேதமில்லாமல் எல்லோரும் படிக்கும், பெண்களால் கடந்த 22 ஆண்டுகளாக முதன்மையாக வைக்கப்பட்டிருக்கும் பத்திரிகை. அதனால்தான் எல்லா இனத்தினரும் திருமண மலரில் விளம்பரம் செய்கிறார்கள்.

**நீங்களும் உங்கள் மகன் அல்லது மகள் திருமணத்திற்கு மங்கையர் மலர், திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்.”**

**‘திருமண மலர்’ பகுதியில் விளம்பரம் செய்ய அணுகவும் :**
**மானேஜர், திருமண மலர் பகுதி.**
கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை-97 தொலைபேசி : 22345622/23/24 தொலைநகல் : 044-2234 5621
மங்கையர் மலர் இன்டர்நெட் முகவரி : www.mangayarmalarmonthly.com

KALKI DESIGN STUDIO 3/03

ஹலோ...! தஞ்சைத் தரணியிலேருந்து சரவணன் பேசுறேங்க. ஜாதகப்படி எனக்கு இருபத்து மூணு வயசுங்க. சர்டிபிகேட்படி இருபத்து நாலு. கொஞ்சம் ஸ்பெஷலா வாசல்லே நிலை வைக்கணும்ங்க... ஏன்னா ஆறடி இரண்டு அங்குல உயரம். யார் வீட்டுக்குப் போனாலும் "ஏய்! உலக்க, குனிஞ்சு வா"ன்னு செல்லமா வரவேற்பாங்க. இப்போ இளங்கலை தமிழ் இலக்கியம் இறுதியாண்டு படிச்சிட்டிருக்கேன். ஆரம்பத்துலே பாடலாசிரியர் ஆகணும்னுதான் ஆசைப் பட்டேன்... ஆனால் நீ நடிக்கலாமேன்னு எல்லோரும் சொல்ல ஆரம்பிச்சாங்க... ஏதோ தமாஷ் பண்றாங்கன்னு பார்த்தா, நாடகம் போடுற என் நண்பன் என்னைப் பட்டுன்னு ஹீரோவாக்கிட்டான்...! தஞ்சாவூர்லே மட்டும் ரசிகர்கள் இருந்தாப் போதுமா? தமிழ்நாடு முழுக்க வேணாமா...? சினிமாலே என்ன வேஷம் கொடுத்தாலும் நடிக்கிறேங்க... ஸாரி... ரேப் சீன் மட்டும் பண்ண மாட்டேன்.

- ஜெ



# நாளைய நட்சத்திரம்



**நடக்குமென் பார்; நடக்கும்!**

## அக்னி சர்மா பக்கம்

**மேஷம்** : புதிய முயற்சி கள்ல இறங்கவா? வேண்டாமா?ன்னு யோசிச்சிட்டிருந்தீங்க இல்லையா? இப்ப அதுக்கான நேரம் வந்துட்டுது. தாராளமா இறங்கலாம். அதுக்கான பலனை அனுபவிப்பீங்க. வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்கு சாதகமா பலன் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும். கடன் தொல்லை படிப்படியா குறையும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு பெயர், புகழ் உண்டு. கணவன் மனைவிக்குள்ள சிறு சிறு பிரச்னைகள் வந்து சேரும். வாயைக் கட்டுங்க. விட்டுக் கொடுத்துப் போங்க. பெண்களுக்கு நகை, நட்டு கிடைக்க வாய்ப்பிருக்கு.

**ரிஷபம்** : அலுவலகத்தில் அப்பப்ப சின்ன சின்னப் பிரச்னைகள் வந்துட்டிருந்ததில்லையா? இனி அது அடங்கிப் போகும். எதுக்கும் மேலதிகாரியை அனுசரித்துப் போறது நல்லது. அரசியல் வாதிகள் மதிப்பு, அந்தஸ்து உயரப் பெறுவார்கள். அரசுப் பணியாளர்களுக்கு முன்னேற்றம் உண்டு. குரு கடகத்தில் மூன்றாம் இடத்தில் உச்சம் பெற்றிருப்பதால் தெய்வ பலம், அமைதியான மனநிலை ஆகியவை ஏற்படும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டு உண்டு. குடும்பத்துல சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டு விலகும்.

**மிதுனம்** : கடன் தொல்லைகள் அடிக்கடி வந்து நிம்மதியைக் கெடுத்தது இல்லையா? ஏதோ ஒரு வழியில அந்தத் தொல்லை ஒழியும். பேச்சில் வசீகரம், வாக்கு சாதுர்யம், சகல காரியங்களிலும் வெற்றி, புதியவர்கள் அறிமுகம் கிடைக்கும். கஷ்டமான வேலையையும் திறமையா சமாளிப்பீங்க. புதிய முயற்சி அனுகூலம் தரும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பாங்க. எதிர்பாராத தனலாபம் கிடைக்கும். குடும்பத்துல சுபகாரிய முயற்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு.

**கடகம்** : எல்லாக் காரியங்களும் 'இப்படி இழுத்தடிக்குதே'ன்னு கலங்குனீங்க இல்லையா? இந்த வாரம் அதுக்கு முற்றுப் புள்ளி வைச்சாச்சு. மளமளன்னு எல்லாக் காரியமும் நடக்கப் போகுது. மறைமுக, நேர்முக எதிர்ப்புகள் விலகி ஓடும். சினிமா, நாடகம், சிற்பத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் பெயர், புகழ் உண்டு. குடும்பத்துல சுபகாரிய முயற்சிகளுக்கு வழியிருக்கு. சொத்து விவகாரங்கள்ல உங்களுக்கு அனுகூலமான திருப்பம் வரும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்திட்டிருந்த நல்ல தகவல் வந்து சேரும்.




**சிம்மம்** : 'இந்தப் பிரச்னைகளிலிருந்து விடுபடவே முடியாதா?'ன்னு நொந்து போனீங்க இல்லையா? இப்ப அதுக்கான வழி பிறக்கும். பண வசதி தாராளமா இருக்கும். அலுவலகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். இதுவரை தாமதமான காரியங்கள் தீர்ந்து போகும். இதனால ஏற்பட்ட மனக் குழப்பம் நீங்கும். கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும். அரசியல்வாதிகளின் மதிப்பு செல்வாக்கு உயரும். குடும்பத்துல மகிழ்ச்சி நிலவும். சொத்து விவகாரங்கள்ல நல்ல திருப்பம் வரும். வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் வருவாங்க. இதனால குடும்பத்துல சந்தோஷம் கரை புரளும்.

**கன்னி** : கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கானப் பேச்சு வார்த்தைகள் இந்த வாரம் தொடங்கப் போகுது. கடன் தொல்லைகள் விலகி மனசுல சந்தோஷம் முளைக்கும். பெண்களுக்கு இது அதிர்ஷ்டமான வாரம். விருந்து, உபசாரம், குதூகலம், பிரிந்தவர்கள் ஒன்று சேர்தல், தாராளமான பண நடமாட்டம்னு ஜாலியா இருப்பாங்க.

அலுவலகத்தில் சிலருக்குப் பதவி உயர்வு, ஊதிய உயர்வு ஆகியவை உண்டாகும். புதிய முயற்சிகள் கை கொடுக்கும், புதிய வங்க அறிமுகம் கிடைக்கும். இவங்களால நன்மை உண்டு.

**துலாம்** : உத்தியோகத்தில் அடிக்கடி பிரச்னை வந்து டென்ஷன் பண்ணியது இல்லையா? இந்த வாரம் பிரச்னை மாய மாயிடும். மேலதிகாரிகள் கிட்ட அனுசரணையா இருங்க. வேலை விஷயமா வெளியூர் பயணங்கள் நடக்கலாம். பயணத்தில் கொஞ்சம் உஷாராவே இருங்க. இதுவரை வராம இழுத்தடிச்சிட்டிருந்தத் தொகை இப்ப வந்து சேரும். பார்ட்னர்ஷிப்ல தொழில் பண்றவங்களுக்கு லாபம் உண்டு. குடும்பத்தில் சலசலப்பு மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பிருக்கு. எதிலும் நிதானம் அவசியம். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும்.



கு. ஞானசம்பந்தம் மனைவி அழகுதாயுடன். படம்: யோகா

**விருச்சிகம்** : எடுத்த காரியங்களில், இந்த வாரம் சின்ன சின்னச் பிரச்னைகள் ஏற்படும். இதுக்காக ரொம்ப மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க. தன்னாலயே சரியாயிடும். நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரால் குழப்பம், பிரச்னை, ஏற்பட வாய்ப்பிருக்கு. சிக்கலான காரியங்களைக்கூட எளிமையாக முடிச்சிருவீங்க. உத்தியோக விஷயத்தில் உங்கள் திறமை வெளிப்படப் போகுது. புதிய வேலை முயற்சிகள்ல வெற்றி உண்டு. கொடுக்கல் வாங்கல் கைகொடுக்கும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வரும். சிலர் புதிய வீடு கட்ட, வாங்க வாய்ப்பிருக்கு.

**தனுசு** : பணவசதி இந்த வாரம் தாராளமா இருக்கும். மனகல தெம்பும் தன்னம்பிக்கையும் பிறக்கும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்க வாய்ப்பிருக்கு. தொழில் பண்றவங்களுக்கு சுலபமா முன்னேற்றம் உண்டு. பொருளாதார நெருக்கடி விலகும். குடும்ப ஸ்தானத்தை குரு பார்க்கறதால குடும்பத்தில் மகிழ்ச்சி ஒற்றுமை, சுப

## பிப்ரவரி 19 முதல் 25 வரை

காரிய முயற்சி ஆகியவை உண்டாகும். எதிர்பாராத நல்ல செய்தி வந்து சேரும். பெண்கள் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். புதிய பொருள் சேர்க்கை, தெய்வப் பிரார்த்தனை ஆகியவை நிறைவேறும். இயந்திரம், உலோகம், தோல் பொருள்கள் கம்ப்யூட்டர் ஆகிய துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு லாபம் உண்டு.

**மகரம்** : பொருளாதார நிலையில் அபிவிருத்தி உண்டு. வழக்கு, விவகாரங்கள்ல வெற்றி ஏற்படும். எந்தக் காரியத்தையெடுத்தாலும் வெற்றி உண்டு. தெய்வ பலம், பெரியவங்க ஆசி ஆகியவை கிடைக்கும். வேலை விஷயமா வெளியூர் / வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. சிக்கலான வேலையைக் கூட திறமையா செயல்படுத்தி வெற்றி பெறுவீங்க. கூடப் பிறந்தவங்களால அனுகூலம் உண்டு. பெண்களுக்குப் பொன், பொருள், ஆடை, ஆபரணச் சேர்க்கை கிடைக்கும்.

**கும்பம்** : இந்த வாரம் குழப்பமான மனநிலை இருந்தாலும் தெய்வ பலத்தால் வெற்றியடைவீங்க, புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அவங்களால எதிர்பாராத நன்மையுண்டு. புதிய வேலை முயற்சிகள் கைகூடும். தனியார் துறையில் வேலை பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. சுயமா தொழில் பண்றவங்களுக்கு லாபம் கொட்டும். உலோகம், கெமிக்கல்ஸ், தோல் பொருட்கள் ஆகிய இனங்கள் லாபம் தரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். குடும்பத்தில் விருந்து, உபசாரம், உல்லாசம் ஆகியவை உண்டாகும். பெண்களுக்கு இது அதிர்ஷ்ட வாரம்.

**மீனம்** : பண நடமாட்டம் தாராளமா இருக்கும். எதிர்ப்புகள் குறையும். குருபலம் நிறைந்து இருப்பதால் குடும்பத்தில் பொன், பொருள், ஆபரணம் சேர்க்கை உண்டாகும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான முயற்சிகள் கைகூடும். பழைய கடன் காட்சிகள் மறையும். கூட்டாகத் தொழில் பண்றவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. குடும்பத்துல சுபகாரிய முயற்சிகள் நடக்கும். பெண்களுக்கு இது அதிர்ஷ்டமான வாரம். நினைச்சது நடக்கும். பழைய கடன் தொல்லைகள் மறைந்து மனகல நிம்மதி பிறக்கும்.

# கல்கி

## அடுத்த வாரம்



## கிரிக்கெட் ஸ்பெஷல்!

போட்டி, பரிசுகள் உண்டு



படம் : யோகா

ஆர். கண்ணன்

எழுதும்...




# மாணவர்களுக்கு வழிகாட்டும் துடிப்புத் தொடர் ஆரம்பம்!





## பாட்டுச் சாவடி

தலைக்கு மேல பறக்குது பார்
ரயிலு - அதில்
தனிமையிலே தாவணி பார் டகிலு!
பிகரு பார்த்தா பறக்குதடா
பிகிலு - மச்சான்
டி.டி.ஆரு வந்துபுட்டா எகிறு!
ஆளில்லா பறக்கும் ரயிலு போரு - இதை
ஏ.கே. மூர்த்தி அண்ணங்கிட்டே கூறு!

- வாரே வாவ்! இத்தனை அட்ட காச டப்பாங்குத்து, கானாவை உருவாக்கிய கவிஞர்கள் இருப்பது, கோடம்பாக்கத்து தேவாக்களுக்குத் தெரிந்தால் கொத்திக் கொண்டு போய் விடுவார்கள் இல்லையா! சென்னை கடற்கரைச் சாலையில் கம்பீரமாக அமைந்திருக்கும், பாரம்பரியம் மிக்க மாநிலக் கல்லூரியின் 'காம்பௌண்ட் புராடெக்ட்' தான் இந்த கவின்(?) மிகு கானா. கானாவை உருவாக்கியவர், தினசரி பறக்கும் ரயிலில் கல்லூரி வந்து போகும் பி.ஏ இரண்டாமாண்டு படிக்கும் மாணவரான நந்தா. நமது துரதிஷ்டம் நமது விசிட்டின்போது நந்தா ஆப்சென்ட். அதனால் என்ன, கானா கவிதாயினிகளுக்குக் கூட இங்கே பஞ்சமில்லை

# டாப் அடிச்சு டேப் அடிச்சு...

''கானா எழுதுகிற அளவுக்குப் பெண்கள் இன்னும் தரம் தாழ்ந்து போயிடலே...''

என்று மாணவிகளிடம் அழைத்துக் கொண்டு போனார்கள் வரலாற்று மாணவர்கள்.

''கானா எழுதுகிற அளவுக்குப் பெண்கள் இன்னும் தரம் தாழ்ந்து போயிடலே... இந்த



* புரசை கைஸ்

பொடியனுங்க சொல்றதை நம்பி வந்துட்டீங்களே'' என்று இரண்டாமாண்டு பொருளாதாரம் படிக்கும் நிர்மலா, சுஜாதா, நித்யா, விஜயகுமாரி நால்வரும் வருத்தப்பட..., பொடியன்களோ ஓ...ஓ...ஹோ... என்று கோரஸ் குரல் கொடுத்தார்கள். பொடியன்கள் என்று பொருளாதார மாணவிகள் கொடுத்த காம்ப்ளிமெண்டுக்கு ஏன் எதிர்ப்பில்லை என்று நாம் யோசித்துக் கொண்டிருந்தபோது... ''இப்போ தானே பிளஸ் டூ முடிச்சிட்டு வந்திருக்கோம். நாங்க எல்லோருமே முதலாண்டு'' என்று உண்மையை ஒப்புக் கொண்டனர் அந்த மாணவர்கள். கானா கவிதாயினிகள் என்று ஆசை காட்டி இப்படி மோசம் செய்துவிட்டீர்களே என்று நாம் சிணுங்க..." எங்களுக்குக் கானா எழுதத் தெரியாதே தவிர, எங்க ஃபேவரைட் மரத்தடியிலே





• போதி மரக் கவிதாயினிகள்



• அய்யோ! கடிக்கிறாங்களே?

போய், உட்கார்ந்து, பேனாவைத் திறந்தா கவிதை கொட்டுங்க" என்று நம்மை மாணவிகள் கூப்பிட, பின் தொடர்ந்தோம்.

சொல்லி வைத்த மாதிரி சின்னஞ்சிறு நுணா மரத்தடியில் அவர்கள் உட்கார்ந்து எழுத ஆரம்பித்ததும், பழுத்த இலைகள் மரத்திலிருந்து உதிர்வதுபோல் கவிதைகள் உதிர்ந்தன. முதலில் எழுதி வாசித்தவர் நிர்மலா. கவிதையை வாசிப்பதற்கு முன், ஒரு முன்னுரை கொடுத்தார். "பத்து நாள் புத்தகக் கண்காட்சியில் பத்து கோடிக்கு புத்தகம் விற்பனையாகியது என்றார்கள். பையில் பணமில்லாத நான், புத்தகக் கண்காட்சிக்குப் போய் வந்த அனுபவம்தான் இந்தக் கவிதை என்றார்.

*"சும்மா வேடிக்கை பார்ப்பதற்காக*
*அந்தப் புத்தகக் கண்காட்சிக்குள் நுழைந்தேன்*
*எல்லாப் புத்தகங்களும்*
*என்னை வேடிக்கை*
*பார்க்க ஆரம்பித்து*
*விட்டன"*

நமக்கோ இதயம் கனத்துப் போய் விட, "கல்பனா சாவ்லாவுக்கு இந்த சந்திரக் கவிதை சமர்ப்பணம்" என்று அடுத்த கவிதையை வாசித்தார் சுஜாதா.

*"அவ்வளவு*
*தொலைவிலிருந்தபடி*
*குழந்தைகள் சாப்பிட*
*உதவும் நிலவில்*
*மனிதன் உயிர் வாழ*
*முடியாது என்பதை*
*எப்படி நம்புவது...*

இவருக்குப் போட்டியாக இன்னொரு 'கிரக' கவிதை வடித்தார்

நித்யா...

"ஏன் எனக்குத்
தெரியாமல்
சுற்ற நினைக்கிறது பூமி?"

- அடடா! இந்த போதி மர கவிதாயினிகளை விட்டால் விடிய விடிய கவிதை பாடிக் கொண்டிருப்பார்கள். எனவே, கல்லூரி காம்பௌண்டில் அமர்ந்து, கடி ஆசீர்வாதம் செய்து கொண்டிருந்த முதலாண்டு கணிதம் படிக்கும் கில்பர்ட் குணா, கார்த்திக் இருவரிடமும் கவனத்தைத் திருப்பினோம். முதலில் ஆசி தந்தவர் குணா.

"எந்த டீ குடிச்சா, ரொம்ப போதையா இருக்கும்?"

"தெரியலியே" - அப்பாவியாக நாம்.

"நைன்டி!" - அடப்பாவிகளா, கல்லூரிக்குள் நுழைந்த நிமிஷத்திலிருந்து டீ குடிக்கிறீர்களா, என்று நச்சரித்துக் கொண்டே இருந்ததன் பின்னணியில் சதி வலை வேறு இருக்கிறதா... பயந்து போய் கார்த்திக் கடிக்க வாய்ப்பளித்தோம்.

"கடிக்க முடியாத கனி எது?"

"தெரியலையே...

"பால்கனி" - காதிலிருந்து இரத்தம் வருகிறதா என்று திருட்டுத்தனமாக நாம் காதைத் தடவிப் பார்த்துக் கொண்டதை நித்யாவும், விஜயகுமாரியும் பார்த்து விட்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

எப்போதும் வௌவால் மாதிரி மரத்திலேயே குடியிருக்கும் ராக்கெட் ராஜாகூட, ராக்கெட் வேகத்தில் கவிதை பாடுவான் தெரியுமோ, என்று ராக்கெட் ராஜாவிடம் அழைத்துப் போனது மாணவர் கூட்டணி. சும்மா சொல்லக் கூடாது மரத்தில் வௌவாலாகத் தொங்கியபடி ராஜா சொன்ன கவிதை நன்றாகவே இருந்தது.

"யாரோ ஒருத்தியை யாரோ ஒருவன்,
செல்லமாகக் கிள்ளிய கிள்ளலில்
அந்த ஒருத்திக்கு வலித்திருக்க வாய்ப்பே
இல்லையெனினும்
பார்த்த எனக்கு வலித்ததை
யாரிடம் சொல்ல..."

- இனியும் கவிதைகள் கேட்டுக் கொண்டிருந்தால், நாமும் கவிஞராகி விடும் ஆபத்து நேர்ந்துவிடும் என்பதால்... பாட்டுச்சாவடி விசிட்டை முடித்துக் கொள்ள முடிவு செய்தோம்... ஆனால் புரசைவாக்கத்திலிருந்து 2ஏ பேருந்தில் கல்லூரி வந்து போகும் 'புரசை கைஸ்' என்று அழைக்கப்படும் மாணவர் குழு, தங்களது பேருந்துக்கு அழைத்துப் போனது...

• கடி ஆசீர்வாதம்



**நா**ம் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. குற்றாலக் குறவஞ்சியில் வருணிக்கப்படும் வானரங்களைப் போல, கண் மூடித் திறப்பதற்குள் பேருந்தின் கூரை மீது ஏறியவர்கள் "இதுக்குத்தான் டாப் அடிச்சி டேப் அடிக்கிறது" என்று சொல்லியபடி பேருந்தின் கூரையிலேயே தாளம் போட்டு, பாட ஆரம்பித்து விட்டார்கள்.

"ஜாலி... ஜாலி...
நீயும் நானும் லவ் பண்றது
ஜாலி ஜாலி..
உங்க அப்பன் போடுறான் வேலி
அதைத் தாண்டிக் கட்டுவேன்
தாலி...!"

கடைசி கானாவை அதற்கு மேல் காதிற்குள் வாங்க முடியாமல் எஸ்கேப் ஆகி ஓடி வந்தோம்... ஆனால் டாப்பில் டேப் அடிக்கிற சத்தம் இன்னும் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

- ஜெ. ஜே

படங்கள்: டிஜிட்டல் சண்முகம்

# புத்தம் புதுசு!




**கா**ய்ச்சல், தலைவலி, ஜலதோஷம் உள்ளிட்ட ஏழு வகையான நோய்களுக்கு நிவாரணம் தரும் 'மை டாக்டர்' என்ற மருந்தை, சென்னை ப்ரீமியர் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது. எல்லா வயதினருக்கும் ஏற்ற வகையில் ஆறு வெவ்வேறு ஃபார்முலாக்களில் அறிமுகப் படுத்தப்பட்டது சிறப்பம்சம். மூன்று பாக்கெட்டுகள் கொண்ட அட்டைப் பெட்டியின் விலை முப்பத்தாறு ரூபாய் மட்டுமே!

**ப்ரீமியர் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் லிட்,**
**579, அண்ணாசாலை,**
**சென்னை 600006**

**'கொ**சுத் தொல்லையிலிருந்து விடுதலை' என்ற முழக்கத்துடன் அறிமுகமாகியுள்ளது க்ரீன் ஷீல்ட் மூலிகை ஸ்ப்ரே... கொசுக்களைத் துரத்துவதோடு, சுவாசத் தடையை ஏற்படுத்தும் புகையோ, கண் எரிச்சலோ, பக்க விளைவுகளோ இருக்காது என உத்தரவாதம் தரப்படுகிறது.

**மெர்க்குரி மார்க்கெட்டிங்,**
**அல்மா ஹவுஸ், கிருஷ்ணாபுரம்,**
**பழைய பல்லாவரம்,**
**சென்னை 117**




**ப**ளபளக்கும் ஆரோக்கியமான கூந்தல் வளம் தரும் மூலிகைகள் என ஆயுர்வேதம் கட்டியம் கூறும் கற்றாழை, ஆம்லா, பூந்திக்கொட்டை, கரிசலாங்கண்ணி, ஹென்னா, செம்பருத்தி, சந்தனம், துளசி, வேம்பு, வெந்தயம், சீயக்காய், பிரம்மி சேர்த்து உருவாக்கப்பட்டது 'ட்வெல் ஹெர்ப்ஸ்' ஷாம்பு. உடலுக்குக் குளிர்ச்சி தருவதோடு, மயிர்க் கால்களைப் பலப்படுத்தி, முடி உதிர்தலைத் தவிர்க்கிறதாம். சாஷேயின் விலை ரூபாய் இரண்டு மட்டுமே.

**ப்ரிஷான்ஸ் நேச்சுரல் ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 828, 13வது லேன், பந்தார்கார் ரோடு, பூனா 411 004**




**'இ**ந்தியாவின் முதல் மல்டிபர்பஸ் ஜெல்' என்ற பெருமையுடன் சந்தையில் அறிமுகமாகியுள்ளது 'க்ரீன் லீஃப்' ஜெல். சிறந்த மாய்ஸ்சரைஸராகப் பயன் படுவதோடு, பரு, கரு வளையம், சொறி, சிறு காயங்கள், தீப்புண், சரும அலர்ஜி என், பல வகையான பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதாகச் சொல்லப்படும் இந்தக் களிம்பில், தொண்ணூறு சதவிகிதம் தூய்மையான கற்றாழை (அலோவீரா) அடங்கியுள்ளது.



# நீங்கள் கேட்டவை - தராசு

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு.


*? கழுதை என்பது தவறான சொல் அல்ல, கழுதை என்றால் உழைப்புக்கு இலக்கணமான சொல் என்கிறாரே முதல்வர்?*

! 'முதல்வர் கழுதை போல் உழைக்கிறார்' என்று சொன்னால் மகிழ்ச்சியாக ஒப்புக் கொள்வாரா...!

● ஒய்.எஸ். ப்ரீதா, சென்னை - 12.

*? வெளிநாடுகளுக்கு உணவு தானியங்களை ஏற்றுமதி செய்யும் நிலையில் இருக்கும் போது பட்டினிச் சாவுகள் ஏற்பட வாய்ப்பில்லை என்கிறாரே பிரதமர்?*


! அதையும் மீறித்தான் நம் நாட்டில் பட்டினிச் சாவுகள் நிகழ்கின்றன. உபரி தானியங்களை,



• வறுமையும் விரயமும்



• அமைதியும்...



• ... அரசியலும்



• தோல்வியும் தத்துவமும்...

வேலை வாங்கிக் கொண்டு விநியோகிப்பதில் காண்பிக்கப்படும் சுணக்கமும் ஊழலும்தான் காரணம். இதனால் உணவு தானியம் ஏராளமாக வீணாகிறது; வறுமையும் நீடிக்கிறது; நாட்டின் முன்னேற்றமும் தடைப்படுகிறது.

● ஆர்.பி.ப்ரியன், வேலூர்.

*? ஐந்து மாத உடல்நலக் குறைவு காரணமாக ஆடாமலே இருந்து விட்டு, உலகக் கோப்பை முதல் ஆட்டத்திலேயே சதம் அடித்த லாராவின் திறமை குறித்து...?*

! வங்கக் கடலில் மையம் கொள்ளும் புயல் சின்னங்களுக்கு 'லாரா' என்று பெயர் சூட்டலாம். பொழிந்து தள்ளவும் கூடும். சில சமயம் பிசுபிசுத்துப் போகவும் கூடும்!

● ரஞ்சனி ப்ரியன், பள்ளிபாளையம்.

*? மூன்று பேர் கொண்ட குடும்பத்தினர் பைக்கில் ட்ரிபிள்ஸ் போகலாம் என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளதே?*

! ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அப்பா – அம்மா – குழந்தை (12 வயது வரை) ஸ்கூட்டரில் போகலாம். ஆனால் பெரியவர்கள் மூவர் போகக் கூடாது என்ற தீர்ப்பு, குழந்தைகளுக்குப் பாதுகாப்பை மறுக்கிறது. பெரியவர்களாவது ஹெல்மெட் போட்டுக் கொள்கிறார்கள். (அதிலும் பெரும்பாலோர் போட்டுக் கொள்வதில்லை) குழந்தைகள் கதி என்ன...!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

*? பெண்கள் சொந்தக்காலில் நிற்க வேண்டுமே தவிர, ஆணின் தயவு தேவை என்பதற்காக திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று முதல்வர் ஜெ. கூறிய அறிவுரை...?*

! திருமணம் செய்து கொள்வது என்பது தயவை எதிர்நோக்கி அல்ல; பரஸ்பரம் இருவருமே துணையை நாடுவதால். வாழ்க்கைத் துணையை நாடுவது சொந்தக் காலில் நிற்பதற்கு எதிரானதும் அல்ல. முன்னதற்கு வேலை வாய்ப்புகள் பெருக வேண்டும். முதல்வர் அதில் கவனம் செலுத்தட்டும், தேவையற்ற, தப்பான அறிவுரைகள் வழங்குவதற்குப் பதிலாக!

● சேலம் செல்வக்குமார், காங்கயம். ❑

*? அரசியல் சர்ச்சைகளிடையே அமைதியாகவே இருக்கும் ரஜினிக்கும் பாதி அரசியல்வாதியாக உள்ள விஜயகாந்துக்கும் சிண்டு முடிவது எதற்காக...?*

! இருவரும் கோதாவில் இறங்கி குடுமிப்பிடி சண்டை போட்டால், அந்தச் சூட்டில் பவர் குளிர் காயலாமே... அதற்குத்தான்.

● மு. இளங்கோவன், மன்னார்குடி.

*? கொலம்பியா விண்கலத்தில், ஹிந்துப் பெண் ஒருவரும், அமெரிக்க கிறிஸ்துவர்களும் இஸ்ரேல் யூதர் ஒருவரும் இருந்ததால்*

---

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர்:

சேலம் செல்வக்குமார்,
கருணைபாளையம்,
முதியாநெரிச்சல் (அ)
காங்கயம் வழி, கோவை - 638 701

---

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:

எஸ். விஸ்வேஸ்வரன்,
9, எஸ்.ஆர்.லே அவுட், பல்லடம் ரோடு,
பொள்ளாச்சி - 642 001.

# 'கல்கி'யைப் பயமுறுத்தும் சாத்தான் எது?

தான் அவர்களைத் தண்டிக்கும் விதமாக அல்லா அந்த ஓடத்தை அழித்தார் என்று லண்டன் மசூதி இமாம் தெரிவித்திருப்பது பற்றி?....

! மனிதம், திறமை இரண்டையும் மதியாத மூட நம்பிக்கைப் பேர் வழிகள் எல்லா மதத்திலும் இருக்கிறார்கள்.



• புயலும் பிசுபிசுப்பும்

● மா.வி.கோவிந்தராசன், ஆரணி.

? நீண்ட ஆயுளுக்கு என்ன வழி...?

! ஒவ்வொரு கணத்தையும் பயனுள்ள வகையில் செலவிடல், ஆயுட்காலம் இரட்டிப்பானது போல் பயன்தரும். பாரதியார், கீட்ஸ், அமரர் கல்கி போன்றோர் வாழ்ந்த காலம் குறைவு என்று அவர்கள் எழுத்தைப் பார்த்துச் சொல்ல முடியுமா?



• உழைப்பும் உதாரணமும்



• எழுத்தும்....



• ... ஆயுளும்

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33.

? வங்கிகள் போட்டி போட்டுக் கொண்டு வீட்டு வசதிக் கடன்களை வழங்குகின்றனவே...?

! நடுத்தர வர்க்கத்தினர் வீடு வாங்க அது ஒன்றே வழி, தொழில் துறை தேங்கிக் கிடப்பதால், வீட்டின் மேல் தனி யாருக்குக் கடன் கொடுப்பது வங்கிக்கும் பாதுகாப்பானது.

● ஏ.ஜஹ்பர் காதர், விளாத்திகுளம்.

? சாத்தான்குளம் இடைத்தேர்தலில் ஆளுங்கட்சி தோற்றால்தான் ஆரோக்கிய அரசியலுக்கு வழி பிறக்கும் என்கிறாரே ப. சிதம்பரம்?

! இது ஒன்றும் சிதம்பர ரகசியமில்லை. அ.தி.மு.க. ஆட்சியின் யதேச்சாதிகாரப் போக்கும், மோசமான நிர்வாகமும், ஓர் அடி வாங்கினால்தான் ஜனநாயகத்துக்கு நல்லது. ஆனால் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து உழைக்காத வரை அது சாத்தியமேயில்லை. ஒன்று சேர்ந்து விட்டாலோ, அதுவே ஆரோக்கிய அரசியலுக்கு எடுத்துக் காட்டு.

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? 'பத்தாவது அவதாரம் 'கல்கி'யைப் பயமுறுத்திய சாத்தான் எது?' என்று மு.க.கேட்டுள்ளது பற்றி...?

! பேட்டி காணப்படுபவரின் கருத்துக்கள் எல்லாமே பத்திரிகையின் கருத்தாகி விடாது என்பதை மறந்து விட்ட, 'ஜெ. ஆட்சியில் பாஸிடிவ் விஷயங்களே இருக்க முடியாது' என்று முடிவு கட்டிவிட்ட மு.கவின் கற்பனையில் மட்டுமே விளங்கும் சாத்தான் அது.

● எஸ். விஸ்வேஸ்வரன், பொள்ளாச்சி. ●

? துறவறம் பூண்டவர்களெல்லாம் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களா...?

! வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காக துறவறம் பூணுவது சாதகம். தோல்வியைக் கண்டு வெறுத்து துறவறம் மேற்கொள்வது பாதகம். துறவறத்துக்காகவே துறவறம் பூணுவது உத்தமம். மோசடி செய்வதற்காக துறவு மேற்கொள்வது அதமம்.

# யாரிடம் சொல்வேனடி தோழி

அஞ்சலிக்கு கனகுவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

அவனிடம் தான் சுந்தரை சந்தித்தது, அவனிடத்துப் பழகியது, பின் காதலாய் மலர்ந்தது... என ஒவ்வொன்றாய்ச் சொல்லச் சொல்ல கனகுவின் முகம் போகிற போக்கை நினைத்துப் பார்த்தாள்.

சிரிப்புத் தான் வந்தது.

இவள் சொல்வதை முதலில் கனகு நம்பவே மாட்டான்.

''போடி... . பொய் சொல்றே. நீயாவது காதல் பண்றதாவது...? சும்மா டுப் வுடறே..!''

உதட்டைச் சுழித்து, கன்னத்தைச் சுருக்கி கேலியாய்ச் சொல்வான்.


சுந்தரையே கொண்டு போய் நேரில் நிறுத்தினால் தான் கனகு நம்புவான்.

கனகு என்கிற கனகவேல் அஞ்சலியின் பள்ளி நாட்களில் பழகக் கிடைத்த முதல் நண்பன். இவளின் வகுப்பில் படித்தான், இவளிருக்கும் தெருவிற்குப் பக்கத்து தெருவில் அவனின் வீடு இருந்தது என்பது மட்டுமில்லாமல், தனிப்பட்ட முறையில் கனகுவை அஞ்சலிக்கு ரொம்பவே பிடித்திருந்தது. இதற்கென்று தனிப்பட்ட காரணம் ஏதுமிருப்பதாக அஞ்சலிக்குத் தெரியவில்லை.

சிறு வயதில் அதிகம் விளையாடவே அனுமதிக்காத குடும்பமாக அஞ்சலியின் குடும்பம் இருந்தது.

வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தே தெருவில் விளையாடுகிற தன் வயதொத்த பிள்ளைகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பாள். தினந்தினம் புதுப்புது விளையாட்டு அரங்கேறும் தெருவில்.

சரசரவென்று காலை மண்ணில் தேய்த்து, கட்டம் கட்டமாய்ப் பெட்டி பிரித்து... செங்கற்களை அடுக்கும் 'உருளைக் கிழங்கு பார்'; மணற் குவியல்களை மரவேர்களிலும், புற்களுக்கு மத்தியிலும், மதிற்சுவர் மேலும் குவித்து வைத்து தேடும் நிலா கும்பல்',



நெருப்பின் தகிப்போடு தொடரும் 'ஐ பிஸ்'... எல்லா விளையாட்டுகளையும் பார்வையாளராய் உட்கார்ந்து கொண்டு ரசிப்பாள்.

ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறையாவது அம்மா திண்ணைக்கு வருவாள். வரும்போதே கையில் ஏதாவது தின்பண்டம் இருக்கும்.

"இந்தா.. இதைச் சாப்புடு. இங்கேயே உக்காந்து பாரு... ம்ம்..."

அதட்டலில்லாத ஒரு குரலில் அம்மா சொல்லிவிட்டுக் கொடுப்பதை வாங்கிக் கொள்வாள்.

திண்ணையில் இவள் ஏக்கத்துடன் உட்கார்ந்திருப்பதைப் பார்ப்பதற்கு கனகுக்கு எப்படியிருக்குமோ.. அவன் விளையாடிக் கொண்டிருந்த விளையாட்டைப் பாதியிலேயே விட்டுவிட்டு இவளருகே வந்து உட்கார்ந்து கொள்வான்.

"டேய்... பாதியில போகாதே. வந்துடு..!"

கூட விளையாடிய சக பிள்ளைகள் மிரட்டினாலும், இவளைத் தனியாக விட்டுப் போகவே மாட்டான்.

தெருவில் நடக்கும் விளையாட்டின் சுவாரசியத்தை இவர்கள் இருவரும் தங்கள் பேச்சின் போக்கிற்குக் கொண்டு வந்து ரசிப்பார்கள்.

கனகு இவளோடு சேர்ந்து கொண்டதி விருந்து விளையாடாத வெறுமை இல்லாதிருந்தது. ஆர்வமாய் அவனுடன் பேசிக் கொண்டிருப்பாள். அவனும் இவள் சொல்வதை 'ம்... ம்' என்று கேட்டுக் கொண்டிருப்பான். இவளுடைய அத்தனைப் பரிமாற்றங்களும் அவனிடம்தான் துவங்கின.

"டேய்... இந்தாடா..!"

அம்மா கொடுக்கிற தின்பண்டத்தைப் பிரியத்தோடு அவனிடம் பகிர்ந்து கொள்வான்.


அஞ்சலியைவிட கனகு வயதில் மூத்தவன். இருவரும் ஒரே வகுப்பில்தான் படித்தார்கள். கனகு ஒல்லியாய், நல்ல உயரமாய் இருப்பான். பார்ப்பதற்குப் பெரிய மனிதன் தோரணையில் இருப்பான். பேசும்போதுதான் அவனுடைய குழந்தை மனம் வெளிப்படும்.

"ஏன்டீ... ஒன்னைவிட ரெண்டு வயசு மூத்தவன். அவனப் போயி 'வாடா, போடா'ன்னு சொல்லலாமா..?"

யாராவது சொன்னாலும் கேட்க மாட்டாள்.

"அவன் மட்டும் என்னை 'வாடீ, போடீ'ன்னு கூப்புடலாமா..?" என்று எதிர்க் கேள்வி போடுவாள்.

ஒன்றுமே பதில் சொல்லாமல் கேட்டவர்கள் போனபிறகு, இவள் காதருகே குனிந்து கிசுகிசுப்பாய் கனகு சொல்வான், 'நீ என்னை வாடா, போடான்னே கூப்புடு. அதுதான் எனக்குப் புடிச்சிருக்கு..!" என்பான்.



இவருவரும் சிரிப்பார்கள்.

பத்தாம் வகுப்பிற்கு மேல் படிக்கவிடாமல் செய்து விட்டது கனகுவின் குடும்பச் சூழல்.

அஞ்சலி ஆசிரியர் பயிற்சி படித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் தயங்கித் தயங்கி வந்தான் கனகு.

"என்னடா... ஆளையே பாக்க முடியலே.." என்றாள்.

''ரெண்டு வாரமா பிளாஸ்டிக் கம்பெனிக்கு வேலைக்குப் போறேன்..'' என்றான் எங்கோ பார்த்தபடி.

''ஓ... சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டீங்க. இனிமே உங்களைப் பாக்கக் கூட முடியாதா...?'' அஞ்சலி கேலியாய்க் கேட்க, அடிக் குரலில் மெல்ல கேட்டான்.

"நீ கவிதையெல்லாம் எழுதுவீல்ல...''

"ஆமா... அதுக்கென்ன இப்ப...?''

எதிரே வந்து முகம் பார்த்து உட்காந்தான்.

"எனக்கொரு கவிதை வேணும்..!'' குரலில் இலேசான கெஞ்சல்.

"கவிதையா...? உனக்கு எதுக்குடா...?''

சட்டெனக் கேட்டாள்.

கனகுவின் முகம் இலேசாய்ச் சிவந்தது.

"நான் ஒரு பொண்ணை விரும்புறேன். அதுக்கு எழுதிக் கொடுக்கணும்..!''

'கொல்'லென வெடித்துச் சிரித்தாள் அஞ்சலி.

"அந்தப் பொண்ணும் உன்னை விரும்புதா...?'' மெல்ல சிரிப்பை அடக்கியபடி கேட்டாள்.

உதட்டை ஈரப்படுத்திக் கொண்டு கனகு சொன்னான்.

"அதைத் தெரிஞ்சுக்கத்தான் கவிதை ஒண்ணு எழுதிக் கொடுக்கணும்..!''

''காதலிச்சா கவிதைதான் எழுதிக் கொடுக்கணும்னு உனக்கு யார்டா சொன்னா...? பேசாம நேர்ல அந்தப் பொண்ணைப் பாத்து உன் மனசில இருக்கிறதைச் சொல்லிடு...!'' என்றாள்.

"அய்யய்யோ... ஒன்னெ மாதிரி எனக்குத் தைரியம் கிடையாதுடீ. முடிஞ்சா எழுதிக் கொடு. இல்லாட்டி நா வேற ஆளைப் பாத்துக்கிறேன்..''

கனகு சொல்லிவிட்டுப் போய் வெகு நேரம் ஆன பிறகும் அஞ்சலியால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

ஆறு மாதம் கடந்திருக்கும்.

திடீரென ஒரு நாள் நினைவு வர, கனகுவிடம் கேட்டாள்.

"ஏன்டா... உன் காதல் எந்த அள்வுல இருக்கு?''

''அவளுக்குக் கல்யாணமாயிடுச்சு...!'' என்றான். குரல் கம்மியது.

அஞ்சலிக்கு தர்மசங்கடமாகிவிட்டது.

"டேய்.... கனகு. என்னடா சொல்ற...?''

"ஆமா, திடீர்னு அந்தப் பொண்ணை அவுங்க மாமா பையனுக்குக் கட்டி வச்சுட்டாங்களாம். ஒரு நா கம்பெனிக்கு வந்து அழுதுகிட்டே சொல்லுது..'' கண்களில் ஈரம்.

"காதல் காதல் காதல்

காதல் போயின் இன்னொரு காதல்..'' என்றாள் அஞ்சலி.

"சொல்லுவே, சொல்லுவே. காதலிச்சா தான் அதோட அருமை உனக்குத் தெரியும்...! நீதான் எப்பப் பார்த்தாலும் படிச்சுக்கிட்டே இருக்கியே, உனக்கு எங்கெ காதலிக்க நேரமிருக்கப் போவுது...?''

குழந்தையைப் போல் தேம்பியபடி சொன்னான்.

"ஹலோ... ரொம்ப ஃபீல் பண்ணி சாபமெல்லாம் கொடுக்காதீங்க. இனிமேயாச்சும் யார்ட்டேயும் கவிதையெல்லாம் கொடுக்காம மனந்திறந்து பேசுங்க... ம்ம்..!''

சொல்லிவிட்டு அவன் கன்னத்தைத் தட்டினாள் அஞ்சலி.

நினைக்க நினைக்க கனகுவின் முகம் மட்டுமே திரும்பத் திரும்ப வந்தது. சிறு வயதிலிருந்து இன்று வரை நட்பு என்றாலே, கனகுவைத் தவிர நெருக்கமாய் வேறு யாரும் இல்லைதான்.

ஐந்தாவது வரை ராணி, எட்டாவதில் பிருந்தா, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் மணிமேகலை, என ஒவ்வொரு காலத்திற்கு

"உங்க மந்திரி பதவி பறி போனதுக்கு எது காரணம்னு நினைக்கறீங்க?''

"வேற என்ன, மந்திரியா இருந்ததுதான் காரணம்!''

- அம்பை தேவா

ஒவ்வொருவர் நண்பர்களாக இருந்துள்ளார்கள். ஆனால், காலங்காலமாய்த் தொடர்கிற மாதிரியான பிரியமோ, நெருக்கமோ யாரிடமும் கிட்டியதில்லை.

பெண்களின் நட்பு எப்போதும் வாழ்வில் முக்கியத்துவம் இல்லாத ஒன்றாக அமைந்து போவது மட்டும் ஏன், என்கிற கேள்வி அஞ்சலியின் மனத்தில் இருந்தது.

நட்புக்கென்று முக்கியத்துவம் தரமுடியாமல் போகிற வாழ்க்கைச் சூழலா, யாருடன் பழகலாம், பழகக் கூடாது என்பதெல்லாம் சமூகம் பார்க்கிற பார்வையிலிருந்து உணர்ந்து கொள்கிற விஷயமாய் இருப்பதாலா, எந்த உறவுமே திருமணத்திற்குப் பிறகு பெண்ணிற்கு இரண்டாம்பட்சம் தான் என்கிற சமூக நிர்ப்பந்தமா.. எது காரணமாயிருக்குமென பலமுறை யோசித்திருக்கிறாள்.

ஊருக்குப் போனால் கனகுவைப் பார்த்துச் சொல்லலாம்தான். ஆனால், தகித்துக் கொண்டிருக்கிற இந்த மனசின் தவிப்பை உடனே தணித்துக் கொள்ள யாரிடம் சொல்வது...? நடுவானில் சிறகுகள் படபடக்க நின்ற அவளுக்குத் திசையேதுமில்லை. தனித்தீவுக்குள் தள்ளப்பட்டவளாகத் தன்னை உணர்ந்தாள் அஞ்சலி.

சுந்தரை தினமும் பார்ப்பது, பேசுவது என்றிருப்பது அவளுக்குப் புதிய உற்சாகத்தைத் தருவதாயிருந்தாலும், தன் முதுகுக்குப் பின்னே நடக்கும் சிறுசிறு சம்பவ மாற்றங்களை மெல்ல உணர ஆரம்பித்தாள்.

கடந்து போகிற அவளின் காலடி ஓசையைத் தொடர்ந்து, நான்கைந்து வாய்கள் மெல்ல முணுமுணுப்பதும், சுந்தரோடு அவள் பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்காதது போல் விரைந்து சென்று, பின் சாடை



யாய் ஜோடிக் கண்கள் திரும்பிப் பார்த்து புருவம் உயர்த்திப் போவதையும் அறிந்தாள்.

பேருந்தில் இவளோடு எப்போதும் இயல்பாய்ச் சிரித்து பேசும் பலரும் இப்போது முகம் சூம்பிக் கிடந்தார்கள். எதேச்சையாய் இவள் பேசும்படி நேர்ந்தாலும், ஒரு வரி பதிலோடு விலகிக் கொண்டார்கள்.

'சுந்தரோடு நான் பேசுவதும், பழகுவதும் இவர்களுக்கேன் பிடிக்காமல் போனது...?'

மன இருட்டுக்குள் ஒற்றை மெழுகுவர்த்தி காற்றின் திசையில் மெல்ல அசைந்தசைந்தது ஆடியது.

**வி**யர்வை கசகசப்போடு அறைக்குள் நுழைந்தாள் அஞ்சலி. கைப்பையை மேசை மேல் வைத்துவிட்டு, உள்ளறைக்குள் சென்று நைட்டிக்கு மாறினாள்.

கதவு தட்டும் ஓசை.

திறந்தாள்.

சித்தப்பாவின் மாமனார் நின்றிருந்தார். இவள் தங்கியிருக்கும் வீட்டின் உரிமையாளர்.

"வாங்க... தாத்தா!" என்றாள்.

"வர்றேம்மா..." என்றவர், உள்ளே வந்து நாற்காலியில் உட்கார்ந்தார்.

மெல்ல யோசனையோடு நிமிர்ந்தவர்.

"ஏம்மா... நீ ஒரு வயசுப் பொண்ணு. உங்க அப்பா - அம்மா எங்களை நம்பி உன்னை விட்டுட்டுப் போயிருக்காங்க. அடிக்கடி உன்னைப் பார்க்க ஒரு பையன் வர்றான். இதெல்லாம் அவ்வளவு நல்லதா படலே. நீ ரொம்ப நல்ல பொண்ணா இருக்கலாம். ஆனா, பக்கத்து வீடுகள்ல ஒரு மாதிரி பேசறாங்களே..!" பெரியவர் தயங்கித் தயங்கி சொன்னார்.

உறுதியான குரலில் பேசத் தொடங்கினாள் அஞ்சலி.

"தாத்தா... உங்களுக்கு எந்தக் கவலையும் வேண்டாம். என்னைத் தேடி இங்க வர்றவரு வேற யாருமில்லே... நான் திருமணம் செஞ்சுக்கப் போறவரு. இதுக்கு எங்க அப்பா, அம்மாவும் சம்மதம் சொல்லிட்டாங்க. வர்ற கோடை விடுமுறையில எங்க திருமணம் நடக்கப் போகுது. வேணும்னா பக்கத்து வீடுகள்ல உள்ளவங்களுக்கு இப்பவே அட்வான்ஸா பத்திரிகை கொடுத்துடலாம்... என்ன...?"

கிணற்றுக்குள் 'பொத்'தென்று வெறும் வாளி விழுகிற சப்தம்.

(தொடரும்)


ஜில்லு மல்லு
—கதிர்
பிரௌசிங் போறேன்— வரியா?
பிரௌசிங்னு, சொல்லிக்கிட்டு நீங்க பண்ற ரௌசிங் தாங்கல.
பிரௌசிங் பத்தி உனக்கு என்ன தெரியும்?
ஆமா. பக்கத்துத் தெருவிலே இருக்கறவனுக்கு நாலு தெரு தள்ளியிருக்கிற பிரௌசிங் சென்டருக்குப் போய் மெயில் அனுப்பறதுதானே?
என்கூட 'சேட்' பண்ணப் பிடிச்சிருக்கானு பிளேடு போடுவாங்க.
அப்படிப் போடு அருவாள
சைபர் அறிவுல நீ சைபர் ஆச்சே!
நிறை குடம் என்னிக்குமே தளும்பாதும்மா.
நீதான் பீப்பாயாச்சே!
முதல்ல தண்ணியிருக்கான்னு பார்றா!
இது பானை!
இது மல்லு!!

வீட்டின் அழகு கதவில் தெரியும் !


Now Flat Buyers insist on

# MAYURAM

## TIMBER DOORS



because




Contact:

**MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.**

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎:236 8297/238 1281.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎: 434 5207

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

சமையல் அறையில் **மாமிஸ்** மசாலா வின் சாம்ராஜ்யம்





மஞ்சள் தூள்
மிளகாய் தூள்
மல்லித் தூள்
குழம்புத் தூள்
சீரகத் தூள்
சாம்பார் பொடி
ரசப் பொடி
மிளகுப் பொடி
பருப்பு பொடி
கறி மசால் பொடி
இட்லி மிளகாய் பொடி
லெமன் சாதப் பொடி
மீன் மசாலா
மட்டன் மசாலா
சிக்கன் மசாலா
பிரியாணி மசாலா
கரம் மசாலா
மாஸ்டர் மசாலா
சில்லி சிக்கன் (65) மசாலா
கேசரி மிக்ஸ்
பாயசம் மிக்ஸ்,
பஜ்ஜி போண்டா மிக்ஸ்

**மாமி புட்ஸ் (பி) லிட்.,**

H.O : (New No)164, புல்லவக்கோட்டை ரோடு, விருதுநகர் 626 001.Ph.: (04562) 267838, 243601, Fax: 244168, B.O : 2 / 1,சக்கரபாணி தெரு,
மேற்கு மாம்பலம், ரயில்வே லைன் அருகில், சென்னை 33. ph.: (044) 24724500, E-mail:mail@maamis.com.Visit : www.maamis.com

SITA - 2024